விலை ரூபா 25.00

சிறைக்கு அஞ்சவில்லை - ஸ்ராலின்



பக்கம் 08

திருகோண மலையில் டெங்கு ஒழிப்பு



பக்கம் 15

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னாள் புலிகளும் போட்டியிடலாம்



பக்கம் 17

சம்பியனானார் பெடரர்



பக்கம் 23

www.onlineuthayan.com

★ பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 227

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## கிளிநொச்சி விபத்தில் வயோதிபர் சாவு

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி - பரந்தன் ஏ-9 வீதியில் நேற்றுத் திங்கள்கிழமை அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி, முள்ளியானைச் சேர்ந்த சோமசுந்தரம் சின்னராசா (வயது-57) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த கருவாட்டு வியாபாரியான இந்த முதியவரைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று மோதியுள்ளது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் 04

## மு.கா. இன்று இறுதி முடிவு

கொழும்பு, ஜூலை 10

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது அரசிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் இன்று கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் அவசரமாகக் கூடுகின்றது.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இன்றிரவு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து உயர்பீட உறுப்பினர்களுக்கும் நேற்று அவசர அவசரமாக அழைப்பு விடுக்கப்பட்டது.

முன்னதாக இந்தக் கூட்டம் அடுத்த வாரமே நடைபெறவிருந்தது. என்ற போதிலும் வேட்பாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வியூகங்களை வகுக்க வேண்டியிருப்ப 04

## யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ள பிரிட்டன் ஆர்வம்

### நேற்று நேரில் ஆராய்ந்தார் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.மாவட்டம் தற்போது முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதற்கான உதவிகளை வழங்குவதிலும் புதிய முதலீடுகளை இங்கு மேற்கொள்வதிலுமே பிரிட்டன் தூதுவர் 04



## அரசைக் கவிழ்ப்பதற்கு மக்கள் போராட்டங்கள்

### அழைக்கிறார் பொன்சேகா



கொழும்பு, ஜூலை 10

ஜனநாயக வழிமுறைகளில் அரசைக் கவிழ்க்க மக்களின் ஒத்துழைப்புடன் போராட்டங்கள் நடத்தப்படும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அரேபியாவில் இடம்பெற்ற அரசஎதிர்ப்புக் கிளர்ச்சியை போன்று 04

# பஸிலை அவசரமாக அழைக்கிறது டில்லி

### இனப்பிரச்சினைக்கான தீர்வின் தேக்கநிலை குறித்து ஆராய

கொழும்பு, ஜூலை 10

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதில் காணப்படும் தேக்கநிலை, தாமதங்கள் குறித்தும், அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராய்வதற்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு வருமாறு இந்திய மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இந்தியாவின் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள அமைச்சர் பஸில் பெரும்பாலும் அடுத்து வரும் வாரங்களில் இந்தியா பயணமாவார் எனப் பொருளாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசின் நிலைப்பாடு குறித்து முழுமையாக அறிந்து கொள்ளும் நோக்கிலேயே இந்தியா அமைச்சர் பஸிலுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் 04

## அடுத்த ஜெனிவா மாநாட்டில் மஹிந்த அரசுக்கு மரணப் பொறி

### கைதியின் கொலை காரணம் என்கிறது ஐக்கிய சோஷலிஸக் கட்சி

கொழும்பு, ஜூலை 10

அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ள நிமலரூபனின் மரணம் அடுத்த ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு மரணப் பொறியாக மாறும் என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

நிமலரூபனின் சடலத்தை அவரின் பெற்றோரிடம் 04

## ஐ.நா. அமைதிப்படை மூலம் ரூபா 18.4 பில்லியன் வருமானம்

கொழும்பு, ஜூலை 10

ஐ.நா. அமைதிப்படைக்குத் தமது படையினரை அனுப்பியதன் மூலம் இலங்கை இதுவரை 18.4 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை 2004 ஆம்ஆண்டுதொடக் 04

## தெரிவுக்குழுவில் கூட்டமைப்புக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை

### அரசின் பூச்சாண்டித்தனம் என்கிறார் சுரேஷ்

கொழும்பு, ஜூலை 10

அரசியல் தீர்வை எட்டுவதற்காக அரசு அமைக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எள்ளளவேனும் நம்பிக்கையில்லை. இது அரசின் வெறும் பூச்சாண்டித்தனம். சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடுவதில் அமைச்சர் கெஹலிய வல்லவர் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்கும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் தெரிவித்திருந்தார். இது குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்ட போதே அவர் 04



## முஸ்லிம் அமைப்புகள் சம்பந்தனுடன் பேச்சு

### கிழக்குத் தேர்தலில் ஒன்றிணைவது குறித்து

மட்டக்களப்பு, ஜூலை 10

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறது.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சூறா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.பி.எம். பிர்தௌஸ் (நழீமி), காத்தான் 04

## விதிமுறைகளை மீறும் வேட்பாளரின் புகைப்படங்களை பிரசுரிக்க அனுமதி

### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

தேர்தல் விதிகளை மீறும் வேட்பாளர்களின் புகைப்படங்களை ஊடகங்களில் பிரசுரித்து விளம்பரப்படுத்தும் அனுமதியை அனைத்து ஊடகங்களுக்கும் வழங்க தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெறவிருக்கும் சூழ்நிலையிலேயே இந்த அதிரடி முடிவைத் தேர்தல்கள் திணைக்களம் எடுத்துள்ளது.

தேர்தல் வேளைகளில் இடம்பெறும் அசம்பாவிதங்கள், சட்டவிரோத நடவடிக்கைகள், 04

## தமிழர்களை அரசு உதாசீனம் செய்வதாலேயே இலங்கை - இந்திய உறவுகளில் விரிசல் நிலை

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 10

வடக்கு வாழ் தமிழ் மக்களின் மனிதாபிமான வாழ்வாதாரப் பிரச்சினைகளை மஹிந்த அரசு உதாசீனப்படுத்தி இருப்பதாலேயே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் பெரிதும் விரிசலடைந்து வருகின்றன.

அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சாதாரண உல்லாசப் பிரயாணிகள் கூடத் தமிழகத்துக்குச் செல்ல முடியாத [illegible] ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரான கயந்த கருணாதிலக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

[illegible] தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணி வடக்கில் 98 வீதம் பூர்த்தியாம்

கொழும்பு, ஜூலை 10

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் 98 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

எஞ்சியுள்ள பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது துரிதப்படுத்தியுள்ளதாக அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவடைந்ததும் மக்கள் மீள்குடியேற்றப்படுவர் என வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி செயலாளர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு கிராம சேவகர் பிரிவுகளிலும் கண்ணிவெடி அகற்ற வேண்டியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் அரசின் ஆலோசனையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. (த)

# பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள்

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் அதிகரித்து வரும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தக் குற்றவாளிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கை கவனம் செலுத்தியுள்ளது.

புதிய சட்ட ஏற்பாடுகள் குறித்து நீதி அமைச்சுடன் பேச்சு இடம்பெற்று வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பதில் செயலாளர் அசோக அலவத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக்காக 1998ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தண்டனைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துச் செல்லும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஒரே வழி, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்குதலாகும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2012ஆம் ஆண்டில் இதுவரை 20,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் பதிவாகியுள்ளன.

இதேவேளை, பாலியல் குற்றம் சுமத்தப்படுபவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் அடிப்படையில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 975 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (த)

# தூக்குத் தண்டனை நிறைவேற்றும் பணிக்கு 11ஆம் திகதி ஆள்சேர்ப்பு

கொழும்பு,ஜூலை 10

இலங்கைச் சிறைச்சாலை திணைக்களத்தில் வெற்றிடங்களாகவுள்ள தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் இரண்டு பணியாளர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடக்கவிருப்பதாக சிறைச்சாலைகள் ஆணை+யாளர் பீ.டப்ளியூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிக்காக 150 பேர் விண்ணப்பத்துள்ளனர். இந்த விண்ணப்பதாரிகளில் இரண்டு பேர் தெரிவு செய்யப்பட உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைச் சிறையில் 200இற்கும் மேற்பட்ட தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் இருப்பதுடன் அவர்களில் பலர் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர். (த)

# ஜனாதிபதி பயணிக்கும் விமான நடைபாதையிலும் கையாள்கள்

## மக்களின் வரிப்பணம் இப்படி வீணாகிறது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு செல்லும் விசேட விமானங்களில், ஜனாதிபதியின் கையாள்கள் நடைபாதையிலும் அமர்ந்து செல்கின்றனர். அவ்வளவு பெரிய கூட்டம். இந்த வெளிநாட்டுப் பயணங்களுக்காக மக்களின் வரிப்பணம் கோடி கோடியாகச் செலவிடப்படுகின்றது. ஆனால் மக்களின் அத்தியவசியத் தேவைகளுக்குப் பணம் இல்லை என்று கைவிரிக்கின்றது அரசு என சுட்டிக்காட்டியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

வாழ்க்கைச் செலவும், விலைவாசி உயர்வும் மக்களை வறுமைக்கோட்டுக்கு தள்ளியுள்ளது. மக்கள் மீது பெரும் சுமைகள் ஏற்றப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உலக நாடுகளில் எண்ணெய் விலை குறையும் போது இங்கே எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என்று எரிபொருள் துறை அமைச்சர் நாடாளுமன்றில் கூறினார். அதற்கு மூன்று நிபந்தனைகளையும் விதித்தார்-

* ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் முடிய வேண்டும்.
* மசகு எண்ணெயின் விலை தொடர்ச்சியாக 5 வாரங்களாவது வீழ்ச்சியடைய வேண்டும்.
* மசகு எண்ணெயின் விலை 100 டொலருக்கு குறையவேண்டும் என்று கூறினார். இப்போது ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் பல மாதங்களுக்கு முன்பே தீர்ந்து விட்டது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து ஏழு வாரங்களாக வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

கடந்த வாரம் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 98 டொலராக குறைந்துள்ளது. உலக சந்தையில் விலை குறைந்தால் இங்கு எரிபொருள்களின் விலையைக் குறைப்போம் என்று கூறிய அரசு எரிபொருள்களின் விலையை மும்மடங்கு அதிகரித்துள்ளது.

எரிபொருள்களுடன் உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளதால் அதனை ஈடுசெய்வதற்காக மின்சார சபை பாவனையாளர்களிடம் இருந்து மேலதிக கட்டணத்தையும் வசூலித்தது. ஆனால் இன்னும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவையில் ஒரு சதம் கூட செலுத்தப்படவில்லை.

ஆனால் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு பல கோடி ரூபாய்களை அரசு வீண்விரயம் செய்கின்றது. இதனை நாம் தொடர்ந்து அனுமதிக்கப் போவதில்லை. மக்கள் பலத்துடன் இந்த அரசை அனுப்புவோம் -என்றார். (த-2)

# இலங்கையர் இருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

இலங்கையரான சமீர சந்திரசேன என்பவரின் கொலை வழக்கில் இலங்கையைச் சேர்ந்த இரு ஆண்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் லண்டன் ஒக்ஸ்போர்ட்டில் டொமெய்ன் வீதியில் எரிந்த வாடகை வீடொன்றிலிருந்து 28 வயதான சமீர சந்திரசேன என்பவரின்சடலம்கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இலங்கையைச் சேர்ந்தவரான சமீர சந்திரசேன, தீ பரவ முன்னர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் உயிரிழந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையின் மூலம் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துவன் பிரவோஷ் சவால் (வயது 23), வீராஜ் அழகக்கோன் (வயது -33) ஆகிய இருவரும் கொலை மற்றும் தீ வைப்புக்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் இருவரும் வெள்ளிக்கிழமை கிறிஸ்சேர்ச் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (த)

# 6 பாடசாலை மாணவிகளை ஹற்றனில் காணவில்லை

கண்டி, ஜூலை 10

ஹற்றனில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றின் மாணவிகள் ஆறு பேர் காணாமல் போயுள்ளனர் என்று ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் விடுதியில் தங்கியிருந்து 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவிகளே காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் நுவரெலியா மற்றும் கினிகத்தேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

காணாமல் போன மாணவிகள் நேற்றுக் காலை 5 மணிக்கு ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# மாணவியைக் காட்டுக்குள் கடத்தி வன்புணர்வு செய்ய முயன்ற சிப்பாய்

## மடக்கிப் பிடித்தனர் பொது மக்கள்

பொலனறுவை, ஜூலை 10

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவியொருவரை வழிமறித்து காட்டுப் பகுதிக்கு இழுத்துச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர், அந்த மாணவியைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த வேளை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர பிரதேசக் காட்டுப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் போது அந்த வழியாகச் சென்ற பஸ்ஸில் பயணித்த

அந்த வழியாகச் சென்ற பஸ்ஸில் பயணித்த பயணிகளே சம்பவத்தை நேரில் கண்டுள்ளனர்.

பயணிகளே சம்பவத்தை நேரில் கண்டு சந்தேகநபரை மடக்கிப் பிடித்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

குறித்த மாணவி, சைக்கிளொன்றில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது அவரது சைக்கிளை மோதி மாணவியை கீழே விழுத்தியுள்ள சந்தேகநபர் பின்னர் அவரைக் காட்டுக்குள் இழுத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் சந்தேகநபர் வெலிகந்த இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவி, தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(த)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

அச்சுவேலி, ஜூலை 10

பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் கன்னாரை அம்மன் ஆலயப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

புத்தூர் சந்தையில் வியாபாரம் மேற்கொண்டு விட்டுச் சென்று கொண்டிருந்த 'படி' ரக வாகனமும் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸுமே விபத்துக்குள்ளாகின.

இதில் 'படி' ரக வாகனச் சாரதியான அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த குணதாஸ் திவாகரன் (வயது 22) என்பவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க் கப்பட்டார். அங்கிருந்து யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த இ.போ.ச. பஸ் சாரதி அச்சுவேலிப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இரண்டு வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-11-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்புக்காக சென்றச் சுகாதார பரிசோதகர் கொலை

## தம்பலகாமத்தில் சம்பவம்

திருகோணமலை,ஜூலை 10

டெங்கு ஒழிப்புக்காக வீடொன்றைப் பரிசோதிப்பதற்குச் சென்ற தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் நேற்று திங்கள் கிழமை காலை அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பொதுச் சுகாதார பரிசோதகர் சிராஜ் நகர் கிராம அலுவலகப் பிரிவுக்குப் பொறுப்பான முகமட் பளீல் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரைத் தாக்கிய சந்தேகநபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படுகின்றது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வாயில் கதவைத் திறக்குமாறு கூறியதும் சந்தேக நபர் கதவை திறந்ததாகவும் இதன் பின்னர் சந்தேக நபர் பரிசோதகரைக் கடுமையாகத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(த)

# இலங்கையில் சிறந்த விவசாயியாக மன்னார் மாவட்ட விவசாயி தெரிவு

## பெருமையளிக்கிறது என்கிறார் விவசாய அபிவிருத்தி அமைச்சர்

*யாழ்ப்பாணம்,ஜூலை 10*

*இலங்கையின் சிறந்த விவசாயியாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை நினைத்து நான் மிகவும் பெருமையடைகிறேன்.*



இவ்வாறு விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய அரசின் நிதி உதவியில் இலங்கைக்கு 896 இரு சக்கர உழவு இயந்திரங்கள் '2கே. ஆர்-2010' திட்டத்தில் வழங்கப்பட்டன. அதில் வடமாகாணத்துக்கு 365 இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அவற்றைக் கையளிக்கும் நிகழ்வு புத்தூர் கமநல சேவைத் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்டத்துக்கு 70, கிளிநொச்சி மாவட்டத்துக்கு 65, வவுனியா மாவட்டத்துக்கு 80, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தலா 75 வீதம் இரு சக்கர உழவு இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொகி புட்டோ கோபோ, ஜெய்கா நிறுவன அதிகாரி பக்ஷியோ ரப்கோ, யாழ்.மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் ம.பற்றிக் நிறஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜப்பானிய அரசால் எமக்குப் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 45 சதவீதமான உதவிகள் வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

நான் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில் கிளிநொச்சி, பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் தலைவராக இருந்துள்ளேன். இருப்பினும் என்னால் தமிழில் உரையாற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். நேற்று இரவு (நேற்று முன்தினம்) கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கையின் சிறந்த விவசாயியாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி தெரிவு செய்யப்பட்டிருந்தார். சமாதானம் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவே இலக்கை எட்ட முடிந்துள்ளது. இதேபோன்று யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பிரதேசங்களும் முன்னேறி வருகின்றன என்று தெரிவித்தார். (ம-5)

### தங்கி நின்றவர் திருடிச் சென்றார்

*யாழ்ப்பாணம்,ஜூலை 10*

உறவினர் வீடு ஒன்றில் உதவி கேட்டு தங்கிய குடும்ப பெண் ஒருவர் வீட்டுக்காரர் வெளியே சென்ற சமயம் அங்கு இருந்த தங்க நகைகளை மிகவும் தந்திரமாக சுருட்டிக் கொண்டு தலைமறைவானார்.

இந்தச் சம்பவம் சுதுமலையில் உள்ள என்.நாகேந்திரம் என்பவரது வீட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

முல்லைத்தீவில் இருந்து வந்த பெண் ஒருவர் தனது உறவினர் வீட்டில் உதவி கேட்டு தங்கி நின்றார்.

சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர் வெளியில் கடை ஒன்றுக்குப் பொருள்களை வாங்கச் சென்று விட்டு மீண்டும் வீடு திரும்பிய சமயம் வீட்டில் தங்கி நின்ற பெண்ணை காணாது திகைத்தனர்.

பின்னர் வீட்டில் அலுமாரி திறக்கப்பட்டிருந்ததை அவதானித்துப் பார்த்த போது அங்கிருந்த தங்க நகைகள் காணாமல் போயிருந்தமை தெரிய வந்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். (ம-17)

### வறுமைக் குறைப்பு திட்டத்தில் ஒன்பது வீதிகள் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.மாவட்டத்தில் ஜப்பானிய வறுமை குறைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 9 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விரைவில் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையின் கீழ் ஜப்பானிய நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி இடம்பெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி கடாப்புலம் வீதி, வேலணை ஐயனார் வீதி, கரம்பகம்- பூங்கிணற்றடி வீதி, எழுதுமட்டுவாழ் தெற்கு - காலைப்பள்ளி வீதி, எழுதுமட்டுவாழ்- கரம்பகம் கிளாலி இணைப்பு வீதி, அரியாலை - அரசடி வீதி, புத்தூர் மேற்கு- கின்சித்தி வீதி, புத்தூர் மேற்கு- ஆலடி முருகன் வீதி, புத்தூர் மேற்கு - கருமாரி அம்மன் வீதி என்பனவே இந்தத் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன.

இதற்கான மதிப்பீடுகளின் பிரகாரம் வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

கிராமிய மட்ட நிறுவனங்கள் இந்த வீதி அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-50)

## பரு.- யாழ்ப்பாண பிரதான வீதி புனரமைப்பு மீண்டும் ஆரம்பம்

வடமராட்சி,ஜூலை 10

வடமராட்சி பிரதேசத்தில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிக்கும் பணி சுமார் ஒன்றரை வருடகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான பிரதான வீதியில் வல்லை தொடக்கம் நெல்லியடிப் பொதுச் சந்தை வரையான வீதி அகலமாக்கப்பட்டு 'காப்பெற்' போடப்பட்டு இருவழிப்பாதை கொண்ட வீதியாக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொதுச் சந்தை தொடக்கம், பருத்தித்துறை வீதியில் நகர நுழைவாயில் வரையான பகுதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது.

நெல்லியடி நகர பருத்தித்துறை வீதி நுழைவாயிலில் தொடக்கம் மாலிசந்தி வரையிலான வீதி அகலமாக்கப்பட்ட போதிலும் அந்த வீதிக்கு இன்னமும் 'காப்பெற்' போடப்படவில்லை.

இலகடி தொடக்கம் மந்திகை சிலையடி வரையிலான வீதியும் அகலமாக்கப்பட்டுள்ள போதும் அந்த வீதிக்கும் 'காப்பெற்' போடப்படவில்லை. (ம-8)

## கிணற்றை இறைக்க வந்தது கைக்குண்டு

தென்மராட்சி, ஜூலை10

கிணறு இறைக்கும் போது கைக்குண்டுகளும் 50 கலிபர் ரவைகளும் வெளிவந்தன.

எழுதுமட்டுவாழ் தெற்கில் மீளக்குடியமர்வு இடம்பெற்ற குடியிருப்பு காணி ஒன்றில் காணப்பட்ட கிணறு நேற்று இறைக்கப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்ட போது அங்கிருந்த கைக்குண்டுகளும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக வெடி பொருள்கள் அகற்றும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த பிரிவினர் கிணற்றுக்குள் இறங்கி சோதனை நடத்தி வெடிக்காத நிலையில் 4 கைக்குண்டுகளையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட 50 கலிபர் துப்பாக்கி ரவைகளையும் மீட்டெடுத்தனர்.

இந்தப் பகுதி பத்து வருடங்களாகப் படையினர் கட்டுப்பாட்டில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

### ஆபத்தை விளைவிக்கும் மதகுகள்

வலி.வடக்கு, ஜூலை 10

யாழ்ப்பாணத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படாமையால் மக்கள் பாதிப்படையும் நிலைமைகள் அதிகரித்துள்ளன.

வீதி அகலிப்புப் பணிகளுக்காக வீதிகளில் அமைந்துள்ள மதகுகளும் கூட உடைக்கப்பட்டு மீள நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மீள நிர்மாணிக்கப்படும் மதகுகளுக்கு வெட்டப்பட்ட கிடங்குகள் போதிய பாதுகாப்பு இன்றிக் காணப்படுகின்றன. இந்த நிலையில் இரவு வேளைகளில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பகுதிகளை அடையாளம் காணக்கூடிய வகையில் விளக்குகள் மற்றும் மின் குமிழ்கள் பொருத்தி பாதுகாப்பு செய்யப்படாத நிலைமை சில இடங்களில் இன்றும் தொடர்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் சைக்கிள் மற்றும் வாகனங்களில் பயணம் செய்வோர் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் காங்கேசன்துறை வீதியில் உள்ள மதகுப் பள்ளங்களில் வீழ்ந்து சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மூவர் காயங்களுக்கு ஆளாகியிருந்தனர்.

இதேபோன்று கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் சட்டநாதர் ஆலய வீதியில் உள்ள மதகுப பள்ளத்தில் வீழ்ந்த ஒருவர் படுகாயங்களுக்கு ஆளாகிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமை குறித்து உரியவர்கள் ஏன் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-86)

## உரிய முறையில் அமைக்கப்படாத கொள்கலன்



கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கழிவுப் பொருள்களை கொட்டுவதற்கான கொள்கலன் உரிய முறையில் அமைக்கப்படவில்லை என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கழிவுப் பொருள்களை கொட்டும் இந்தக் கொள்கலனின் தகரங்கள் சரிந்து விழுந்ததால் அவற்றில் உள்ள கழிவுகளை பறவைகள் மற்றும் கால்நடைகள் இழுத்து வீதிக்கு விடுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கழிவுகளைக் கால்நடைகள் தமது உணவுக்கு பயன்படுத்துவதால் அவை நோய்த் தாக்கத்துக்கும் இலக்காகும் நிலைமையும் காணப்படுகிறது.

இந்தக் கழிவுப் பொருள்களை அகற்றவும் மற்றும் கொள்கலனை உரிய முறையில் சீர்செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

### சுயதொழில் கடனுக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 10

முன்னாள் போராளிகளின் சுயதொழில் வாய்ப்புக்கான கடன் உதவிகளைப் பெறவுள்ள போராளிகளுக்கு அதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளரின் இந்தக் கடன் உதவியைப் பெறத் தகுதியுள்ளவர்கள் இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ள முடியும்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட முன்னாள் போராளிகள் தங்கள் பெயர் விவரங்களை நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சை 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7-9)

## கஸ்தூரியார் வீதிக்கும் காப்பெற்



*கொழும்புத்துறை, ஜூலை 10*

*யாழ். நகரப் பகுதி வீதிகளை 'காப்பெற்' வீதிகளாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை துரிதப்படுத்தியுள்ளது.*

*யாழ். கஸ்தூரியார் வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் வின்சர் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி வீதியை 'காப்பெற்' ஆக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அந்த வீதியுடன் தொடர்புடைய வீதிகளின் போக்குவரத்துக்கள் மூடப்பட்டு நேற்றுமுன்தினம் காலை முதல் இரவு வரை பணிகள் இடம்பெற்றன. ஒரு வழிப்பாதையான இந்த வீதியின் இரு மருங்கும் ஏற்கனவே அகலிப்புச் செய்யப்பட்டிருந்தன.*

*இந்த வீதியைத் தொடர்ந்து மின்சார நிலையவீதி மணிக்கூட்டு வீதி ஆகியவற்றுக்கும் 'காப்பெற்' போடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-135)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாலியல் வல்லுறவு; துஷ்பிரயோகம்

# ஈரான் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை

ஆசிய நாடாளுமன்ற அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவென சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா நேற்று மாலை ஈரான் பயணமானார். இரு தினங்களுக்கு இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. மாநாடு இன்று ஆரம்பமாகின்றது.

இதேவேளை, ஈரானின் மகளிர் விவகார அமைச்சரான உதவி ஜனாதிபதியை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா நாளை உத்தியோகபூர்வமாகச் சந்தித்து முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ளார்.

இலங்கையிலுள்ள விதவைகளின் வாழ்வாதார மேம்பாடு குறித்து இந்தச் சந்திப்பின்போது பேச்சு நடத்தவுள்ள பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, இலங்கையில் அதிகரித்துச் செல்லும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதில் ஈரான் கடைப்பிடிக்கும் சட்டதிட்டங்கள் தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்துகொள்ளவுள்ளார்.

ஈரானில் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த சட்டதிட்டங்களை இலங்கையில் அமுல்படுத்துவது தொடர்பிலும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, ஈரான் உதவி ஜனாதிபதியுடன் இதன்போது கலந்துரையாடவுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...

01↘ அதிக அக்கறை செலுத்தியதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான பிரிட்டன் தூதர் ஜோன் ராங்கின் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் அவர் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

அரச அதிபருடன் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே பிரிட்டன் தூதுவர் வந்திருந்தார்.

விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், சுற்றுலாத்துறை, கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளில் யாழ்.மாவட்டத்தில் எம்மால் செய்யப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அவருக்கு விளக்கமளித்தோம்.

இதில் யாழ்.மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க துறைகள் முன்னேற்றப் பாதையில் செல்வதைக் கவனத்தில் எடுத்த தூதுவர் அந்தத் துறைகளை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தினார்.

சுற்றுலாத்துறை தொடர்பிலும் யாழ்.மாவட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் அதிகளவு அக்கறை காட்டிய அவர் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பிலும் ஆராய்ந்தார்.

அத்துடன் யாழ்.போதனா வைத்திசாலையின் கண் சிகிச்சை, இருதய சிகிச்சை நிலையம் என்பவற்றுக்கான நவீன உபகரணங்கள் தேவை என்பது தொடர்பிலும், வீடமைப்பு வசதிகள் தேவை என்பது தொடர்பிலும் விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புகள் குறித்தும் அவரிடம் எடுத்து விளக்கினோம் - என்றார். (த-5)

## கிளிநொச்சி...

01↘ சடலம் கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டபின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-6)

## பஸிலை அவசரமாக...

01↘ பந்தன் ஆகியோரைச் சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சு நடத்தியிருந்தார்.

அரச தரப்பினருடனான பேச்சின்போது அவர்கள் சில விடயங்களில் விடாப்பிடியாக இருந்ததாகவும் இதனால் இலங்கைக்கான பயணம் பெரிதாக வெற்றியளிக்கவில்லை எனவும் புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன. இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிய மேனன் தனது பயணம் குறித்துத் திருப்தியற்ற நிலை உள்ளதாகவும் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இதனை அடுத்து இனப்பிரச்சினை விடயத்தில் அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக அமைச்சர் பஸிலைப் புதுடில்லிக்கு அழைக்க மத்திய அரசு முடிவு செய்ததாகவும் இதன் அடிப்படையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் மேலும் கூறின.

இந்திய அரசினால் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பை அமைச்சர் பஸில் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஆயினும் புதுடில்லிக்கான பயணத்தை அவர் எப்போது மேற்கொள்வார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனவும் பொருளாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் பஸில் இந்தியா செல்லுமிடத்து இனப்பிரச்சினைக்கான தீர்வு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் ஆகியன குறித்து இந்தியா வற்புறுத்தல்களை மேற்கொள்ளக்கூடும் எனவும் தெரியவருகிறது. (த)

## அரசைக்...

01↘ இலங்கை மக்களும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள், எதிர்க்கட்சி அடக்குமுறை என்பவற்றைத் தடுக்கச் சர்வதேசம் முன்வர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சி நீடித்தால், மனித உரிமைகள் மீறப்பட்டால் மக்களைப் பாதுகாக்கச் சர்வதேச சமூகம் பங்களிப்பை வழங்க வேண்டுமென சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை எனத் தொடர் குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். லிபியாவைப் போன்று இலங்கையில் அசம்பாவிதங்கள் ஏற்படக் கூடாதென்பது தமது வேண்டுதல் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலை பெற்றுள்ள தன்னைப் புலனாய்வுப் பிரிவினர் பின்தொடர்வதாகவும் திருமண விருந்துக்குச் சென்றாலும் கூட புலனாய்வுப்பிரிவினர் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## ஐ.நா. அமைதிப்படை...

01↘ கம் ஐ.நா. அமைதிப்படைக்கு படையினரை அனுப்பி வருகிறது.

தற்போது 1200 இலங்கைப் படையினர் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஐ.நா. சார்பில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.ஹெய்ட்டியில் 1000 பேரும், லெபனானில் 200 பேரும் அமைதிகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை ஐ.நாவின் அவதானிப்பாளர்களாக 8 ஆபிரிக்க நாடுகளில் இலங்கைப் படையினர் பணியாற்றுகின்றனர்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைப் படையினருக்கு ஐ.நா. மூலம் 12.3 பில்லியன் ரூபா ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. இது நேரடியாகவே படையினருக்கு வழங்கப்படுகிறது.

அதேவேளை, இலங்கை அரசுக்கு 5.9 பில்லியன் ரூபாவும் வருமானமாக கிடைத்துள்ளது-என்றார். (த)

## தமிழர்களை...

01↘ டின்போதே அவர் அதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களையும் தாண்டிவிட்டோம் என நாட்டின் பல பாகங்களிலும் வெற்றி விழாக்களைக் கொண்டாடி வருகிறது அரசு. ஆனால் இன்றும் பல இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாகவே தெருவில் விடப்பட்டுள்ளனர். தங்களுடைய சொந்த வீடுகளுக்கும், காணிகளுக்கும் கூட போக முடியவில்லை.

பாரம்பரியமாகத் தாம் வாழ்ந்த காணிகளுக்குச் செல்ல அனுமதிக்கும்படி அந்த மக்கள் உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்த வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. ஜனநாயக ரீதியான போராட்டங்களைக் கூட அரசு அடக்குமுறைச் சட்டம் போட்டுத் தடைசெய்கிறது. வடக்கில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. அராஜகம் தலைவிரித்தாடுகிறது. அடிப்படை மனித உரிமைகள் அப்பட்டமாக மறுக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தலை நடத்த அரசு தயங்குகிறது. வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தினால் நாடு இரண்டாகப் பிரிந்துவிடும். அங்கே நடத்தக் கூடாது என்று சில அமைச்சர்கள் துவேசப் பிரசாரம் செய்கின்றனர். ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுகின்றனர். சிலர் மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை, கண்ணிவெடி அகற்றப்படவில்லை என்கின்றனர்.

மற்றும் சில அமைச்சர்கள் 2013 செப்ரெம்பரில் வட மாகாண சபைக்கான தேர்தல் நடத்துவோம் என்று ஒருவருட அவகாசம் கோருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும், உள்ளூராட்சித் தேர்தலையும் நடத்த முடியும் என்றால், ஏன் மாகாணசபைத் தேர்தலை மட்டும் நடத்த முடியாது?

மஹிந்த அரசு வடபகுதி மக்களை வஞ்சம் தீர்க்கிறது. தொடர்ந்தும் அடிமைகளாகவே வைத்துக்கொள்ள முனைகிறது. இதனைச் சர்வதேச சமூகம் அவதானமாக நோக்குகிறது.

தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வடபகுதி மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றன. இந்திய மத்திய அரசுக்கும் அழுத்தங்கள் அதிகரித்து விட்டன.

தமிழ்நாட்டுக்கு இலங்கை அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சாதாரண உல்லாசப் பிரயாணிகளும் செல்ல முடியாத நிலை.

இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இலங்கை விமானப் படையினருக்கு மட்டுமல்ல எவருக்கும் பயிற்சி வழங்கக் கூடாது என்று போராட்டம் நடத்துகின்றனர்.

இந்த யதார்த்தத்தை மஹிந்த அரசு உணரவேண்டும். வடபகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான நிரந்தரத்தீர்வு ஒன்றைக்காண முன்வர வேண்டும். தவறின் விபரீதமான விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் - என்றார். (த-2)

## மு.கா. இன்று...

01↘ தால் உடனடியாக இந்தக் கூட்டத்தைக் கூட்டி கட்சி அரசுடன் இணைந்தா, தனித்தா போட்டியிடுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும், ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் குறித்தும் இன்றைய கூட்டத்தில் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதெனத் தெரிவிக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டுமென வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## அடுத்த ஜெனிவா...

01↘ ஒப்படைக்காமல் இருப்பதன் மூலம் நாட்டின் மனித உரிமைகளுக்குள்ள மதிப்பை இலகுவில் கணிப்பிட்டுக்கொள்ள முடியும் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கிலக்காகி உயிரிழந்துள்ள தமிழ் அரசியல் கைதி கணேசன் நிமலரூபனின் சடலத்தை அவரின் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு அரசு மறுத்து வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் அவசியம் என ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த வருடம் அரசு மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும் போது அதைச் சர்வதேசம் ஏற்காது. நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்களே இதற்குப் பிரதான காரணமாகும்.

அடுத்து படுகொலை செய்யப்பட்டுள்ள தமிழ்க் கைதி நிமலரூபனின் மரணம்கூட அடுத்த ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு மரணப் பொறியாக மாற்றம் பெறலாம். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு அரசு பதிலளித்தேயாகவேண்டும். இதிலிருந்து விடுபட முடியாது.

இறந்துபோன தனது மகனின் சடலத்தை எடுப்பதற்குக் கூட பெற்றோர் அல்லோலகல்லோலப்படவேண்டிய நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்திய ஆட்சியில் கூட இவ்வாறு நடைபெறாது - என்றார்.

## தெரிவுக்குழுவில்...

01↘ மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேலும் தாமதப்படுத்தும் நோக்குடனேயே இலங்கை அரசு தெரிவுக்குழு யோசனையை முன்வைத்துள்ளது. இது எமக்கு நன்கு தெரியும். தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து கூட்டமைப்பு இதுவரை எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை.

தெரிவுக்குழுவில் எமக்கு எள்ளளவேனும் நம்பிக்கையில்லை. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாத அரசு எவ்வாறு தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வை முன்வைக்கும். அரசின் பூச்சாண்டி விளையாட்டுத்தான் இந்தத் தெரிவுக்குழு - என்றார். (த)

## முஸ்லிம்...

01↘ குடி நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் பொறியியலாளர் அப்துல் ரகுமான், காத்தான்குடி நகரசபை உறுப்பினர் அஷ்ஷெய்க் சபீல் (நழீமி) ஆகியோர் நேற்று தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் இந்தப் பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

திருகோணமலையிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எப்படி ஒற்றுமையாகச் செயற்படுவது, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியற்கட்சிகள் புரிந்துணர்வுடன் செயற்படுவது போன்ற பல முக்கிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், முஸ்லிம் மக்களின் உரிமைகளை அதற்கான நியாயப்பாடுகளைத் தமிழ்க் கூட்டமைப்பு மதிப்பதாகவும், ஆனால் முஸ்லிம் தலைவர்கள் அரசுடன் சேர்ந்து செயற்படும்போது அந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் எவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பினர் இணைந்து செயற்படமுடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

## விதிமுறைகளை மீறும்...

01↘ மோசடிகள் என்பனவற்றைத் தடுத்து நிறுத்தும் அடிப்படையிலேயே மேற்படி தீர்மானத்தைத் திணைக்களம் எடுக்கவுள்ளது.

படையில் வேட்பாளர்கள் எவரேனும் தேர்தல் விதிமுறைகளுக்கு மாற்றமாக செயற்படுவார்களாயின், அவர்களது முழு விவரங்களும் அவர்களின் புகைப்படத்துடன் ஊடகங்களில் பிரசுரிக்கப்படவுள்ளன.

அதேவேளை, கிழக்கு, வடமத்தி மற்றும் சப்ரகமுவ மாகாணசபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள சூழ்நிலையில், அம்பாறை மாவட்டத்தில் 3 சுயேச்சைக் குழுக்கள் நேற்றுவரை கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன எனத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல்களுக்கு அடிபணியோம் கிழக்கில் போட்டியிட்டே தீருவோம்

## கூட்டமைப்பு சூளுரை

மட்டக்களப்பு, ஜூலை10

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது போட்டியிட்டே தீரும் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

வேட்புமனுக்களை தாக் கல் செய்த பின்னர்தான் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படவுள்ள முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதைத் தமது கட்சி அறிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்குத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. இந்த நேரத்தில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடக்கூடும் எனக் கருதி எமது உறுப்பினர்களை சிலர் அச்சுறுத்தி வருகின்றனர்.

இந்த அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம். எமது உறுப்பினர்கள் விஷமிகளின் மிரட்டல்களைக் கண்டு ஒதுங்கமாட்டார்கள். அவர்கள் ஆர்வத்துடன் மக்களின் விருப்புக்கமைய கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவார்கள்.

அண்மையில் நடை பெற்ற எமது கூட்டுக்கட்சிகளின் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட வேட்பாளர்கள் தயாராக உள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டமைப்பு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளது - என்றார். (ச)

### கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

# கூட்டமைப்பை ஆதரிப்பதில் திருமலை மக்கள் ஆர்வம்

திருகோணமலை, ஜூலை 10

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதில் திருகோணமலை மாவட்ட மக்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதிலும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும் அதிக ஈடுபாடு காட்டி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தாங்கள் ஆதரிக்கப்போவதாக திருகோணமலை மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களும் இத்தகைய வெளிப்படையான கருத்துகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் கிராமப்புற மக்களும், மீள்குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுமே இதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

**தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதிலும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும் அதிக ஈடுபாடுகாட்டி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

இதேவேளை, நகர்ப்புற மற்றும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் ஆதரவு வலுவடைந்து வருகின்றது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வேட்பாளர்களாக எவரை நியமிக்கப்போகின்றார்கள் என்பதிலும் மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர்.

# வேறுபாடின்றி மனித சமூகத்தை உருவாக்குவதே கூட்டுறவு இயக்கம்

## திருமலை கூட்டுறவுத் தலைவர் கூறுகிறார்

திருகோணமலை,ஜூலை 10

இன, மத, மொழி வேற்றுமை இல்லாத ஓர் உயர் மனித சமூகத்தை உலக ரீதியாக ஒன்றிணைத்து உருவாக்குவதாக கூட்டுறவு இயக்கம் அமைகிறது. ஆனால் இன்று அரசியல் தலையீடு காரணமாக ஜனநாயக வழியில் செயற்படவேண்டிய கூட்டுறவாளர்கள் அடி வருடிகளாகச் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று திருகோணமலை மாவட்டக் கூட்டுறவு சபையின் தலைவர் கு.சோம சுந்தரம் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளாக கூட்டுறவுச் சபையின் பிரதம எழுதுவினைஞராகவும் விற்பனைப் பிரதிநிதியாகவும் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி கு.தயாபரிக்கு சபையின் பணியாளர்கள் நடத்திய சேவை நலன் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் கூட்டுறவுச் சபையின் தலைமையகத்தில் நடை பெற்ற இந்த நிகழ்வில் திருமதி தயாபரியை மகளிர் குழுவின் தலைவி திருமதி ரி.தனலட்சுமி மாலை அணிவித்து வரவேற்றார்.

(ச-40)


## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு கணக்கு பதிவுநர் (BOOK KEEPER) தேவைப்படுகின்றனர். கீழ்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* வர்த்தகத்துறையில் 03 பாடங்களில் சித்தி அல்லது தொழில்சார் வேறுகற்கை நெறிகள் (HNDM, AAT, HNDBS, NCAT)
* கணினி அறிவு மேலதிக தகைமயாக கருதப்படும்.

தகுதியுள்ளவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பங்களை 15.07.2012 ற்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனித வள முகாமையாளர்
ரெடிபில்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட், கரந்தன் வீதி, ஊரெழு

## இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்- 2012

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழையமாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் வருடாந்த ஒன்றுகூடலும் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதில் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கெள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

(20279)(8-14)

## விற்பனை முகாமையாளர்/சிட்டை எழுதுநர்/ விற்பனையாளர்

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபலமான மாபிள் காட்சியறைக்கு (Tiles Show Room) கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்குறிக்கப்பட்ட முகவரிக்கு 16/07/2012 க்கு முன் விண்ணப்பிக்கவும். கவர்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

01.விற்பனை முகாமையாளர் (Show room sales manager)
(40 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ளவர்கள்)


02.விற்பனையாளர் (Sales man)
(விற்பனைத்துறையில்அனுபவமும் இளமைத்துடிப்புமுள்ள இருபாலாரும்)

03. சிட்டை எழுதுனர்.

தொடர்புகளிற்கு: போ/ப/உ நாயன், விளம்பர இலக்கம் /4375 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(c/1406)(14-3)


## மரண அறிவித்தல்



### திருமதி கந்தசாமி பொன்னம்மா

கே.கே.எஸ் வீதி கொக்குவில் பூநாறி மரத்தடியை வசிப்பிடமாக கொண்ட திருமதி கந்தசாமி பொன்னம்மா நேற்று (09.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தசாமியின் (A.K கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாத்துரை (கொக்குவில் முன்னாள் விதானையார்)-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தெய்வேந்திரன், போசேந்திராதேவி (செல்வி .P.கந்தசாமி-பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை முன்னாள் அதிபர்), தர்மேந்திரன், தயாபரேந்திரன், குகனேந்திரன், காலஞ்சென்ற குமாரேந்திரன், விக்னேஸ்வரி, குலேந்திரன் (C.E.B), இரகுவரேந்திரன், ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2012) புதன்கிழமை காலை 9 மணிக்கு பூநாறி மரத்தடி K.K.S வீதி கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி மரத்தடி
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

தகவல்
க.தயாபரேந்திரன் (மகன்)
(C.E.B.ஓய்வு பெற்ற பொறியியலாளர்)


## விற்பனைக்கு

Mahendra Maxci Track Bolero
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0774588684

(20277)(6.14.3)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா ? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம். அழையுங்கள்.

T.P : 077 9086737 GUNAA BEST PC

(20283)(8-14)

## தவறிவிட்டது

றிச்சேட் எல்லினஸ் ஆகிய எனது B.771100 இலக்க சாரதி அனுமதிப்பத்திரமும் சிறிய கொப்பியும் காக்கைதீவில் இருந்து அராலிச் சந்திக்கு இடையில் தவறிவிட்டது.

கண்டெ டுத்தவர்கள் தந்துதவவும்.

T.P :- 0778445260

(20278) (6.14.3)

## பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்.
தொடர்புகளுக்கு:
0772206591, 0772674805

(18688) (2-6-7)

## காணி விற்பனைக்குண்டு

பரந்தன் முல்லை வீதியில்
முரசுமோட்டையில்
வீதியோரமாக நான்கு கடைக் கட்டடங்கள் உட்பட
பதின்மூன்று ஏக்கர் காணி
[illegible]
விற்பனைக்குண்டு.
தொடர்பு: குமார் 077 6784 021


## மரண அறிவித்தல்கள்



### சரவணமுத்து வைத்திலிங்கம்

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது டச்சு றோட், செருக்கல் வீதி சாவகச்சேரியினை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வைத்திலிங்கம் நேற்று (09.07.2012) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - பார்வதிப்பிள்ளை (சரசாலை) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் பாசமிகு கணவரும், சிவலிங்கம், பிறைசூடி (கனடா), ஆகியோரின் பாசமிகு கணவரும் தந்தையும், Dr. ராஜேஸ்வரியின் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), பாசமிகு மாமனும், உதயசங்கர் (யாழ் இந்துக் கல்லூரி, 2011 உயிரியல் பிரிவு மாணவன்), சிவஷோபி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி, தரம் 11), அச்சுதன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் பத்மாவதி, ஸ்ரீஸ்காந்தராஜா (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி), புனிதவதி, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வைரமுத்து, கிருஸ்ணகுமாரி (ஓய்வுபெற்ற உப அதிபர் வவுனியா), இராமலிங்கமூர்த்தி (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர், இ.மி.ச. பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுறோட் செருக்கல் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
சிவலிங்கம் (மகன்)

(20285) (14.3)

### ஆசை கந்தையா



மானிப்பாய் ஆனந்த வீதியை வசிப்பிடமாகக் கொண்ட ஆசை கந்தையா நேற்று (09.07.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், இலங்கேஸ் வரன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்), அன்புத் தந்தையும் ரசிகலாவின் அன்பு மாமனும், சின்னத்துரை, முத்தையா, கந்தசாமி, இரத்தினசிங்கம், சிவலிங்கம், தங்கம்மா ஆகியோரிகன் அன்புச் சகோதரனும், நாகம்மா, காலஞ்சென்ற தருமராஜா மற்றும் பரமேஸ்வரி, தயாபதி பரஞ்சோதி (குடும்பநல உத்தியோகத்தர் யா.ம.ச.), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.07.2012) செவ்வாய்க் கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பழம் வீதி, கந்தர்மடத்தில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா
இலங்கேஸ்வரன் (மகன்)

இல.40, பழம் வீதி, கந்தர்மடம்.

(20280) (14.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர் | நல்லூர் பாம் சென்ரர் | சுட்டி பாம் சென்ரர் |
| #19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, | வட்டுக்கோட்டை |
| நல்லூர், யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தொ.பே : 077 8996085 |
| தொ.பே : 021 2226944 | தொ.பே : 077 6225944 | |

(20259)(6-7-8)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. Frence மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(20261)(45-6-9)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தாசபை மகாசபைக்கூட்டம்

இடம் : மேற்படி ஆலய கல்யாண மண்டபம்

காலம் : 22.07.2012 ஞாயிறு பி.ப. 4.00 மணி

தலைவர் : திரு. கா. பாலசுப்பிரமணியம்

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
தலைமையுரை
செயலாளர் அறிக்கை
பொருளாளர் கணக்கறிக்கை
புதிய தர்மகர்த்தா சபை தெரிவு

**குறிப்பு:**

சந்தாப்பணம் நிலுவையின்றி செலுத்திய அங்கத்தவர்கள் அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ. இராசலிங்கம் (செயலாளர்),
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை.

(சி/1297)(6-7-8)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை. (மல்லாகம்)

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வீதிகளின் திருத்த வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேசசபையினால் கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தை / கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 10.07.2012 - 23.07.2012 பி.ப 03.00 மணி வரை.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி 24.07.2012 ந.ப 12.00 மணி வரை.
- கேள்விகள் திறக்கப்படும் திகதி 24.07.2012 பி.ப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரண்டுபிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு **"தவிசாளர், வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, காங்கேசன்துறை.(மல்லாகம்)"** என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடப்படவேண்டும். ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப்பத்திரத்தையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு பெட்டியிலிடப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD)தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் VAT,NBT உள்ளடங்கலாக |
|---|---|---|---|---|---|---|
| 01 | அருணோதயா ஆரம்பப் பாடசாலை வீதி - அளவெட்டி | 0.96 | M8/C9 அல்லது அதற்கு மேல் | இரண்டு மாதங்கள் | 14,000.00 | 570.00 |
| 02 | மல்லாகம் மில் லேன் 1ம் குறுக்கு வீதி - மல்லாகம் | 0.56 | | இரண்டு மாதங்கள் | 8,000.00 | 570.00 |
| 03 | கோணப்புலம் இணைப்பு வீதி -மல்லாகம் | 0.32 | M9/C10 அல்லது அதற்கு மேல் | ஒரு மாதம் | 5,000.00 | 570.00 |
| 04 | மாத்தனை வீதி தொடர் வேலை-தெல்லிப்பழை. | 0.27 | | ஒரு மாதம் | 4,000.00 | 570.00 |

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
மல்லாகம்
10.07.2012

திரு சோமசுந்தரம். சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை.

[சி/1300][2-6]

# மரண அறிவித்தல்

# திருமதி மகாலட்சுமி இராமநாதன்



உரும்பிராய் கிழக்கு, முருகன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி இராமநாதன் நேற்று (09.07.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், பத்மாவதி (பிரான்ஸ்), இரகுநாதன் (பிரான்ஸ்), ரங்கநாதன் (பிரான்ஸ்), ஜெயமோகன்(ஜேர்மனி), ரஞ் சனி (உரும்பிராய்), அருள்ஜோதி (சுவிஸ்), குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் (பிரான்ஸ்) மற்றும் ரஞ்சிதமலர் (பிரான்ஸ்),ஜெயலட்சுமி (பிரான்ஸ்), இந்திரகுமார் (உரும்பிராய்), ஸ்ரீகமலன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் நவலட்சுமி (கொழும்பு), தனலட்சுமி (கனடா), இராசலட்சுமி (உரும்பிராய்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜனிசியா (பிரான்ஸ்), சர்மின் (பிரான்ஸ்), தினோத் (பிரான்ஸ்), வினிதா (பிரான்ஸ்), விபுதா (பிரான்ஸ்), வினுசன் (பிரான்ஸ்), ரம்மியா (பிரான்ஸ்), ஜீவந்தன் (சுவிஸ்), பிரியங்கன் (சுவிஸ்), அபினன் (சுவிஸ்), சுஜித் (ஜேர்மனி), கௌதம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4 மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
பபி (மகள்), இந்திரகுமார் (மருமகன்)

(20268)(5-6-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புலம்பெயர்ந்த தமிழர்களின் அச்சுறுத்தலை தவிர்க்கும் வழி

இலங்கைக்கு இப்போது பெரும் அச்சுறுத்தலாக இருப்பது வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் சமூகம்தான் என்பது இலங்கை ஜனாதிபதியின் கணிப்பு. எனவேதான் அவர்களின் அச்சுறுத்தலை முறியடிப்பதற்கான உத்திகள் தொடர்பாக வெளிநாடுகளில் அரசின் சார்பில் பணிபுரியும் தூதுவர்கள் சகலபேரும் நாட்டுக்கு அழைக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள் என்று தெரிகிறது.

தியத்தலாவை ராணுவ வளாகத்தில் நடைபெற்ற வெளிநாட்டில் பணிபுரியும் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், உதவித்தூதுவர்கள், தூதரக பொறுப்பதிகாரிகள் மற்றும் ராஜதந்திரிகளுக்கான கருத்தரங்கில் ஜனாதிபதி உட்பட முக்கிய அமைச்சர்களும் ராணுவ மற்றும் அதிகாரிகளும் கருத்து வழங்கியுள்ளார்கள். இந்தக் கருத்தரங்கில் 36 தூதுவர்கள், 10 உயர் ஸ்தானிகர்கள், ஒரு பிரதி உயர்ஸ்தானிகர் பத்து உதவித் தூதுவர்கள் இரண்டு தூதரக பொறுப்பதிகாரிகள் என்று மொத்தம் 59 ராஜதந்திரிகள் பங்குபற்றியிருக்கிறார்கள். 21 ஆம் நூற்றாண்டுக்காக ராஜதந்திர களநிலையை மீள மெருகிட்டு அமைப்பது என்ற கருப்பொருளில் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மஹிந்த சிந்தனையில் இருந்து எதிர்பார்க்கப்படுவது என்ற தலைப்பில் கருத்துரை வழங்கியிருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு குழுமியிருந்த ராஜதந்திரிகளுக்கு சுருக்கமாக அறிவுரை வழங்கிய போது, வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் சமூகம்தான் இப்போது இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. இந்த அச்சுறுத் தலை முறியடித்து வெற்றியை நிலைநாட்ட வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகத் தெரியவருகிறது.

போர் நடந்து கொண்டிருந்த போதும் அதற்குப் பின்னரும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ்ப் புலம் பெயர்ந்த சமூகத்தினர் இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் சம்பவங்கள் அனைத்தையும் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் தமிழர்கள் என்பதால் எதிர்நோக்கிய சங்கடங்கள் இடையூறுகள் காரணமாகவும் ஆயுதப் படைகளின் கெடுபிடிகள் காரணமாகவும் வெளியேறிச் சென்றவர்கள். இங்கே மீண்டும் உண்மையான அமைதியேற்படுவதையும், தமிழ் மக்கள் கெடுபிடிகளுக்குள்ளாகாமல் நிம்மதியாக வாழ்வதையும் எதிர்பார்ப்பவர்கள் மட்டுமல்ல அவ்வாறு ஒரு சூழ்நிலை ஏற்படும் போது மகிழ்ச்சியுடன் இங்கு திரும்பிவந்து மீளவும் வாழ்வியலை தொடங்குவதற்கு ஆயத்தமாக இருப்பவர்கள் துரதிர்ஷ்டவசமாக அப்படியான ஒரு அமைதிச் சூழ்நிலை இங்கு இன்னமும் ஏற்படவில்லை. போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் கூட மக்களின் பொது வாழ்விலிருந்து படையினர் முற்றாக விலக்கிக் கொள்ளப்படவில்லை. மீள்குடியமரவிரும்பும் மக்களின் நிலங்கள் அடாத்தாக அபகரிக் கப்பட்டுள்ளன, அபகரிப்புக்கான முயற்சிகளும் தொடர்கின்றன.

இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் அவைகள் அகற்றப்பட்டு புத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. இவைகளை நிறுத்துவதற்கு உயர்மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்குப் பதிலாகத் தொடர்ந்து அவை இடம்பெறும் வகையிலான ஊக்கம் அளிக்கும் செயல்பாடுகளே காணப்படுகின்றன.

இவை மட்டுமல்ல, வருடக் கணக்காக சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் துரிதமாக அக்கறை காட்டப்படாமல் இழுத்தடித்ததன் விளைவாக அசம் பாவிதங்கள் ஏற்பட்டு ஒரு கைதி கொல்லப்பட்டுள்ளார்- மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இன்னும் அரசினாலேயே நிறுவப்பட்ட ஆணைக்குழுவொன்றின் பரிந்துரைகள் ஐ.நா.மனித உரிமைகள் சபை வற்புறுத்திய பிறகும் கூட முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு இன்னும் பலவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம்.

இந்த நிலைமைகளை விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கும் புலம் பெயர்ந்த மக்கள் எவ்வாறு அமைதியாக இருப்பார்கள் என்பது பற்றி அரசுத் தலைவர்கள் யோசிக்க வேண்டும். அவ்வாறான ஒரு நிலைமையை சர்வதேசத்தின் மூலம் உருவாக்குவதற்காகவே இலங்கை அரசுக்கு மகிழ்ச்சி தரமுடியாத சிலபல காரியங்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

அமெரிக்காவில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் முன்னாள் ராணுவ அதிகாரி சவேந்திர சில்வாவுக்கு எதிராகவும் வழக்குத் தொடர்ந்தார்கள். ஜனாதிபதி இங்கிலாந்துக்கு மேற்கொண்ட இரண்டு பயணங்களின் போதும் பெரும் எடுப்பில் ஆர்ப்பாட்டம் செய்து குழப்பினார்கள். அங்கு அவர் நிகழ்த்தவிருந்த இரண்டு சொற்பொழிவுகளையும் இரத்து செய்யும் படியான நிலைமையை உருவாக்கினார்கள். இது போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். இப்பொழுது புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்றுக்கான கையெழுத்து வாங்கும் நடவடிக்கையி லும் அவர்கள் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இவைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளில் அரசு வேகமாக இறங்கவேண்டிய காலம் உருவாகியுள்ளது. புலம் பெயர்ந்த மக்கள் மட்டுமல்ல சர்வதேச சமூகமும், ஐ.நா.அமைப்புகளும் கூட இங்குள்ள நிலைமைகளை அவதானித்து வருகின்றன.

எனவே நாம் இந்தப் பத்திகளில் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருப்பது போல் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு விரைவாகவும், வெளிப்படையாகவும் செயலில் இறங்குவது அவசியம். முப்பது வருட போரை மூன்று மாதத்தில் துணிச்சலுடன் முடித்து வைத்ததாகக் கூறிக் கொள்ளும் அரசுத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை களையும் தீர்த்துவைப்பதற்கு துணிச்சல் கொள்ளவேண்டும். புலம் பெயர்ந்த மக்களின் அச்சுறுத்தலை ஓரளவுக்காவது சமாளிப்பதற்கு இது உதவியாக இருக்கும் என்று கருதலாம்.

# பனை சார் உற்பத்திப் பொருள்கள் காகில்ஸ் பூட்சிற்றிகளில் விற்பனை

## ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

பனையிலிருந்து பெரும்பாலான உணவுப் பொருள்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் என 801 வகையான பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்டத்தில் பனை மரத்திலிருந்து உற்பத்தி செய்யப் படும் உணவுப் பொருள்கள் மற்றும் அழகுப் பொருள்களை 'காகில்ஸ் பூட்சிற்றி'களில் விற்பனை செய் வதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத் திடப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் இன்று பெரும்பாலானோர் சுயதொழிலாக வும், முதன்மைத் தொழிலாகவும் பனம் பொருள் உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் களுக்கு உற்பத்திகளை சந்தைப் படுத்துவது பெரும் சிரமமாக உள் ளது.

பனையிலிருந்து பெரும்பா லான உணவுப் பொருள்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் என 801 வகையான பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

பனையிலிருந்து தற்போது 85 வீதம் வரையான பகுதிதான் உற்பத்திக்காக பயன்படுத்தப் படுகிறது. மீதி 15 வீதம் வரை யானது பயன்பாட்டில் இல்லை.

தற்போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டும் 'கற்பகம்' எனும் பனை சார்ந்த உற்பத்தி பொருள் களை விற்பனை செய்யும் நிலை யங்கள் உள்ளன. இவை பனை அபி விருத்தி சபையின் கண்காணிப்பில் உள்ளன. கற்பகம் ஏனைய மாவட் டங்களில் இல்லை.

பனம் கைப்பணிப் பொருள் களை உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ள தால் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பனை அபிவிருத்திச் சபையின் கடமையாகும்.

கைதடியில் திறக்கப்படவுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் மேலும் பல்வேறு வகையான உணவு, அழகு சாதனப் பொருள் களை தயாரிப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-13-16)

## சென்.பீற்றர்ஸ் தேவாலய தாக்குதல் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவால யம் மீதான தாக்குதலின் 17ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் சொந்தங்கள், உறவுகள், சகோதரர் கள்-தாய் -தந்தையர் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்ட னர். சென்.பீற்றர்ஸ் ஆலய பங்குத்தந்தை வண.ம.ஜோதிநாதன் தலைமை யில் திருப்பலி பூசை நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றது.

கடந்த 09.07.1995 இல் இடம்பெற்ற நவாலி தேவாலயம் மற்றும் கதிர்காம முருகன் ஆலயம் மீதான தாக்குதலின் போது 147 பேர் அந்த இடத்தில் பலியானார்கள்.

300 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து அவயவங்களை இழந்திருந்தனர். இவர்களது ஞாபகார்த்தமாகவே நேற்று நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. (ம-50)

## தொலைபேசி இணைப்பு பளையில் விஸ்தரிப்பு

பளைப் பிரதேசத்துக்கான கேபிள் தொலைபேசி இணைப் புக்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்துக்கு முன்னர் நூறு வரையிலான இணைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டிருந்தன.

தற்போது அவை இருநூறு இணைப்புகளாக விஸ்தரிப்புச் செய் யப்பட்டுள்ளன என்று யாழ். ரெலிக் கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இணைப்பு வசதியை அதிகரிக்கும் முகமாக விசேட இம்சான் பரிவர்த்தனையும் அங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-17)

## ஜப்பானுக்கு பயணமாகவுள்ள தரம் 5 முதல் நிலை மாணவர்

### முல்லைத்தீவு சேதுராகவனும் செல்கிறார்


டிநிதி நிபாண்டி


சேதுராகவன்பரமேஸ்வரன்


இசான் சுமணபால


விகாஞ்சி ரணவீர


ஓசாதி பொன்சேகா,


சக்கி அகமட்

வடமராட்சி, ஜூலை 10

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று முதல் நிலையில் உள்ள 6 மாணவர்கள் ஜப்பானில் நடைபெறவுள்ள 24 ஆவது தெற்காசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி ஜப்பான் நாட்டுக்குப் பயணமாகவுள்ளனர்.

195 புள்ளிகளைப் பெற்ற கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த சக்கி அகமட், விசாகா கல்லூரியைச் சேர்ந்த ஒசாதி பொன்சேகா, விகாஞ்சி ரணவீர, 194 புள்ளிகளைப் பெற்ற பிபிலையைச் சேர்ந்த இசான் சுமணபால முல்லைத்தீவு மகாவித் தியாலய மாணவன் சேதுராகவன் பரமேஸ்வரன், கொழும்பு விசாகா கல்லூரியைச் சேர்ந்த டிநிதி நிபாண்டி ஆகியோரே இந்த மாநாட் டில் கலந்து கொள்ள கல்வி அமைச் சால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மநாடு எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை ஜப்பானில் 'குக்சோவா' என்னுமிடத்தில் நடைபெறவுள் ளது. தெரிவு செய்யப்பட்ட மாண வர்களை ஜப்பானுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண் டுள்ளது. (ம-8)

# இருபக்க செயற்கை கால், கைகளை ஜெய்ப்பூர் நிறுவனம் பொருத்துகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஜெய்ப்பூர் நிறுவன யாழ்ப் பாணக் கிளையால் 103 இருபக்க செயற்கைக் கால்களும், 14 இருபக்க செயற்கை கைகளும் பொருத்தப்பட்டுள்ளன என்று யாழ். ஜெய்ப்பூர் நிறுவன புள்ளி விவரத் தகவல் கூறுகின்றது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து 2011 டிசம்பர் மாதம் வரை பொருத்தப்பட்ட செயற்கை அவயவங்களின் விவரப் படி முழங்காலுக்கு மேல் 928 செயற்கைக் கால்களும், முழங் காலுக்கு கீழ் 4 ஆயிரத்து 159 செயற்கைக் கால்களும் முழங் கைக்கு கீழ் 151 செயற்கைக் கைகளும் 103 இருபக்க செயற்கை கால்களும், 14 இருபக்க செயற்கை கைகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

மொத்தம் 5 ஆயிரத்து 190 செயற் கைக் கால்களும் 254 செயற்கை கைகளும் பொருத்தப்பட்டிருக் கின்றன.

இதில் 3 ஆயிரத்து 960 செயற்கை கால்களை ஆண்களும் ஆயிரத்து 127 கால்களை பெண்களும் பொருத்தியுள்ளனர். அதே நேரம் 191 கைகளை ஆண்களும் 49 கைகளைப் பெண்களும் பொருத்தி இருப்பதாக இந்தப் புள்ளி விவரம் கூறுகின்றது.

இந்தப் புள்ளி விவரத் தரவு களின்படி போரால் மட்டும் 2 ஆயி ரத்து 998 பேர் கால்களை இழந்து செயற்கை கால்கள் பொருத்தியி ருப்பதும் 168 பேர் கைகளை இழந்து செயற்கைக் கைகள் பொருத்தியிருப் பதும் குறிப்பிடத்தக்கது. (ம-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனம் கலந்த மரக்கறிகளால் ஆபத்து

## வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

நெளுக்குளம், ஜூலை 10

தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனங்களின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளால் மக்களுக்குப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக வவுனியா மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, அடிக்கடி ஏற்படும் தலைச்சுற்று, அங்கவீனமான குழந்தைகள் பிறத்தல் ஆகியனவற்றுக்கு இத்தகைய மரக்கறிகளே முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

''விவசாயச் செய்கையின் போது பல்வேறு இரசாயனங்களை உள்ளடக்கிய மருந்து வகைகளைப் பயன்படுத்துவதால் பல நோய்கள் ஏற்படுகின்றன.

''குறிப்பாகக் கிராமப்புற விவசாயிகள் அளவுக்கு அதிகமாக இரசாயன வகைகளைப் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை உண்போர் பாதிப்படைகின்றனர்.

''இதனைத் தடுப்பதற்காக வவுனியாவில் வேப்பிலைச்சாறு, உள்ளிச்சாறு, புகையிலைச்சாறு, வேப்பெண்ணை ஆகியவற்றை உபயோகித்து காய்கறி மற்றும் பழவகைகளில் ஏற்படும் கிருமிகளின் தாக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

''மேலும் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் போது சேதனப் பசளைகளே பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நெல், கிழங்குவகை ஆகியனவற்றுக்கும் இந்த முறை பயன்படுத்தப்படுகின்றன'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-402)



மன்னார் - பூநகரி வீதியில் அமைக்கப்படும் பாலத்தின் வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருவதனைக் காண முடிகின்றது. (18)

# சுகாதாரப் பணிமனையால் விழிப்புணர்வுக் கண்காட்சி



அக்கராயன், ஜூலை 10

கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினின் போசாக்கு மாத விழிப்புணர்வுக் கண்காட்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடந்து முடிந்துள்ளது.

கிளிநொச்சி அரச செயலக உதவி அரச அதிபர் திருமதி ப.ஜெயராணி இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில்கிளிநொச்சி மாவட்டத் தாய் சேய் மருத்துவர் எஸ்.முரளிதரன், அக்கராயன் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் சந்திக்க பஸ்நாயக்கா, அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் த.கண்ணபிரான் ஆகியோர் கலந்து கொண்டனர். கண்காட்சியை அக்கராயன் பிரதேச மக்கள், மாணவர்கள் எனப் பலர் பார்வையிட்டனர்.

சிறார்கள் மற்றும் பெரியோர்களுக்குப் போஷணை தொடர்பாக விழிப்பூட்டும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# அக்கராயனில் திருட்டு அதிகரிப்பு

அக்கராயன், ஜூலை 10

அக்கராயனில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அண்மையில் அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் முற்பகல் 10 மணியளவில் வீட்டில் யாரும் இல்லாத வேளையில் வீட்டின் முன்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

அம்பலப்பெருமாள் சந்திப் பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கெங்காதரன் குடியிருப்புப் பகுதியில் இரு மாதங்களுக்கு முன்னர் வீடு ஒன்று உடைக்கப்பட்டு பணம், நகை என்பன திருடப்பட்டன. (க-18)

# சீரில்லாத பஸ் சேவையால் வீதியில் மக்கள் தவம்

அக்கராயனிலிருந்து துணுக்காய் செல்லும் அமதிபுரம் கிராம மக்களும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன், ஜூலை 10

அக்கராயனிலிருந்து காலை வேளையில் துணுக்காய் நோக்கிச் செல்லும் தனியார் பஸ்கள் ஒழுங்கான சேவையை வழங்காததால் பயணிகள் வீதிகளில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

அக்கராயனிலிருந்து துணுக்காய் 22 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. அம்பலப் பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காலையில் துணுக்காய் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் அக்கராயனிலிருந்து துணுக்காய் செல்லும் அமதிபுரம் கிராம மக்களும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அக்கராயனுக்கும் துணுக்காய்க்கும் இடையில் அரச பஸ்கள் சேவையில் ஈடுபடாததன் காரணமாகவே இந்த நிலை காணப்படுவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# சகாக்களின் கைதைக் கண்டித்து டிப்போ ஊழியர்களும் களத்தில்

## மன்னார் அரச பஸ்கள் ஓடாததால் பயணிகள் அவலம்

மன்னார், ஜூலை 10

தமது பணியாளர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் அரச பஸ் டிப்போவைச் சேர்ந்த பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் தனியார் பஸ் ஒன்றின் நடத்துநரும், சாரதியும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பஸார் பகுதியில் வைத்து அரச பஸ் ஊழியர்கள் சிலரால் தாக்கப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்யுமாறு கோரி, மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் நேற்று முன்தினம் காலையிலிருந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைப் பொலிஸார் கைது செய்தனர். இதனால் தனியார் பஸ் சங்கத்தினரின் பணிப்புறக் கணிப்பு முடிவுக்கு வந்தது.



இந்த நிலையில் தமது பணியாளர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அரசபஸ் சேவையின் மன்னார் டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணி முதல் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மன்னார் அரச பஸ் தரிப்பிடம் வெறிச்சோடிக் காணப்பட்டது. இரவு நேர பஸ்சேவைகள் இடம்பெறாததால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அத்துடன் மாதாந்தப் பருவச் சீட்டுக்களைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்களும் அரச உத்தியோகத்தர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தாக்குதலுக்குள்ளான தனியார் பஸ் சாரதியும், நடத்துநரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அரச பஸ் சேவைப் பணியாளர்களிடம் மன்னார்ப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# வவுனியா மாணவி தேசிய மட்டத்தில் முதலிடம்




வவுனியா, ஜூலை 10

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

தரம் 6 இல் கல்வி கற்கும் சர்மிகா சர்வானந்தன் என்ற மாணவியே தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் இந்த மாணவிக்குப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்திருந்தார். (க-253)

# கடும் வரட்சி காரணமாக மன்னாரில் பயிர்கள் அழியும் நிலை

மன்னார், ஜூலை 10

கடும் வரட்சி காரணமாக மன்னாரில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை அழிவடையும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

முருங்கன் கட்டுக்கரைக் குளத்தை நம்பியே இம்முறை பல ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் தற்போது மன்னாரில் நிலவும் கடும் வெப்பம் மற்றும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றியதால் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. குளங்கள், நீர்நிலைகள், கிணறுகள் என்பனவும் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.

இதனால் விவசாயப் பயிர்களுக்குத் தேவையான நீரைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. போதிய நீர் இல்லாததால் நெற்பயிர்கள் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

இன்னும் சில வாரங்கள் இதேபோன்று நீர்ப் பற்றாக் குறை ஏற்படுமானால் நெற்பயிர்கள் முழுவதும் கருகி விடுமென விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பல இடங்களிலும் கடனைப் பெற்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இதனால் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கவலையிலும், குழப்பத்திலும் ஆழ்ந்துள்ளனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமான இடத்தைத் தெரிந்து மலக்கழிவுகளைக் கொட்டுங்கள்

## வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் தெரிவிப்பு

நவாலி, ஜூலை 10
யாழ். நகரப் பகுதியிலிருந்தும் மற்றும் ஏனைய பகுதியிலிருந்தும் எடுத்து வரப்படும் மலக் கழிவுகளை சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மட்டும் ஏன் கொட்ட வேண்டும்.

அவற்றை ஏனைய பொருத்தமான பிரதேசங்களில் கொட்ட ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது.

-இவ்வாறு கேள்வி எழுப்பினார் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கௌரிகாந்தன்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில், இரணைமடுவிலிருந்து நீர் வழங்கல் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.


இதன்போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பப்பட்டது.

''இங்கு கொட்டப்படும் கழிவுகளுடன் இறந்த ஆடு, மாடுகளின் எச்சங்களையும் கொட்டி தீயூட்டுவதால் அவற்றிலிருந்து எழும் புகை மண்டலம் துர்நாற்றத்துடன் நவாலி மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் பரவுகின்றது.

இதனால் அயல் கிராமங்களில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு ஏன் மாற்று ஏற்பாடு செய்யக் கூடாது''- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபை செயலர் பு.சிவலிங்கம், பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர், பிரதேச சபையின் உதவித் தலைவர் சிவகுமார், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-100)

## பனம்பொருள் உற்பத்தி நிலையம் ஆனைக்கோட்டையில் திறப்பு



நவாலி, ஜூலை 10
ஆனைக்கோட்டையில் பனம்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று யு.கே.டி.பியின் அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கலை ஒளி சன சமூக நிலையமும் மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலய மண்டபத்தில் அதனைத் திறந்து வைத்துள்ளன.

இங்கு பன் புல்லால் உற்பத்தி செய்யப்படும் பாய், தொப்பி, பூக் கூடைகள், அர்ச்சனைத் தட்டுக்கள், பாடசாலைப் பைகள், காரியாலய பைகள் என்பன பயிற்சி பெற்ற இளம் பெண்களினால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் உற்பத்திக்காக 5 லட்சம் நிதியை யு.என்.டி.பி. நிறுவனம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியிடம் கையளித்துள்ளது.

இந்த நிலையத்தை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நிசாந்தன் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்துள்ளார். (ம-100)

## பராமரிப்பற்ற காணி உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை 10
கிராம மட்டத்தில் காணப்படும் பராமரிப்பற்ற நிலங்களை இனங்கண்டு பத்திரிகைகள் மூலம் அறிவுறுத்தல்களை வழங்கி காணிகளுக்குரிய உரிமையாளர்கள் அவற்றைத் துப்புரவு செய்வதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற தேசிய டெங்கு கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மாத இறுதியில் நல்லூர் பிரதேச செயலகத்தில் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி திணைக்களங்கள், மாநகர பிரதேச சபைகள் இணைந்து மக்களிடையே டெங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் கிராம அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் இணைந்து குழுக்கள் அமைக்க வேண்டும்.

நுளம்புப் பெருக்கங்களை உருவாக்கும் இடங்களை இனங்கண்டு அந்த இடங்களை இந்தக் குழுவுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் டெங்கு நோய் தடுப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உடுவில், சங்கானை, நெடுந்தீவு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்தச் செயற்பாடுகள் உடன் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## உவர் நீர் தடுப்பணை அமைக்கக் கோரிக்கை

அரியாலை கிழக்கு பிள்ளையார் கோயிலடி கடற்கரைப் பகுதியை அண்மித்த நெற்செய்கையாளர்கள் உவர் நீர் தடுப்பு அணையை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் இந்தப் பகுதியில் இருந்த உவர் நீர்த் தடுப்பு மண் அணை போர்க் காலத்தில் அகற்றப்பட்டமையால் கடல்நீர்வயல்நிலங்களுக்குள் மழை காலங்களில் உட்புகுந்து நிலங்களை உவர்த் தன்மையாக்கி விடுகின்றது.

பெரும்போக நெற்செய்கையின் போது நெற்பயிர் கதிர்விடும் காலங்களில் வயல் நீருடன் கடல்நீரும் கலந்து விடுவதால் நெற் பயிர்கள் கருகி அழியும் நிலை கடந்த காலங்களில் ஏற்பட்டது.

இந்த அச்சம் காரணமாக கடந்த வருடம் இந்தப் பகுதிகளில் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதை நிறுத்தியிருந்தனர். இந்த முறை நெற்செய்கையை மேற்கொள்ள வசதியாக மழை காலத்துக்கு முன்னர் கடற்கரை ஓரமாக உவர் நீர் தடுப்பு அணையை அமைத்துத் தருமாறு நல்லூர் கமநல சேவை நிலையம், நல்லூர் பிரதேச சபை என்பவற்றிடம் இந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-135)

## நல்லூர் பிரதேச பட்டதாரிகள் கிராம சேவகர் அலுவலகத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 10
நல்லூர் பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைந்து கொண்டவர்கள் நல்லூர் பிரதேச பிரிவில் உள்ள கிராம அலுவலர் பகுதிக்குத் தேவையான திட்டங்களைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை முதல் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு ஐந்து பட்டதாரி பயிலுநர்கள் என்ற அடிப்படையில் இந்தப் பிரதேசத்தில் உள்ள நாற்பது கிராம அலுவலர் பிரிவுக்கும் பட்டதாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் உள்வீதியில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் பஜனை மற்றும் தெய்வீக நிகழ்வுகளை நடத்துவதற்கு வசதியாக இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரபல தொழில் அதிபர் ச.வி.செந்திரராஜன் இந்த மண்டபத்தை சமய வழிபாடுகளுடன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஆலய சிவாச்சாரியார் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர். (ம-17)

## பசுப்பாலுக்குத் தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு,ஜூலை 10
யாழ்ப்பாணத்தில் பசுப்பாலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டில் போதியளவு பாலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தென்னிலங்கை பால் பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் கொள்வனவு நிலையங்களை அமைத்து பால் கொள்வனவில் ஈடுபட்டு வருவதால் கணிசமான அளவு உற்பத்தி குறித்த நிறுவனத்தைச் சென்றடைகின்றது.

இதுவே இத்தட்டுப்பாடு ஏற்படக் காரணமென்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ம-130)

## சேறு நிறைந்த கழிவுநீர் வாய்க்கால்



வலி.வடக்கு, ஜூலை 10
யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அருகாமையில் உள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் சேறு நிறைந்து காணப்படுவதால் கழிவு நீர் சீராக ஓடாது தடைப்பட்டுள்ளது. இதனால் நுளம்புப் பெருக்கத்துக்கும் இது காரணமாக உள்ளது.

கழிவு நீர் விரைவாக செல்வதற்கு இரண்டு பக்கமும் ஓட்டை விடப்பட்டுள்ள போதிலும் ஒரு பக்கம் முழுமையாக நீர் செல்ல முடியாத அளவுக்குச் சேறு நிறைந்து காணப்படுகின்றது. இதனால் இப்குதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இதனைத் துப்புரவு செய்து கழிவுநீர் சீராக வெளியேற உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலதரப்பினராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# வெளிக்காயச் சிகிச்சைக்கு 26, 608 பேர் அனுமதி

## சுகாதாரப் பணிமனை அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 10
யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் வெளிக் காயங்களுக்காக மட்டும் சிகிச்சை பெறுவதற்கு 26 ஆயிரத்து 608 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு 5 ஆயிரத்து 451 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சுகாதாரப் பணிமனை அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் அறிகுறி மற்றும் ஏனை பரிசோதனைகளுக்காக 15 ஆயிரத்து 953 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். நியூமோனியா, இன்புளுவென்சா தவிர்ந்த சுவாச நோய்களுக்காக 13 ஆயிரத்து 28 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இரைப்பை இயக்கம் தொடர்பான நோய்களுக்காக 7 ஆயிரத்து 737 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தசை மற்றும் தசை நார் சம்பந்தமான சிகிச்சைகளுக்காக 7 ஆயிரத்து 553 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். தோல் சம்பந்தமான வியாதிகளுக்காக 6 ஆயிரத்து 433 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். சலத்துடன் தொடர்புடைய நோய்களுக்காக 5 ஆயிரத்து 932 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரசவம் சம்பந்தமான நேரடியான மற்றும் மறைமுகமான சிகிச்சைகளுக்காக 5 ஆயிரத்து 547 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கிருமித் தொற்று சம்பந்தமான நோய்களுக்காக 5 ஆயிரத்து 451 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். கண் தொடர்பான நோய்களுக்காக 4 ஆயிரத்து 672 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குக் கீழ்ப்படிந்தே நித்தி செயற்படவேண்டும்

## இப்படிக் கூறுகிறார் மதுரை ஆதீனம்



மதுரை ஆதீனத்தின் அதிகாரம், நிர்வாகம் அனைத்தும் என் நிர்வாகத்தில்தான் உள்ளன. இளைய ஆதீனம், எனக்குக் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டும் என்று மதுரை ஆதீனம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நித்தியானந்தாவுக்கும், எனக்கும் மனஸ்தாபம் இல்லை. ஆழமாக சிந்தித்த பின்தான், அவரை இளைய ஆதீனமாகத் தெரிவு செய்தேன். நித்தியானந்தாவுக்கு நிர்வாகத் திறமை உள்ளது. மடத்தில் மான் தோல், புலித் தோல் உள்ளது என பலர் வதந்தி வெளியிட்டனர். அதெல்லாம் இல்லை என்று பொலிஸார் சோதனையில் வெளிவந்துள்ளது. மரகதலிங்கம் இருக்கிறது என்பதும் கற்பனையே.

இளைய ஆதீனம், கொடைக்கானலில் இருந்து 20 நாள்களில் மதுரை வருவார். நான் சூழ்நிலைக் கைதியாக இல்லை. மடத்தின் அதிகாரம், நிர்வாகம் என்னிடத்தில் தான் உள்ளது. என்னுடைய உத்தரவுக்கு கீழ்ப்படிபவர் தான் இளைய ஆதீனமாக இருக்க முடியும். இளைய ஆதீனம் நியமனம் குறித்து, இந்து அறநிலையத்துறை கேட்ட அனைத்து விவரங்களையும் தெரிவித்து விட்டேன். அதில், நித்தியானந்தா ''தொண்டை மண்டல முதலியார்'' வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளேன்.

நித்தியானந்தா மீதான முறைப்பாடுகள் நீதிமன்றத்தில் உள்ளன. அதுகுறித்து பேச முடியாது. அமெரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் தீர்ப்பு வந்த பின், இளைய ஆதீனமாக நித்தியானந்தா நீடிப்பாரா இல்லையா என்ற கேள்வியைக் கேளுங்கள் - என்றார். (வ)

# 'டெசோ'வுக்கு போட்டியாக சென்னையில் ஈழ மாநாடு

## அர்ஜுன் சம்பத் அறிவிப்பு

'டெசோ' மாநாட்டுக்கு எதிராக சென்னையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இந்து அமைப்புகள் சார்பில் இந்து ஈழ ஆதரவு மாநாடு நடத்தப்படும் என்று இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.



வேலூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த மகா சங்கத்தில் ஸ்ரீ ராமானுஜரின் 1000 ஆவது திருநட்சத்திர விழா ஆலோசனைக் கூட்டம் ஞயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

விழுப்புரத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த 'டெசோ' மாநாட்டை கருணாநிதி சென்னைக்கு மாற்றியுள்ளார்.

இந்த மாநாட்டுக்கு எதிராக அதே திகதியில் இந்தியா முழுவதுமுள்ள இந்து அமைப்புகளைத் திரட்டி சென்னையில் இந்து ஈழ ஆதரவு மாநாடு நடத்த உள்ளோம்.

காங்கிரஸுடன் பேரம் பேசுவதற்கே கருணாநிதி டெசோ மாநாட்டை கையில் எடுத்துள்ளார். இலங்கைப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனித் தமிழ் ஈழம்தான் என்பது எங்களது கோரிக்கை. இந்திய அரசு இலங்கை மீது போர்தொடுத்து தனித்தமிழ் ஈழத்தை உருவாக்கித் தர வேண்டும்.

தாம்பரத்தில் பயிற்சி பெற்ற இலங்கை இராணுவத்தினர் பெங்களூருக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்தியாவின் எந்தப் பகுதியிலும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடாது. எதிர்வரும் 15 ஆம் திகதி ஸ்ரீராம சேனை மற்றும் கன்னட அமைப்புகளுடன் இணைந்து பெங்களூரில் இலங்கை இராணுவத்தினர் பயிற்சி பெறும் இடத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டம் மற்றும் முற்றுகைப் போராட்டம் நடத்த உள்ளோம்-என்றார். (வ)

# விமான நிலைய கணினிகள் பழுதால் பயணத்தில் தாமதம்

சென்னை, ஜூலை 10

சென்னை விமான நிலைய கணினிகள் செயலிழந்ததால் விமானங்கள் தாமதமாகப் புறப்பட்டன.

சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகளின் கடவுச்சீட்டுகளை குடியுரிமை அதிகாரிகள் நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் கணினி மூலம் சோதனை செய்தபோது திடீரென கணினி செயலிழந்து விட்டது.

இதனால் விமான நிலையத்தின் பல்வேறு செயற்பாடுகள் தடைப்பட்டன. பயணிகளின் கடவுச் சீட்டைச் சோதனை செய்ய முடியாததால் பயணிகள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர். அதிகாலை 4 மணி அளவில் தான் கணினி பழுது சரி செய்யப்பட்டது. இதனால் ஜேர்மனி, சிங்கப்பூர், கொழும்பு, டுபாய் உள்பட 6 நாட்டு விமானங்கள் 3 மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டுச் சென்றன.

ஓடுதளம் அருகே 6 விமானங்கள் நின்றதால் டுபாய், லண்டனில் இருந்து வரும் விமானங்களும் தாமதமாகத் தரை இறக்கப்பட்டன. (வ)

# இராமேஸ்வரம் மீனவர் குழு இலங்கைக்கு


இராமேஸ்வரம், ஜூலை 10

இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகை மீட்க, இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்கள் குழு, ஓரிரு தினங்களில், இலங்கை செல்லவுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து, கடந்த 30 ஆம் திகதி செந்தூர்பாண்டி என்பவருக்குச் சொந்தமான படகில் மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற ராமர், செந்தூரான், கருப்பையா, முனியசாமி மற்றும் இவர்களைத் தேடிச்சென்ற மீனவர்கள் காத்தன், ரவிச்சந்திரன், ராஜு, ஆத்மா உட்பட 10 மீனவர்களை, இலங்கைக் கடற்படை கைது செய்து, அனுராதபுரம் சிறையில் அடைத்தது. இவர்களின் இரண்டு படகு களும், இலங்கைக் கடற்படையினர் வசம் உள்ளன. இலங்கை பொலிஸார் சிறையிலுள்ள 10 மீனவர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். எனவே இன்று மீனவர்கள் விடுவிக்கப்படலாம் என்று மீனவர்களின் உறவினர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு விசைப்படகில், ஒன்று பழுதாகிய நிலையில் உள்ளதால், இரண்டு படகுகளையும் மீட்பதற்கு அரசின் அனுமதியுடன் இராமேஸ்வரத்திலிருந்து, மீனவர்கள் குழு இலங்கைக்குச் செல்லவுள்ளது. 50 பேர் கொண்ட மீட்புக் குழுவினர், எட்டுப் படகுகளில், இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து, இன்னும் சில தினங்களில், இலங்கை கடல் பகுதிக்குச் செல்லவுள்ளனர் என்று, அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர். (வ)

# மெட்ரோ ரயிலில் பிரதீபா பட்டீல்



ஜனாதிபதி பிரதீபா பட்டிலின் பதவிக் காலம் இந்த மாதத்துடன் முடிவடையும் நிலையில், நேற்றுமுன்தினம் டில்லி மெட்ரோ ரயிலில் பிரதீபா பயணித்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

புதுடில்லியில் உத்யோக் பவன் ரயில் நிலையத்திலிருந்து சுல்தான்பூர் வரை பிரதீபா பயணம் மேற்கொண்டார்.

இவருடன் டில்லி முதல்வர் ஷீலா தீட்சித், நகர்ப்புற மேம்பாட்டு செயலர் சுதிர் கிருஷ்ணா, டில்லி மெட்ரோ தலைவர் மங்கு சிங் உள்ளிட்டோரும் பயணம் மேற்கொண்டனர். இதற்கு முன்பு, புதுடில்லியின் நவீன போக்குவரத்து அமைப்பைப் பாராட்டியிருந்த பிரதீபா பட்டில், மெட்ரோ எப்படி செயற்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினார்.

இதையடுத்தே பிரதீபா இந்த விசேட பயணம் மேற்கொண்டார். இதற்கு முன்பு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் மெட்ரோவில் பயணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(வ)

# சிறைக்கு அஞ்சவில்லை; போராட்டம் தொடரும்

சிறை நிரப்பும் போராட்டத்தில் பங்கேற்ற தி.மு.க.வினர் போராட்டத்தைக் கண்டு அஞ்சவில்லை என்று தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பரமக்குடியில் நடந்த திருமண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறவேண்டும், ஏனென்றால் தி.மு.கவின் சிறை நிரப்பும் போராட்டத்தின்போது எங்களை சிறையில் அடைத்திருந்தால் இந்தத் திருமணத்துக்கு வர முடிந்திருக்காது.

மேலும் தி.மு.கவினரை அந்தமான், டில்லி, திகார் போன்ற சிறைகளில் அடைத்து விடுவோம் என ஆளுங்கட்சியினரால் மிரட்டல் விடுக்கப்பட்டது. போராட்டத்தைப் பார்த்து நாம் அஞ்சவில்லை.

தொடர்ந்து தி.மு.க.வினர் மீது பல்வேறு பொய் வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. பஸ், பால் கட்டண உயர்வு, மின்சாரம் வருகிறதோ இல்லையோ மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காகவும் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. மேலும் போராட்டம் தொடரும்- என்றார். (வ)

### சீன ஆதிக்கத்தை முறியடிக்க

# அந்தமான், நிக்கோபாரில் இந்திய விமானத்தளம்


இந்திய பெருங்கடலின் தென்கோடியில், சீனாவின் ஆதிக்கம் அதிகமானதைத் தொடர்ந்து, அதைக் கண்காணிக்க அந்தமான் நிக்கோபாரின் கேம்பஸ் வளைகுடாவில், இந்தியா சார்பில் பிரமாண்டமான விமானப் பாதுகாப்புப் படைத்தளம் அமைக்கப்பட்டு வருவதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வர்த்தக நலன் கருதி, சீனா இந்திய பெரும் கடலின் தென்கோடியை வெகுவாகப் பயன்படுத்தி வருகிறது. இதனைக் கண்காணிக்கவும், சீனாவின் அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கவும் இந்தியா குறித்த விமானப் பாதுகாப்புப் படைத் தளத்தை பிரம்மாண்டமாக விரிவுபடுத்தத் தொடங்கியுள்ளது.

அதன்படி, மிகப்பலம் வாய்ந்த விமானப்படைகளும், ஆளில்லா கண்காணிப்பு விமானங்களும் தயார்நிலையில் இருப்பதாகவும், ஹெலிகொப்டர் மட்டுமே இறங்கும் அளவில் இருந்த விமானப்பாதுகாப்புப் படைத்தளம் தற்போது பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அதிநவீன தொழில்நுட்பப் பாதுகாப்புக் கருவிகளும் பொருத்தப்பட்டிருப்பதாகவும் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (வ)

# அன்சாரியை மீண்டும் துணை ஜனாதிபதியாக்க காங்.முயற்சி



டில்லி, ஜூலை 10

ஹமீத் அன்சாரியையே மீண்டும் துணை ஜனாதிபதியாக்க காங்கிரஸ் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. அவரை மீண்டும் வேட்பாளராக்குவது குறித்து காங்கிரஸ் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகக் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இதுதொடர்பாக இடதுசாரிகள், சமாஜவாதி, பகுஜன் சமாஜ், மதச்சார்பற்ற ஜனதாதளம், ஐக்கிய ஜனதாதளம் ஆகிய கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி ஆலோசனை நடத்தியுள்ளது. அவர்களும் அன்சாரியை ஆதரிக்க உறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜியுடன் மட்டும் இதுதொடர்பாக இன்னும் பேசவில்லை. என்றும் எனினும் அவரது ஆதரவு இல்லாமலேயே அன்சாரியை துணை ஜனாதிபதியாக்க முடியும் என்றும் காங்கிரஸ் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

துணை ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி நடைபெற உள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாலையோரத் தாக்குதல்களால் ஆப்கனில் 14 அப்பாவிகள் சாவு

காபூல், ஜூலை 10

ஆப்கானில் நிகழ்ந்த வெவ்வேறு சாலையோரக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 14 பொதுமக்கள், ஒரு நேட்டோ படைச்சிப்பாய், 5 பொலிஸார் உயிரிழந்தனர்.

ஆப்கனின் தெற்குப் பகுதியில் உள்ள ஆர்ஜிஸ்தான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அந்த வழியே சென்ற சிறிய வாகனமொன்று வெடித்துச் சிதறியது. அதில் சிக்கிக் கொண்டவர்களை மீட்கச் சென்ற உழவு இயந்திரம் மற்றொரு குண்டுவெடிப்பில் சிக்கிச் சேதமடைந்தது. இந்த இரு வாகனங்களிலும் பயணம் செய்த 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 3 பேர் பலத்த காயமடைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில், ஹெல்மண்ட் மாகாண மூஸா குவாலா மாவட்டத்தில் சோதனைச் சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது நேற்று முன்தினம் அதிகாலையில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அந்தப் பகுதிக்குக் கூடுதல் பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டனர். பொலிஸார் வந்த வாகனங்களில் ஒன்று சாலையோர குண்டுவெடிப்பில் சிக்கிச் சேதமடைந்தது. அதில் பயணம் செய்த 5 பொலிஸார் உயிரிழந்தனர். அந்தப் பகுதியில் தீவிரவாதிகளுடன் நிகழ்ந்த மோதலில் 3 பொலிஸார் காயமடைந்தனர். 20 தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்று அரசின் செய்தித் தொடர்பாளர் தெத் அகமதி தெரிவித்தார்.




ஆப்கனின் தெற்குப் பகுதியில் உள்ள ஆர்ஜிஸ்தான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சாலை யோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அந்த வழியே சென்ற சிறிய வாகனமொன்று வெடித்துச் சிதறியது.

ஆப்கனின் தெற்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த மற்றொரு சாலையோரக் குண்டு வெடிப்பில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவைச் சேர்ந்த ராணுவத்தினர் ஒருவர் உயிரிழந்தார்.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட தகவலின்படி கடந்த ஆண்டு ஆப்கன் போரில் அந்த நாட்டைச் சேர்ந்த 3,021 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான கால கட்டத்தில் இந்த ஆண்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36 சதவீதம் குறைந்துள்ளது.

இந்த ஆண்டு இதுவரை 224 நேட்டோ ராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

## ஆப்கன் அமெரிக்காவின் புதுக் கூட்டாளி என அறிவிப்பு



ஆப்கனில் உள்ள காபூல் நகருக்கு அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் ஹிலாரி கிளின்ரன் நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டார்.

காபூலில் ஜனாதிபதி ஹமீத் கர்சாயை ஹிலாரி கிளின்ரன் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து ஹிலாரி கிளின்ரன் செய்தியாளர்களிடம் பேசுகையில், ''ஆப்கானிஸ்தானுக்கு எங்கள் கூட்டாளி என்ற அந்தஸ்தை வழங்குகிறோம். ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்துக்கு உதவுவதற்கான எங்கள் வாக்குறுதிக்கு இதுவே வலுவான அடையாளம் ஆகும்'' என்றார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தங்களுக்குத் தேவையான ஆயுதங்களை ஆப்கானிஸ்தான் இனி அமெரிக்காவிடமிருந்து வாங்கிக்கொள்ள வழி பிறந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## லிபியத் தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவு


திரிபோலி, ஜூலை 10

லிபியாவில் கடந்த சனிக்கிழமை நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் நுரி அல்-அபார் தெரிவித்தார். தேர்தல் வாக்குப் பதிவு குறித்துத் தொடர்ந்து தகவல் வந்து கொண்டிருப்பதாகவும் இதுவரை சுமார் 16 லட்சம் வாக்காளர்கள் (60 சதவீதம்) வாக்குளைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்காக மொத்தம் 1,554 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் பதற்றம் நிலவிய 24 வாக்குச் சாவடிகளைத் தவிர மற்ற அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்குப் பதிவு சுமுகமாக நடந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன்.

## ஹிட்லர் காப்பாற்றிய யூதர்





முதலாம் உலகப் போர்க் காலத்தில் தனக்கு கட்டளையிடும் அதிகாரியாக இருந்த யூத இனத்தவர் ஒருவரின் உயிரை இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஜேர்மனியின் ஆட்சித் தலைவரான ஹிட்லர் காப்பாற்றியிருக்கிறார் என்று குறிப்பிடும் கடிதம் ஒன்று கிடைத்திருக்கிறது.

ஆய்வொன்றில் ஈடுபட்டிருந்த கலாநிதி சென் மோஸ் என்பவருக்கு எதேச்சையாக இந்தக் கடிதம் கிடைத்திருக்கின்றது என ஜேர்மனியில் வெளியாகும் 'ஜூயிஷ் வொய்ஸ்' என்ற பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யூத இனத்தவர் ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஹிட்லர் தலையிட்டிருக்கிறார் என்பதைக் காட்டுகின்ற அபூர்வமான கடிதமாக இது பார்க்கப்படுகிறது.

ஏர்னஸ்ட் ஹெஸ் என்பவருக்கு மரணதண்டனை அளிக்கக்கூடாது என்பதுதான் நாஜிக்களின் தலைவரான பியூரரின் ஆணை, அதாவது ஜேர்மனிய ஆட்சித் தலைவராக இருக்கும் ஹிட்லிரின் விருப்பம் என்று 1940ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் எழுதப்பட்டிருக்கின்ற அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹிட்லரின் எஸ்.எஸ். படையின் தளபதியான ஹீன்ரீச் ஹிம்லர்தான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்.

முன்னாள் நீதிபதியான ஏர்ன்ஸ் ஹெஸ் ஒரு யூத இனத்தவர் என்பதால் தொழிலை இழந்துள்ளார். அவரை நாஜிப் படையினர் அடித்து துன்புறுத்தியபோது, ஹிட்லருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

யூதர்களுக்கு எதிரான ஹோலோகோஸ்ட் படுகொலைகள் பெரும் எடுப்பில் நடந்து கொண்டிருந்தபோது, ஏர்னஸ்ட் ஹெஸ்ஸின் உயிருக்கு ஆபத்து வந்துவிடாமல் பாதுகாப்பதற்காக ஹிட்லர் தலையிட்டார் என்பதை இந்தக் கடிதம் வெளிப்படுத்துகிறது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் ஹிட்லரின் கட்டளை அதிகாரியாக ஏர்னஸ்ட் ஹெஸ் சிறிது காலம் இருந்திருக்கிறார்.

அதன் பின்னர் இரண்டாம் உலகப் போரின் போதுதான் ஹிட்லரின் நாஜிப்படைகளால் கொல்லப்படுவதிலிருந்து அவர் ஹிட்லரின் தலையீட்டின் மூலம் உயிர் தப்பியிருக்கிறார். அதன் பின்னர் அவர் அடிமைத் தொழிலாளியாக நடத்தப்பட்டிருக்கிறார்.

ஆனால், அவரது சகோதரி போலந்தில் நாஜிக்கள் நடத்திய அவுஸ்விச் வதை முகாமில் கொல்லப்பட்டார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்தபின்னர், அதாவது ஹிட்லர் கொல்லப்பட்ட பின்னர், ஹெஸ் மேற்கு ஜேர்மனியின் ரயில்வே அதிகாரசபைத் தலைவராகப் பணிபுரிந்தார்.



வியட்நாமுக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் கியூபாவின் ஜனாதிபதி றோல் கஸ்ரோ, வியட்நாமின் ஜனாதிபதி டுராங்ரோண் சாங்கைச் சந்தித்தார்.

## இரவு நேர விடுதி மீது துப்பாக்கிச் சூடு

பிரான்ஸின் இரவு நேர கேளிக்கை விடுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் காயமடைந்துள்ளனர். பிரான்ஸின் வடக்குப் பகுதியில் உள்ள லில்லி என்ற இடத்தில் இரவு நேர விடுதியில், கடந்த வாரம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே, பொட்ரி என்ற இடத்தில் உள்ள இரவு நேர கேளிக்கை விடுதியில், நேற்றுமுன்தினம் சிலர் நுழைய முயன்றனர். ஆனால், விடுதி நிர்வாகத்தினர் உள்ளே விட மறுத்ததால் அவர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் விடுதியில் இருந்த 10 பேர் படுகாயமடைந்தனர். வேட்டைக்கு வைத்திருந்த துப்பாக்கியைப் பயன்படுத்தியே இவர்கள் சுட்டுள்ளனர். அதன் பின் தாங்கள் வந்த திருட்டுக் காரில் ஏறிச் சென்று விட்டனர். இவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத்தைக் கூட்ட உத்தரவு

எகிப்தில், கடந்த மாதம் ராணுவ அரசால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும்படி, புதிய ஜனாதிபதி முகமது முர்சி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம், நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக சர்ச்சை எழுந்ததால் ராணுவ அரசின் தலைமையில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டது. இந்நிலையிலேயே முகமது முர்சி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

## 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பானை கண்டுபிடிப்பு

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிக நேர்த்தியாகச் செய்யப்பட்ட மனித சிலை, 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பானை ஆகியவை சீனாவில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் உள்ள சியான்ரண்டங் குகைப் பகுதியில் பெகிங் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் சமீபத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டனர். பேராசிரியர் சியாவ்ஹாங் தலைமையில் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதில் 20 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மண் பானையின் உடைந்த சில்லுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.



இதுகுறித்து சியாவ்ஹாங் கூறுகையில், உணவு தேடவும் வேட்டைக்காகவும் பழங்காலத்தில் மக்கள் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குச் சென்ற வண்ணம் இருந்துள்ளனர். அந்த காலகட்டத்தில் சமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட மண் பானையின் பகுதிதான் இது. சியான்ரண்டங் குகையில் இருந்து எலும்பு, கரி உள்ளிட்ட 45 பொருள்களும் கிடைத்துள்ளன. 29 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் குகையில் மக்கள் வசித்திருக்கலாம் என்று தெரிகிறது என்றார்.

சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள சிபெங் நகரிலும் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் தீவிர ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இதில் 55 செ.மீ. உயரமான சிலை ஒன்று கிடைத்துள்ளது. மிக நேர்த்தியுடன் வடிவமைக்கப்பட்ட இந்த மண் சிலை மதத் தலைவர், ஊர் தலைவர் அல்லது மந்திரவாதியின் சிலையாக இருக்கலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இது 5,300 ஆண்டுகள் பழமையானது என்றும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் ஜனாதிபதி மீது ஊழல் வழக்கு விசாரணை

இஸ்லாமாபாத், ஜூலை 10

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்கு, எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. பாகிஸ்தான் பிரதமராக பெனாசிர் பூட்டோ பதவி வகித்த போது, அவரின் கணவரான ஆசிப் அலி சர்தாரி, ஊழல் செய்து, பணத்தை சுவிஸ் வங்கிகளில் பதுக்கியதாக, வழக்குத் தொடரப்பட்டது. முஷாரப் ஜனாதிபதியாக இருந்த போது, இவர் மீதான வழக்கை, தள்ளுபடி செய்தார். இதற்குரிய அவசர சட்டம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத காரணத்தால், இந்த வழக்கை மீண்டும் விசாரிக்கும்படி, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.



உயர்நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தாத காரணத்தால், கடந்த ஏப்ரல் மாதம், யூஸூப் ரசா கிலானி மீது, நீதி மன்றம் அவமதிப்புக் குற்றம் சாட்டப்பட்டு, அவரது பதவி, தகுதி நீக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து, அஷ்ரப் புதிய பிரதமராகியுள்ளார்.

சர்தாரி மீதான ஊழல் வழக்கை, புதிய பிரதமர் அஷ்ரப் விசாரிக்க வேண்டும் என, பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் வற்புறுத்தியுள்ளது. இது தொடர்பாக, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை, எதிர்வரும் 12ஆம் திகதி, தெரிவிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து, அஷ்ரப் குறிப்பிடுகையில், ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஜனாதிபதி சர்தாரி. எனவே, அவர் மீது ஊழல் வழக்குத் தொடர்பான விசாரணை நடத்த முடியாது. சர்தாரி மட்டுமல்ல; உலகில் எந்த நாட்டு ஜனாதிபதி மீதும், வழக்குத் தொடர முடியாது. எனவே, ஜனாதிபதி சர்தாரி பதவியில் நீடிக்கும் வரை, அவர் மீது விசாரணை நடத்த முடியாது என்றார். சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிப்பதற்காக, ஆசிப் சயத் கோஷா தலைமையிலான மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி, இந்த மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவுக்கு அனுமதியளித்துள்ளார்.

**என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை, எதிர்வரும் 12ஆம் திகதி, தெரிவிக்கும்படி உத்தரவிடப் பட்டுள்ளது.**

## பிரிட்டன் பிரதமரின் கட்சியிலிருந்து 81 ஆயிரம் பேர் விலகியுள்ளனர்.

லண்டன், ஜூலை 10

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரான பின் சுமார் 81 ஆயிரம் பேர் கட்சியில் இருந்து விலகியுள்ளனர்.



கமரூன் 2005ஆம் ஆண்டில் கட்சியின் தலைவரானார். அடுத்த 6 ஆண்டுகளில் கட்சியின் அடிப்படை உறுப்பினர் என்ற நிலையில் இருந்து ஏராளமானோர் விலகியுள்ளனர்.

பிரிட்டனின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியில் இப்போது சுமார் 1 லட்சத்து 77 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர்.

கட்சியின் தலைவராகக் கமரூன் பொறுப்பேற்றபோது இந்த எண்ணிக்கை சுமார் 2 லட்சத்து 58 ஆயிரமாக இருந்தது. பிரிட்டன் பிரதமராக 2011 மே மாதம் டேவிட் கேமரூன் பதவியேற்றார்.

இதே காலகட்டத்தில் எதிர்க்கட்சியான தொழிலாளர்கள் கட்சியில் இருந்து 4 ஆயிரம் பேர் மட்டுமே விலகியுள்ளனர். இப்போது அந்தக் கட்சியில் 1 லட்சத்து 94 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர்.

மற்றொரு முக்கிய கட்சியான தொழிலாளர் ஜனநாயகக் கட்சியில் 65 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கின்றனர். 2005ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கட்சியில் இருந்து 8 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர்.

அதே நேரத்தில், உறுப்பினர்கள் சேர்க்கையை தீவிரப்படுத்தியிருப்பதாக 3 கட்சியினருமே தெரிவித்துள்ளனர்.


பிள்ளையார் இன் 'A' உல்லாசப் பயணிகள் தங்குமிடம் (A Grade Hotel approved by the Ceylon Tourist Board)

★ பிள்ளையார் இன் விடுதியில் காடின் றெஸ்றோறன்ட் காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும்.

★ மேலும் உங்களின் திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழா, வியாபார கலந்துரையாடல்கள், திருமண விருந்துகள் போன்றவற்றிற்கு உணவுகள் தயாரித்து (Buffet முறையில்) வழங்கப்படும் ஓடர்கள் முற்பணத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ விசாலமான வாகனத்தரிப்பிடம் 35 குளி ரூட்டப்பட்ட அறைகள், அதில் அதிவிசேட மூவர் தங்கும் 20 அறைகள், 2 மண்டபங்கள் யாவும் உண்டு. உங்களுக்கு வேண்டிய உணவுகளுக்கு 1 மணித்தியாலத்துக்கு முன் ஓடர் செய்துவிட்டுவரவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2829
தொலை நகல்: 021 222 4449
மின்னஞ்சல்: Email: pillaiyarin@gmail.Com
வலைப்பின்னல்: www. pillaiyarin.com

(20257) (45.6.7)


## அனல் காற்றால் 30 பேர் சாவு

அமெரிக்காவில் வெப்பநிலையின் அளவும் அனல் காற்றின் தாக்கமும் அதிகரித்துள்ளன. வெப்பத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலான மாகாணங்களில் 40 டிகிரி செல்சியஸூக்கும் அதிகமான வெப்பநிலை கடந்த சனிக்கிழமை பதிவாகியது.

வாஷிங்டனில் 40.5, ஸ்டெயின் லூயிஸில் 41, இன்டியானவில் 40, லூயிஸ் வில்லாவில் 40.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இப்போது கோடைக் காலம் நிலவிவருகிறது. இந்த நிலையில் மின் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

மின்சாரத் தடையும் இருப்பதால் வயதானவர்கள் வெப்பத்தைத் தாங்க முடியாமல் உயிரிழக்கின்றனர்.

மத்திய அட்லாண்டிக் பகுதியில் வசிக்கும் 1000க்கும் மேற்பட்ட மக்கள் கடந்த ஒரு வாரமாக மின்சாரம் இல்லாமல் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வாஷிங்டன் மாகாணத்தில் உள்ள பெப்கோ நிறுவனம், மின் பற்றாக்குறை நீடித்து வருவதால் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது


பிரிவின் இரண்டாம் ஆண்டு நினைவுநாள்

மலர்வு 06.02.1939 மறைவு 04.07.2010



பாசமுள்ள எமது அன்னை

திருமதி அன்னலெட்சுமி வல்லிபுரம் B.A

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி:- 10.07.2012 (செவ்வாய்க்கிழமை)

பாசமுடன் எமை பக்குவமாய் வளர்த்தெடுத்து
தேசத்தில் எமை சிறப்பாக வாழ வைத்து
நேசமாய் எம்முடன் மகிழ்ந்திருந்து மறைந்தாலும்
வாசம் செய்கிறீர் எம் மனதில் என்நாளும்....

352/6, இருபாலை வீதி,
கோண்டாவில்.

(20206) (2-6-7)

தங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.



# சர்வதேச அரியாலை தினம் -2012
INTERNATIONAL ARIYALAI DAY - 2012
ஜூலை 28.2012 சனிக்கிழமை

பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் அரியாலையைச்சார்ந்த மக்களது முதலாவது சர்வதேச அரியாலை தினம் எதிர்வரும் 28-07-2012 அன்று சனிக்கிழமை கொண்டாடப்பட உள்ளது. இத்தினத்தையொட்டிய பகல் விளையாட்டுப் போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்திலும். இரவு கலை நிகழ்ச்சிகள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கிலும் வெகுவிமரிசையாக இடம்பெற உள்ளன. இவ்விழாவை முன்னிட்டு கீழ்க்காணும் முன்னோடி விளையாட்டுப் போட்டிகள் வடமாகாண வீதியில் சாதாரண பொதுமக்கள் பங்குபற்றும் வகையில் நடத்தப்பட உள்ளன.

1. 15 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி (ஆண்கள்) - 1 ஆம் பரிசு துவிச்சக்கரவண்டி
2. 05 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி (பெண்கள்) - 1 ஆம் பரிசு பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி
3. தாச்சிப்போட்டி (ஆண்கள் 06 பேர்) - 1ஆம் பரிசு ரூபா 7500/=
4. 05 மைல் வீதியோட்டம் (ஆண்கள்) - 1ஆம் பரிசு ரூபா 7500/=

போட்டிகளில் பங்குபற்றுவோர் விண்ணப்பப்படிவத்தை நேரில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கீழுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A-4 அளவு வெள்ளைத் தாளில் தயாரித்து கீழ்க்காணும் முகவரியில் கிடைக்கக்கூடியதாக நேரில் சமர்ப்பிக்கலாம் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 21.07.2012**

*S.T. பத்மநாதன்,*
*169, கண்டி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி:0212226217*

*ச. உருத்திரேஸ்வரன்,*
*125/2, ஆனந்தன் வடலி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி:0776935280*

விண்ணப்பப்படிவம்
சர்வதேச அரியாலை தினம்-2012
INTERNATIONAL ARIYALAI DAY - 2012

1. பங்குபற்ற விண்ணப்பிக்கும் போட்டி :...............
2. முதலெழுத்துக்களுடன் பெயர்(தமிழ்) :...............
Name with initials (English) :...............
3. முதலெழுத்துக்கான பெயர்(தமிழ்) :...............
Name Denoted by initials (English) :...............
4. வசிப்பிட முகவரி :...............
:...............
5. பிறந்த திகதி :...............
6. தேசிய அடையாள அட்டை இல. :...............
7. வசிப்பிட கிராம உத்தியோகத்தர்பிரிவின் பெயரும் இலக்கமும் :...............
8. பிரதேச செயலர் பிரிவு :............... 9. மாவட்டம்:...............

என்னால் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகிறேன். தவறுகள் காணப்படுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

............... திகதி ............... போட்டியாளரின் ஒப்பம்

வசிப்பிடத்தை கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல்

மேலே விண்ணப்பிக்கும் போட்டியாளர் திரு/திருமதி/செல்வி :...............
............... எனது பிரிவில் வசிக்கின்றார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

............... திகதி ............... கிராம உத்தியோகத்தர் ஒப்பம் (ரபர் முத்திரை)

தாச்சிப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் குழுக்கள் பங்குபற்றும் 10 வீரர்களின் முழுப் பெயர் தே.அ.அ ஆகியவற்றை இணைக்கவும்.

(20197) (5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(22)

**எல்லாம் அங்கே உள்ளன**

கதே கூறினார், நீ எங்கு இருக்கிறாயோ அங்கே எல்லாம் உள்ளன.'' ஒரு செயலைச் செய்வதை எதிர்பார்க்காமலும், செய்து முடித்த பின் அதைப்பற்றிக் கவலைப்படாமலும், உங்கள் கையில் ஒரு செயலின் மீது முழுத்திறமையை உபயோகித்து செய்து முடிப்பது ஒரு பெரிய இரகசியம் ஆகும்.

**உங்கள் சக்திகளை ஒரு முனைப்படுத்துங்கள்**

கார்னகி கூறுகிறார், ''வியாபாரத்தில் உள்ள இளைஞர்களின் தோல்விக்கு மிகப் பெரிய காரணம் மனஒருமைப்பாடின்மையே ஆகும்.'' உயர்ந்த நிலையை அடைந்த ஒவ்வொருவரும், வெற்றி பெற்ற ஒவ்வொருவரும், தங்களது சக்திகளை ஒன்று திரட்டி ஒரு வழியில் செலுத்தினர் இல்லையா? பல செயல்களை அலட்சியத்துடன் செய்வது முக்கியமானதல்ல. ஆனால் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு அவசியமான செயலை மிகச் சிறப்பாகச் செய்வதே முக்கியம் ஆகும். ஒருவன் ஆழ்ந்த மன ஒருமைப் பாடுடன் இருக்க வேண்டிய வயதில், தனது முயற்சிகளைச் சிதற அடித்தால் அவன் வெற்றி பெற நினைக்க முடியாது. மனதை ஒரு முனைப்படுத்திக் கொள்ளும் திறமையின்மையே தோல்வியின் காரணம் ஆகும். நிச்சயமற்ற இலக்கு, நிச்சயமற்ற நோக்கம் ஆகியவற்றுக்கு இந்த நூற்றாண்டில் எந்த இடமும் இல்லை. தவறான உழைப்பு ஒரு வீணான செயல் ஆகும். பலர் எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கக் கூடும். ஆனாலும், ஒரு போதும் தங்களது பாதையில் முன்னேறிச் செல்வதில்லை. ஒரு சிறுவன் தனது சிறிய எஞ்சின் பொம்மையைப் பற்றிச் சொன்னான். ''அது ரயில் எஞ்சினைப் போல புகைவிட்டது. அது நீராவி எஞ்சினைப் போல விசிலடித்தது. ஆனால், அது எங்கேயும் போகவில்லை.''

**பசுவின் மீது குறி**

விவசாயி புதியதாக வேலைக்குச் சேர்ந்தவனிடம் சொன்னார், இங்கே பார். அந்த விதமாகச் சரியாக உழவு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் உழவுச் சாலில் வளரும் பயிர் வளைந்து முளைக்கும். வயலுக்கு எதிரில் உள்ள ஏதாவது ஒன்றின் மீது உன்பார்வையை நிறுத்தி, அதை நோக்கிச் செல். நமக்கு எதிரே அந்தக் கதவிற்கு அருகில் உள்ள பசுவைப் பார். உன் ஏரைப்பூட்டி பசுவின் மீது குறி வைத்து உழ ஆரம்பித்தால், நேரான உழவுச் சால்களை உண்டாக்கி விடுவாய்.''

''சரி சேர்.''

பத்து நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்த விவசாயி, உழவுச்சால்கள் நிலம் முழுவதிலும் இங்கும் அங்குமாக கோணலாக இருப்பதைக் கண்டார்.

'நிறுத்து. உழுவதை நிறுத்து.''

''மன்னியுங்கள். நான் நீங்கள் சொன்னதைப் போலத் தான் செய்தேன். நான் அந்தப் பசுவை நோக்கித்தான் நேராக உழுது கொண்டு சென்றேன். ஆனால், அது ஓர் இடத்தில் நிலையாக நிற்கவில்லை.'' என்றான் அந்த வேலையாள் பேட்ரிக். குழப்பமளிக்கும் இலக்கு. இங்கும் அங்கும் அலையும் மனதைப் பின்பற்றுதல், நோக்கமற்ற செயல், யோசனையற்ற செயல், தொழிலை அலட்சியத்துடன் காண்பது- இவை அனைத்தும் தோல்வியை மட்டும் வரவேற்பவை ஆகும்.

வெற்றி பெற்றவருக்கும், தோல்வி அடைந்தவருக்கும் இடையேயுள்ள மிகப்பெரிய வித்தியாசம் எதுவெனில், அது ஒவ்வொருவரும் செய்த வேலையின் எண்ணிக்கை அளவு அன்று. ஆனால், அது புத்திசாலித்தனமாக செய்த வேலையின் எண்ணிக்கை அளவே ஆகும். ஒற்றைத்திறமை உடைய ஒரு மனிதன் தனது சக்திகளை ஒரு சலனமற்ற இலக்கின் மீது ஒரு முனைப்படுத்தும்போது, பத்துத் திறமைகளை உடைய ஒரு மனிதன் தனது சக்திகளை சிதற அடித்துவிட்டு அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என அறியாமல் இருக்கின்றான். அவனைக்காட்டிலும், ஒரு திறமை மட்டுமே உடையவன் தனது இலக்கை எளிதில் அடைந்து விடுகிறான். அனைத்தையும் இணைத்துக் கொள்ளும் நோக்கத்தின் இடத்தை மற்ற எதைக் கொண்டும் நிரப்ப முடியாது.- கல்வியாலும் முடியாது; அறிவுத் திறனாலும் முடியாது; திறமையாலும் முடியாது; உழைப்பாலும் முடியாது; உள்ளத்தின் வலிமையாலும் முடியாது. நோக்கமற்ற வாழ்வு எப்போதும் தோல்வியாகவே இருக்கும்.

**அமெரிக்க இந்தியர்கள் எவ்விதம் செயல்படுகின்றனர்**

ஒரு நாடக ஆசிரியர் எங்களிடம் கூறியதைப் போல, அதிர்ஷ்டம் சுக்கான் பொருத்தப்பட்ட சில படகுகளை அளிக்கின்றது என்பது உண்மையானாலும் கூட,தனது மார்க்கத்தில் உறுதியின்றி- ''வளைந்து வளைந்து'' என மாலுமிகள் சொல்லுவதுபோல முதலில் இந்த வழி, பிறகு அந்த வழி எனப் படகைச் செலுத்துபவன், அவனது வாழ்க்கைப் பயணம் பாதி முடிவடைவதற்கு முன்னமேயே கைவிடப்படுவான் என்பது உறுதி. நாம் மாலுமிகள் உபயோகிக்கும் திசைமானி தயாரிக்கும் தொழிற்சாலைக்குச் சென்றால், அதன் ஊசிகள் காந்தமாக்கப்பட்ட பிறகு, தனியானதொரு சக்தியைப் பெறுகின்றன. அந்த நொடியிலிருந்து அவை வடக்குத் திசையைச் சுட்டிக்காட்டி நிற்கின்றன. எந்த மனிதனும் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதால் காந்தமாக்கப்படும் வரையில், எந்த ஒரு திசையையும் நிலையாகக் காண்பதில்லை. திட்டமிடாமல் செயல்படுவது திசைமானி இல்லாமல் கடலுக்குச் செல்வதைப் போல முட்டாள்தனமானது ஆகும்.

-ஓரிசன் ஸ்வெட் மார்டன்-

*(தொடரும்)*

# மக்களுக்கான சேவைகள் நீண்டகாலம் பயன் தரவேண்டும்

## ஜேர்மன் சமூக சேவை அமைப்பின் தலைவர் உரை

குருநகர், ஜூலை 10

பொது அமைப்புக்கள் மக்களுக்கு வழங்கும் சேவைகள் நீண்ட காலத்துக்குப் பயன் தரக் கூடியனவாக இருத்தல் வேண்டும் -இவ்வாறு தெரிவித்தார் குருநகரில் அமைந்துள்ள ஜேர்மன் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் யூ.ஜெயக்குமார்.

கல்வி மனிதனைப் பூரணப்படுத்துகிறது. கல்வியின் விளைவு நீண்ட காலத்தில் தெரியும். இந்தநிலைமையில் பாடசாலை மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

குருநகர் சனசமூக நிலையத்தின் நூலகம் ஜேர்மன் சமூக சேவைகள் அமைப்பின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருநகர் - ஜேர்மன் சமூக சேவை அமைப்பு குருநகரில் இருந்து புலம் பெயர்ந்த மக்களின் நிதிப் பங்களிப்புடன் இயங்கி வருகிறது. எமது அமைப்பானது எமது சமூகத்துக்குத் தேவையான விடயங்களை நீண்டகாலத்துக்கு பயன்பெறக்கூடிய வகையிலேயே செய்து வருகிறது.

கல்வி மனிதனைப் பூரணப்படுத்துகிறது. கல்வியின் விளைவு நீண்ட காலத்தில் தெரியும். இந்த நிலைமையில் பாடசாலை மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

பாடசாலைகளில் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்காக பல பின்னூட்டல் வகுப்புக்களை அதிபர்களின் அனுமதியுடன் நடத்தி வ்ருகின்றோம்.

செயற்படாமல் இருந்த இந்த நூலகத்தை ஐந்து வருடங்களுக்கு பொறுப்பேற்று புனரமைத்துள்ளோம். மாணவர்களுக்கான நூல்களையும் வழங்கியுள்ளோம்.

மாணவர்கள் இங்கு தாமாகவே வந்து இந்த நூல்களை வாசித்துப் பயனடையலாம். வாசிப்பு என்பது ஒரு மனிதனைப் நிறைவாக்கும். இதை உணர்ந்து மாணவர் நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும்.

எமது ஊரின் வளர்ச்சியை தூர நோக்கில் சிந்தித்து, மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம். மாணவர்கள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் கற்க நல்ல சூழல் அமைய வேண்டும். எமது வளங்களை இனங்கண்டு ப்யன்படுத்தினால் எமது ஊரை முன்னேற்ற முடியும்- என்றார்.

(ம-51)

# கற்றல் செயற்பாட்டுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 10

உரும்பிராய் செரண்டிப் சிறுவர் இல்லம் வறிய மாணவர்கள், மற்றும் மாற்றுவலுவுடையோர்களின் வாண்மை விருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் போட்டிகளை நடத்துவதுடன், அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு தேவையான நிதி உதவிகளையும் மாதாந்தம் வழங்கி வருகின்றது.

இதற்கமைவாக அண்மையில் சுன்னாகம் வாழ்வகம், உடுவில் ஆர்க் இல்லம் ஆகியவற்றில் உள்ள மாணவர்களுக்கிடையே போட்டிகளை நடத்தி பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் மற்றும் மாற்று வலுவுடைய மாணவர்களின் திறன்களையும் விருத்தி செய்யும் நோக்குடன் மாதம் தோறும் இந்தப் போட்டிகளை செரண்டிப் சிறுவர் இல்லம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-14)

# புதிய அதிபர் நியமனம்

வடமராட்சி, ஜூலை10

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் புதிய அதிபராக, மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் கே.கனகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேல் அதிபாராகப் பணியாற்றிய கே.சிவசிதம்பரம் இளைப்பாறிச் சென்றதையடுத்தே புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(எ-8)

# பட்டதாரிகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி,ஜூலை 10

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

அலுவலக நடைமுறைகள் நிதித் திட்டமிடல் சமுர்த்தி, வீடமைப்பு, காணி, ஆட்பதிவு, பிறப்பு இறப்புப் பதிவு, கணினி பயன்பாடு உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களால் இவை நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை 250 இற்க்கும் மேற்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-9)

# ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

காரைநகர்,ஜூலை

காரைநகர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தரம்-9**

முதலாம் இடம்- டர்மிதா யோகானந்தன் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- நவனிலா மகாதீவன் (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்- துருசிகா மோகநாதன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-10**

முதலாம் இடம்- கருனிதா யோகராசா (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்-சிவகௌரி மயில்வாகனம் (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்-அபிராமி ஆறுமுகசாமி (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.)

**செய்தி வாசித்தல் போட்டி**

**தரம்-11**

முதலாம் இடம்- திவ்யா அமிர்தலிங்கம் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம், கஸ்தூரி கோபாலப்பிள்ளை (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) மூன்றாம் இடம்- சாந்தினி கனகலிங்கம் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.)

**தரம்-12**

முதலாம் இடம்- கணேஸ் குமாரி பரமநாதன் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- றொசானி திருவாதிரை (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.),மூன்றாம் இடம்- கலைச்செல்வி ஞானசேகரம் (யாழ்ரன் கல்லூரி)

**.தரம்-13**

முதலாம் இடம்-பிருந்தா அம்பலவாணர் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்-பிருந்தா சக்திவேல் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- டயானி சிவசாமி (யாழ்ரன் கல்லூரி)

**நாடகப் போட்டி**

**தரம்-8**

முதலாம் இடம்- யாழ்ரன் கல்லூரி

**தரம்-10**

முதலாம் இடம்- டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி., இரண்டாம் இடம்- யாழ்ரன் கல்லூரி

**தரம்-3**

முதலாம் இடம் - ஜெயநந்தினி அரிகரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.), இரண்டாம் இடம்- எஸ். ஜனோசனா (மெய்கண்டான் வித்தி.) மூன்றாம் இடம்- கீர்த்திகா தவநாதன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

**தரம்-4**

முதலாம் இடம்-தர்சிகா கந்தவேல் (யாழ். சுப்பிரமணிய வித்தி.), இரண்டாம் இடம்-துஸ்யந்தி ராஜேந்திரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.) மூன்றாம் இடம்-சர்வேஸ்வரன் ரகுராமன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

**தரம்-5**

முதலாம் இடம்- ஈஸ்வரி சிறிஸ்குமார் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- சஜிதா சௌந் தரராஜா (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.) ,மூன்றாம் இடம், செந்திநாதன் கஜரூபன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-6**

முதலாம் இடம்- ஏகாம்பரம் கோபிநாத் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- கிருபால் காருண்யன் (யாழ்ரன் கல்லூரி), மூன் றாம் இடம்- நாகதீபா செல்வக் குமார் (யாழ்ரன் கல்லூரி).

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆபிரிக்காவில் வகுப்பறைகளை தேடும் இலங்கை

இலங்கை, ஆபிரிக்க நாடுகள் நோக்கி தனது ராஜதந்திர உறவுகளை விஸ்தரிக்கவுள்ளது என்ற செய்தி கடந்த வாரத்தின் தகவல் தளங்களை வியாபித்திருந்தது. குறிப்பாக மேற்கு ஆபிரிக்க நாடுகள் எனப்படும், இப்போதும் மண்டிக் கிடக்கும் தேசங்கள் நோக்கியே தனது புதிய தரிசனத்தை மேற்கொள்ள இலங்கை தயாராகிவருகின்றது.

உலக வரைபடத்தில் அதிகம் அறியப்படாத மேற்காபிரிக்க நாடுகளான மொரிட்டானியா, மலாவி, புர்கினா பாசோ, சாட், மாலி, டிஜிபோட்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, காபோனேஸ் குடியரசு, கமரூன், ஐவரிகோஸ்ட், ஈக்வடோரியல் கினியா, காம்பியா, கேப் வேடே, சியராலாலியோன், டோகோலிஸ் குடியரசு, நைஜீரியா போன்றவற்றுடனேயே தனது புதிய உறவை இலங்கை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிகின்றது.

பொதுவாக வறுமை, உள்நாட்டுக்கிளர்ச்சி, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் போன்ற மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகளால் பிரபல்யமான இந்த நாடுகள் இப்போது இலங்கையின் நட்பு நாடுகளாக மாறியிருக்கின்றன. இலங்கையில் இந்தப் பொதுப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் அந்த வரிசையில் இணைந்து கொள்ளப் பிரயத்தனப்படுகின்றது.

மொரிட்டானியாவில் 1990 தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பெரும் உள்நாட்டுக் கலவரம் நடந்தது. இதில் வாழ்வுரிமை கேட்டு மொரிட்டானிய அரசோடு போராடிய சொங்கியோ என்ற பழங்குடி இனத்தவரில் 3 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் பேர் வரையிலானோர் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் குற்றத்தை சர்வதேச ஊடகங்களும், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் பதிவு செய்து வைத்துள்ள போதும் மொரிட்டானிய அரசு மீது இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இது போல் மாலி என்ற நாட்டிலும் அங்கு வாழும் சிறுபான்மையினர் மீது வன்முறைகளை அரசு கட்ட விழ்த்து வருகின்றது. அந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான துவாரக் இனத்தவர் மீது அரசு தொடர்ச்சியான மிலேச்சத் தனத்தை மேற்கொள்கின்றது. அந்த மக்கள் இதனாலேயே தனி நாடு கேட்டுப் போராடத் தொடங்கி இப்போது தமது லட்சியத்தையும் அடைந்து விட்டனர்.

அந்தப் போராட்ட காலத்தின் போது மாலி அரச படைகள் துவாரக் இனப் பெண்கள் மீதும் சிறுவர்கள் மீதும் மேற்கொண்ட வன்முறைகள் மனித நேயத்துக்கு அப்பாலானவை. ஆனால் அதுவும் சர்வதேச சமூகத்தவரால் கண்டு கொள்ளப்பட வில்லை. குறித்த நாடுகளின் தலைவர்களும், குற்றமிழைத்த இராணுவத் தளபதிகளும் இன்றும் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

ஐவரிக் கோஸ்டின் இராணுவத்தளபதி ஒருவர் மட்டும்தான் இதுவரையில் போர்க் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையும் மேற்காபிரிக்கா நாடுகள் போலவே மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நெருக்கடியை இப்போது சந்தித்து வருகின்றது. இந்த அழுத்தங்களை சமாளிக்க இலங்கைக்கு வழிதெரியாத நிலை பல தடவைகள் ஏற்பட்டு விட்டது. ஆகவே எங்கிருந்தாவது கற்றுக் கொள்ள பாடங்கள் அவசியமாகின்றது. அந்தப் பாடங்களை அதிகம் வைத்திருப்பது மேற்காபிரிக்க நாடுகள்தான். எனவேதான் இலங்கை இப்போது தனது ராஜதந்திர பயணத்தை மேற்காபிரிக்க நாடுகள் நோக்கி நகர்த்துவதாகக் கூறிக் கொண்டு, அனுபவ கற்றலுக்கான வகுப்பறைகளை அங்கு தேடத் தொடங்கி இருக்கிறது. அது வெற்றிகரமாக அமையுமா என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்.

# கைவிடப்படும் தமிழ் அகதிகள்



நாங்கள் தற்போது இக்கட்டான சூழலுக்கு முகங்கொடுக்கிறோம். மக்களுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கக்கூடிய நல்வாய்ப்புக்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உதவி வழங்குநர்களாகிய நாம் தொடர்ந்தும் செயற்பட வேண்டியது இன்றியமையாதது.

உணவு, வீடு, பாதுகாப்பு மற்றும் போசாக்குப் போன்றவை முக்கியமாகத் தேவைப்படுகின்ற இலங்கையின் வடக்கைச் சேர்ந்த மக்களுக்குச் சென்றடைகின்ற உதவித் தொகையானது மிக அரிதாகவே காணப்படுகின்றது. உள்நாட்டுப் போரின் நீண்ட காலப் பாதிப்பைச் சந்தித்த இந்த மக்கள், போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும்கூட தற்போதும் அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி நிறுவனங்களை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

''நாங்கள் தற்போது இக்கட்டான சூழலுக்கு முகங்கொடுக்கிறோம். ஏற்கனவே மக்கள் அடைந்து கொள்ள நல்வாய்ப்புக்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உதவி வழங்குநர்களாகிய நாம் தொடர்ந்தும் செயற்பட வேண்டியது இன்றியமையாதது'' என மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைக்கும் ஐ.நா. அமைப்பின் இயக்குநர் வின்சென்ற் லெவீ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கான 'உதவி வழங்கலுக்கான கூட்டுத் திட்டம்' என்கின்ற திட்டத்தின் கீழ் 2012இல் 147 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், ஆனால் ஜூலை 6 வரை 17.5 சதவீத நிதி மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், மேலதிகமாக இன்னமும் 122 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், உதவி தேவைப்படும் மக்களுக்கு தொடர்ந்தும் உதவித் திட்டங்களை வழங்கவேண்டிய தேவையுள்ளதாகவும் ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

தங்குமிடம், வாழ்வாதாரம் மற்றும் நிலக் கண்ணிவெடி அகற்றல் போன்ற முக்கிய துறைகளுக்குப் போதியளவு நிதி கிடைக்கப் பெறவில்லை என, இலங்கையில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்கள், செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம், தனிப்பட்ட உதவி அமைப்புக்கள் போன்ற பல்வேறு அனைத்துலக மனிதாபிமான நிறுவனங்களின் அறிக்கைகளைத் தொகுத்து ஐ.நாவின் நிதியியல் கட்டுப்பாட்டு மையத் தரவுத் தளத்தால் வெளியிடப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''சில வேலைத் திட்டங்களுக்கு எந்தவித நிதியும் ஒதுக்கப்படவில்லை. நீர் மற்றும் தூய்மையாக்கலுக்கு 5 மில்லியன் டொலர்களும், நிலக் கண்ணி வெடியகற்றலுக்கு 29 மில்லியன் அமெரிக்க டொலர்களும் தேவைப்படுகின்றன. இவ்வாறான திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு உதவி அமைப்புக்கள் பின்நிற்கின்றன. நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு 40 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்ற போதிலும் இதன் 70 சதவீதமான நிதி கிடைக்கப் பெறவில்லை'' என லெவீ குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய உதவி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்றன பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிரந்தர வீடுகளை அதிகளவில் கட்டித் தரமுன்வந்துள்ள போதிலும்கூட இலங்கையின் வடக்கில் நிரந்தர வீடுகள் மிகப் பெரும் எண்ணிக்கையில் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது'' என ஐ.நா குடியிருப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கான பிரதம தொழிநுட்ப ஆலோசகர் டேவிட் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

''உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடக்கில் வாழும் 300,000 வரையான ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்வதில் கணிசமான அளவில் நிதிசார்ந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த அமைப்பானது தனது பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியேற்படலாம்'' என உலக உணவுத் திட்ட அமைப்பின் பேச்சாளர் போலெற் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

''சீனி, அரிசி, எண்ணெய் மற்றும் இதர உலருணவுப் பொருள்களுக்கான வழங்கலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் உதவி வழங்குநர்கள் தொடர்ந்தும் நிதியை வழங்காது விடில், பயனாளிகளுக்கு வழங்குகின்ற உலருணவு நிவாரணத்தின் அளவைக் குறைக்க வேண்டிய நெருக்கடி ஏற்படலாம்'' என ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது பெரும்பாலான ஐ.நா. அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை மீள ஆராயத் தொடங்கியுள்ளதுடன் தமது செயலகங்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறான போக்கானது 2013 முழுவதும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இலங்கையானது அமைதி நிலவும் மத்திய வருவாயைப் பெறும் நாடு என உலக வங்கி அறிவித்துள்ளது. இந்த நிலையில் உதவி வழங்குநர்கள், மனிதாபிமானத் தேவை அதிகம் உள்ள இடங்களில் தமது நிதியைச் செலவிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையின் வடக்கில் பணிபுரியும் 32 அனைத்துலக அரச சார்பற்ற அமைப்புக்களும் நிதி நெருக்கடியால் அவதிப்படுகின்றன. ''உண்மையில் நிதியைப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமானதாக உள்ளது. நாங்கள் பெரும் துன்பங்களை எதிர் நோக்குகின்றோம். நிதி வழங்குநர்களின் நிதி ஐக்கிய நாடுகள் சபையைச் சென்றடைகின்றது. இந்த நிலையில் எமக்கான நிதியீட்டம் பற்றாக்குறையாக உள்ளது'' என இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜோஸ் றவனோ தெரிவித்துள்ளார்.

பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்கனவே தமது செயற்பாடுகளையும் தமது பணியாளர்களையும் குறைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் நிலக்கண்ணி வெடி அகற்றும் அனைத்துலக அரசசார்பற்ற அமைப்பொன்று நிதி நெருக்கடியால் கடந்த மே மாதத்தில் 200 உள்ளூர் பணியாளர்களைப் பணியிலிருந்து நீக்கியது. ஆனால் நிலக்கண்ணி வெடி அகற்றாததால் குறிப்பிட்ட எண்ணிக்கையான ம்க்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

இதைவிட விஸாவைப் புதுப்பித்தல், அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பல்வேறு நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கும் இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புக்கள் முகங்கொடுக்கின்றன. போர் நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கை அரசானது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்தமையும் தெரிந்ததே.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம் பெயர்ந்த 445,000 வரையான மக்கள் தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதாகவும், இவர்களில் 229,227 ஏப்ரல் 2008 இற்குப் பின்னர் இடம் பெயர்ந்தனர் எனவும் 215,985 பேர் ஏப்ரல் 2008 இற்கு முன்னர் இடம்பெயர்ந்தனர் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இலங்கையில் போர்ப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு தொடர்ந்தும் உதவி செய்யவேண்டியது முக்கியமானதாகும். போரால் பாதிக்கப்பட்ட, போரின் வடுக்களைத் தாங்கி நிற்கும் மக்களுக்கு சேவை செய்வதற்கு நாட்டில் மீள் இணக்கப்பாடு மற்றும் அமைதி என்பன நிலைநாட்டப்பட வேண்டும் என லெவீ வலியுறுத்தியுள்ளார்.

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கடவுளற்ற துகள்

என்.ராமசாமி

அணுவைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அணு என்பது எலக்ட்ரோன், புரோட்டான், நியூட்ரோன் என்ற துகள்களால் ஆனது என்று சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னரே ரூதர்போர்ட் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்துக் கூறினார்.

அதன் பின்னர் விஞ்ஞானிகள் அணுவை மேலும் மேலும் ஆழ்ந்து ஆராயத் தொடங்கினர். இதன் பலனாக துகள் இயற்பியல் என்ற தனித்துறை உருவாகியது. அடிப்படையான துகள்கள் யாவை என்று தொடர்ந்து ஆராய முற்பட்டபோது மொத்தம் 16 துகள்களே அடிப்படையான துகள்கள் என்று கண்டறியப்பட்டது. கல், மண், பேனா, பென்சில், கார், விமானம், பூமி, சூரியன், நட்சத்திரங்கள், அண்டங்கள் இப்படியாக அனைத்துக்கும் அவற்றின் இயக்கத்துக்கும் இந்த 16 துகள்கள்தான் அடிப்படை.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இயற்பியல் துறையில் இரு வகையான விஞ்ஞானிகள் உள்ளனர். ஒரு வகை விஞ்ஞானிகள் காகிதம், பென்சில் ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்தி தங்கள் சிந்தனை ஆற்றல் மூலம் இது இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படியான துகள் இருந்தாக வேண்டும் என்று கூறுபவர்கள். இவர்களைக் கொள்கை விஞ்ஞானிகள் என்று வருணிக்கலாம். இவர்கள் கூறியவை சரிதானா என்று பரிசோதனைகள் மூலம் ஆராயும் விஞ்ஞானிகள் இன்னொரு வகை. ஐன்ஸ்டீன் முதல் வகையைச் சேர்ந்தவர்.

அடிப்படைத் துகள்கள் 16 என்று சொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டனில் எடின்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீற்றர் ஹிக்ஸ் என்ற விஞ்ஞானியும் அவர் போலவே மேலும் சில விஞ்ஞானிகளும் இன்னொரு முக்கியமான துகள் இருந்தாக வேண்டுமே என்று 1964ஆம் ஆண்டளவில் கூறினர். விஞ்ஞானி ஹிக்ஸ் கூறிய துகள் போஸான் என்ற வகையைச் சேர்ந்தது. அதுவரை அறியப்படாத அந்தத் துகளுக்கு ஹிக்ஸ் போஸான் என்று பெயர் வைக்கப்பட்டது. அதாவது ஹிக்ஸ் கூறிய வகையைச் சேர்ந்த போஸான் என்பது அதன் பொருள். இந்த போஸானை எங்கே தேடுவது? பொதுவில் போஸான் வகைத் துகள்கள் அல்பாயுசு கொண்டவை. தோன்றிய சில கணங்களில் வேறு வகைத் துகளாகி விடும்.

ஹிக்ஸ் தாம் குறிப்பிட்ட போஸான் துகள் பற்றி ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்லி வைத்தார். அதாவது எல்லா அடிப்படைத் துகள்களும் வெவ்வேறு அளவில் நிறை கொண்டவை. நிறை வேறு எடை என்பது வேறு. என்றாலும் எளிதில் புரிந்து கொள்ள நிறை என்பதை எடை என்றும் சொல்லலாம். 16 அடிப்படைத் துகள்களுக்கும் நிறை இருப்பதற்கு ஹிக்ஸ் போஸான்தான் காரணம் என்று அவர் சொன்னார். ஆகவே ஹிக்ஸ் போஸானைக் கண்டுபிடிப்பது மிக அவசியமாகியது. தவிர, அணு முதல் அண்டம் வரையிலான அனைத்தையும் விளக்கும் வகையில் விஞ்ஞானிகள் கடந்த பல ஆண்டுகளில் பிரபஞ்ச இயக்கக் கோட்பாடு என்ற ஒட்டுமொத்தக் கொள்கையை உருவாக்கியுள்ளனர். ஹிக்ஸ் போஸானைக் கண்டுபிடிக்காவிட்டால் இந்தக் கொள்கையில் பெரிய ஓட்டை இருப்பதாகி விடும். ஆகவேதான் ஹிக்ஸ் போஸானைத் தேடுவது முக்கிய விடயமாகியது.

ஹிக்ஸ் போஸானை எங்கே கண்டுபிடிப்பது? இங்கு ஐன்ஸ்டீன் உதவிக்கு வருகிறார். பொருளை ஆற்றலாக மாற்றலாம். அதே போல ஆற்றலையும் பொருளாக மாற்றலாம். ஐன்ஸ்டீனின் விஞ்ஞானக் கொள்கையின் அர்த்தமே அதுதான். ஆகவே பெரும் ஆற்றலைத் தோற்றுவிக்கும் போது நுண்ணிய துகள் வடிவில் பொருள் தோன்றும். உதாரணமாக, புரோட்டோன்களைப் பயங்கர வேகத்தில் ஒன்றோடு ஒன்று மோதவிட்டால் பெரும் ஆற்றல் தோன்றும். அப்போது தோன்றும் நுண்ணிய துகள்களை ஆராய்ந்தால் அவற்றில் ஹிக்ஸ் போஸான் தட்டுப்படலாம்.

துகள்களை இப்படி மோத விடும் ஆராய்ச்சியை விஞ்ஞானிகள் நீண்ட காலமாகவே செய்து வருகிறார்கள். ஆரம்ப காலத்தில் இது ஆட்டுக் கிடாய் சண்டை போல சிறிய அளவில் இருந்து பின்னர் டைனோசார்களை மோத விடுவதைப்போன்ற அளவுக்குப் பெரிதாக வளர்ந்தது. அமெரிக்காவில் இருந்து வந்த பெர்மிலாப் என்ற துகள் மோதல் ஆராய்ச்சிக் கூடம் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்தது. பின்னர் ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஜெனீவா நகருக்கு அருகே பாதாளத்தில் பிரம்மாண்டமான துகள் மோதல் ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவியதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பெர்மிலாப் அண்மையில் மூடப்பட்டது.

ஜெனீவா அருகே அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக்கூடம் சுருக்கமாக செர்ன் என்று அழைக்கப்படுகிறது. இங்கு 100 மீற்றர் ஆழத்தில் புரோட்டோன்களை மோத விடும் ஆராய்ச்சிக் கூடம் உள்ளது. குதிரைப் பந்தய மைதானம்போல இது வட்ட வடிவில் உள்ளது. இங்கு வலுவான காந்தக் கட்டைகளைப் பயன்படுத்தி புரோட்டோன்களை விரட்டோ விரட்டு என்று விரட்டுவார்கள். இரு புறங்களிலும் ஆள்கள் நின்று கொண்டு ஒரு குதிரையை மாறி மாறி சவுக்கால் அடித்தால் அது மேலும் மேலும் வேகமாக ஓடும். புரோட்டோன்கள் அதுபோல விரட்டப்படுகின்றன.

27 கிலோ மீற்றர் சுரங்கப் பாதையில் விசேட சூழ்நிலைகளில் புரோட்டோன்கள் கிட்டத்தட்ட ஒளி வேகத்தில் பாய்ந்து செல்லும் வகையில் விரட்டப்படும். அதேசமயத்தில் எதிர்ப்புறத்திலிருந்து இதே வேகத்தில் புரோட்டோன்கள் பாய்ந்து வரும். எதிரும் புதிருமாக அதி வேகத்தில் வருகின்ற இந்தப் புரோட்டோன்கள் ஒரு கட்டத்தில் ஒன்றோடு ஒன்று மோதும்படி செய்யப்படும். பல கோடி புரோட்டோன்கள் இவ்விதம் ஒன்றோடு ஒன்று மோதும். அப்போது கம்பி மத்தாப்பிலிருந்து பொறிகள் வெளிப்படுவதைப் போல ஒளிக் கீற்றுகள் பிறக்கும். பயங்கர மோதலின் விளைவாகப் பெரும் ஆற்றல் வெளிப்படும். ஆற்றல் துகள்களாக மாறலாம் என்ற கொள்கையின்படி பல துகள்கள் நாலா புறங்களிலும் பாயும். இவற்றில் பலவும் உடனே வேறு துகள்களாக மாறும்.

இந்த மோதல்களின்போது தோன்றும் விளைவுகளை மிக நுட்பமான கெமராக்கள் படம் எடுக்கும். அந்தப் படங்களை விஞ்ஞானிகள் நுணுக்கமாக ஆராய்வர். ஜெனீவா ஆராய்ச்சிக்கூடத்தில் கடந்த பல மாதங்களாக விஞ்ஞானிகள் ஹிக்ஸ் போஸான்கள் தொடர்பாக மிகத் தீவிரமாகப் பரிசோதனைகளை நடத்தி கடந்த புதன்கிழமையன்று முடிவுகளை அறிவித்தனர். இதுவரை இல்லாத அளவுக்குப் பெரும் ஆற்றலைத் தோற்றுவித்ததால் இப்போதைய பரிசோதனைகளில் ஹிக்ஸ் போஸான்கள் தட்டுப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஹிக்ஸ் போஸான்கள் என்று சொல்லத்தக்க துகளைக் கண்டுபிடித்து விட்டோம் என்று தோன்றுகிறது என்று விஞ்ஞானிகள் குழுவினர் மிகக் கவனமாக அறிவிப்பு வெளியிட்டனர். பரிசோதனைகளில் ஹிக்ஸ் போஸான் சில கணங்களில் வேறு துகளாக மாறினாலும் ஹிக்ஸ் போஸான் எந்தவிதமான துகள்களாக மாறும் என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். உருமாறிய போஸான்கள் அவ்விதத் தன்மைகளைக் காட்டியதால் அவர்கள் கண்டுபிடித்தது ஹிக்ஸ் போஸான்களே என்று கருதப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்பு மிக மகத்தானது என்றே சொல்ல வேண்டும். ஹிக்ஸ் போஸான் கண்டுபிடிப்புப் பற்றிய செய்தி வெளியான உடனேயே மேற்கத்திய பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் ''கடவுள் துகள்'' கண்டுபிடிக்கப்பட்டு விட்டது என்று பரபரப்பாக செய்தி வெளியிட்டன. இதில் கடவுள் எங்கே வந்தார்?

ஹிக்ஸ் போஸான் பற்றி ஒரு சமயம் பிரபல விஞ்ஞானி ஒரு நூலை வெளியிட்டார். இந்தத் துகள் விஞ்ஞானிகளை அலைக்கழிப்பதை அவர் மனதில் கொண்டு எரிச்சலுடன் தமது நூலுக்கு 'கடவுளை அலைக்கழிக்கும் துகள்' என்று தலைப்பிட்டார். தவிர இந்தத் தலைப்பு மக்களைக் கவருவதாக இருக்கும் என்றும் அவர் நினைத்தார். அவர் நினைத்தது சரியாகியது. அப்போதிலிருந்து ஹிக்ஸ் போஸான் துகளைப் பலரும் கடவுள் துகள் என்றே குறிப்பிட ஆரம்பித்தனர். மற்றபடி ஹிக்ஸ் போஸான் துகளுக்கும் கடவுளுக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. ஹிக்ஸ் போஸானை ''கடவுள் துகள்'' என்று வ்ருணிப்பது அபத்தம் என்று தெரிந்தும் பெரும்பாலான மேலை நாட்டு ஊடகங்கள் (இங்குதான்) கவர்ச்சியான தலைப்புக்காக அந்தச் சொல்லையே பயன்படுத்தின. இதைவிட ஒருபடி மேலே போய், 'விஞ்ஞானிகள் கடவுளைக் கண்டனர்' என்று வர்ணித்த ஊடகங்களும் உண்டு. ஹிக்ஸ் போஸான்களில் மட்டும் கடவுள் இருப்பதுபோல எண்ணச் செய்வது அசட்டுத்தனமானது. கடவுள் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார் என்று சொல்வதானால், ஹிக்ஸ் போஸான் அனைத்துத் துகள்களிலும் கடவுள் இருப்பதாக ஒப்புக் கொள்ள வேண்டும். ஹிக்ஸ் போஸானை மட்டும் கடவுள் துகள் என்று வருணிக்க முற்படலாகாது.

# மக்களைத் தேடும் மிதிவெடிக் கிராமம்

செ.நாதன்

எப்போதும் அழகுடனும் ஆரவாரத்துடனும் காணப்படும் கிராமம்தான் முகமாலை.

ஏ-9 வீதியின் இருமருங்கிலும் பச்சை பசுமையுடன் காட்சி தந்த அந்தக் கிராமம் சுமார் 80 சதுர கிலோ மீற்றருக்கும் அதிக நிலப்பரப்பை உடையது. இங்கே 2000ஆம் ஆண்டு வரை சுமார் நூறு குடும்பங்களுக்கு மேல் நிரந்தரமாக வாழ்ந்து வந்தனர். கிராமத்துக்கான அனைத்து அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், இந்தக் கிராமத்தின் ஊடாக இரண்டு முக்கியமான போக்குவரத்துப் பாதைகள் காணப்பட்டன. ஒன்று யாழ்-கண்டியை இணைக்கும் ஏ-9 வீதி. மற்றையது தென் பகுதிக்கான புகையிரதப் பாதை. இந்த இரண்டும் கிராமத்தின் மையப்பகுதி ஊடாகவே செல்கின்றன.

அத்துடன் கிராமத்தின் மையப் பகுதியை அண்டியே கிளி/முகமாலை றோ.க.த.கலவன் பாடசாலையும் அமைந்திருந்தது. ஆலமர நிழலில் மிகவும் அழகாக வீற்றிருந்து அடியவர்கள் அனைவருக்கும் அருள் வழங்கி வந்தாள் அந்த அற்புதத் தாய் அன்னை வேளாங்கண்ணி. அதனை அண்டிய சூழலில் தபாலகம், பஸ் தரிப்பிடம் என்பன காணப்பட்டன. மற்றும் இதனை அண்டிய பகுதியிலேயே கூட்டுறவுக்கடை, ஏனைய வர்த்தக நிலையம், சிறிய சந்தை என்பன காணப்பட்டன.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அதிக மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு, தென்னைச் செய்கை, பனை உற்பத்திகள் எனப் பலதரப்பட்ட தொழில்களை மேற்கொண்டனர். முகமாலைக் கிராமத்தில் மாணிக்கப்பிள்ளையார் குளம், முகமாலைக்குளம், வண்ணாந்துறைக்குளம், சழிவில் குளம், கோவானக்குளம் என பல சிறிய குளங்கள் காணப்பட்டன. இவைகளே கால்நடைகளின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தன.

முகமாலைக் கிராம அலுவலர் பிரிவில் பல சிறிய கிராமங்கள் காணப்படுகின்றன. பொந்தர் குடியிருப்பு, அம்பனபளை, சுடலைபிட்டி, மடத்தடி, முகமாலை நகர் பகுதி, கோவாளம், திரேசம்மாள்புரம் இந்திராபுரம் என்பன மிகவும் முக்கிய கிராமங்கள் ஆகும்.

கிராமத்தில் பல இந்து ஆலயங்கள் காணப்பட்டன. சுடலைப் பிட்டியில் மாணிக்கபிள்ளையார் கோயில், பொந்தர் குடியிருப்பில் நாச்சிமார் கோயில், மடத்தடி பகுதியில் ஞானவைரவர், வீரபத்திரர் கோயில், அம்பனபளையில் அம்மன் கோவில் எனப் பல ஆலயங்களும் காணப்பட்டன. நகரின் மையப் பகுதியில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் காணப்பட்டது. அந்த ஆலய வளவில் குருக்கள் தங்கி நின்று பணிபுரியக்கூடிய விடுதிகள் காணப்பட்டன. மிகவும் நீண்ட காலங்களுக்கு முன்னர் இங்கு தங்கி நின்று மக்களுக்கு பல சேவைகளை அருட்தந்தை ராஜரட்ணம் அடிகளார் ஆற்றிவந்தார். அதேபோல் திரேசம்மாள் புரத்தின் அருட்தந்தை சவரிமுத்து அடிகளார் இந்தக் கிராம மக்களில் அநேகமானவர்களுக்கு [illegible] [illegible].

எப்போதும் மகிழ்வுடன் காணப்பட்ட இந்தக் கிராமம் 1996 ஆம் ஆண்டு போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டது. இங்கே உள்ள மக்களில் அநேகமானவர்கள் வன்னிக்கும் ஏனைய சிலர் யாழ்ப்பாணத்துக்கும் இடம்பெயர்ந்தனர். கிராமம் மட்டும் தனித்து விடப்பட்டது. சமாதான காலத்தில் மீண்டும் மக்களில் ஒரு பகுதியினர் இங்கே குடியேறினர். காலங்கள் வேகமாக நகர 2006 ஆம் ஆண்டு மீண்டும் மக்கள் இடம்பெயர்ந்து செல்ல முகமாலை நிலம் தனியாக விடப்பட்டது.

கிராமத்தை விட்டு மக்கள் வெளியேறியதும் அந்தப் பகுதியில் போர் குடிகொண்டது. முகமாலைக் கிராமம் இப்போது அக்கினிக் குண்டுகளின் விளையாட்டு மைதானம். பசுமைகள் யாவும் கருக்கப்பட்டன. தினம் ஆயிரம் எறிகணையாலும், லட்சம் ரவைகளாலும் துளைக்கப்பட்டது. பல ஆயிரம் வீரர்களின் குருதி கொண்டு அந்தப் பகுதியில் பல வரலாறுகள் எழுதப்பட்டன. தாய் நாட்டுக்கே தெரியாத முகமாலை, சர்வதேச மாநாடுகளிலும், செய்திகளிலும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனாலும் முகமாலை நிலம் போரின் தாண்டவ பிடியில் சிக்கிச் சின்னாபின்னமாகியது. ஓங்கி வளர்ந்த பனைகளும் தென்னைகளும் துண்டாகின. மகிழ்ச்சியான கிராமத்தில் மரணம் மட்டுமே குடிகொண்டிருந்தது. காலம் நகர போர் முடிவுக்கு வந்தது. ஆனாலும் முகமாலைக்குத் திரும்புவதற்கு வாய்ப்பில்லை.

எமக்காக அந்தக் கிராமத்தில் எதுவும் இல்லை. காணிக்கு எல்லை இல்லை. கட்டி வைத்த வீடு இல்லை. கல்வி கற்க பாடசாலை இல்லை. கைதூக்கி வணங்கிய ஆலயங்கள் இல்லை. நடந்து போக கூட பாதை இல்லை. பொறி வெடிகளும், கால் வைத்தால் கால் பறிக்கும் மிதிவெடிகளும். எப்போது வேண்டுமானாலும் வெடிக்கத் தயாரான நிலையில் முகமாலை முழுதும் விதைக்கப்பட்டுள்ளன.

இப்போது தான் முகமாலைக் கிராமத்தின் ஒரு பகுதி மிதிவெடிகளிடமிருந்து மீட்கப்பட்டு வருகின்றது. இந்த வெடியகற்றும் வேலைத்திட்டம் முற்றுப் பெற இன்னும் எத்தனைக் காலம் எடுக்குமோ தெரியவில்லை. அது வரைக்கும் முகமாலைக் கிராத்தவர் ஊரற்றவர்களாக அலைய வேண்டியது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை நீட்டிக்கும் கீரைகள்

ஆரோக்கியத்திற்கு வழிகாட்டும் மருத்துவர்கள்,''பச்சைக் கீரை களைச் சாப்பிடுங்கள்'' என்கிற யோசனையைத்தான் வலியுறுத்திச் சொல்வார்கள். உடனே, நம்மவர்களுக்குக் கோபம் வந்து விடும். ''ஆடு,மாடுகள் தழைகளை மேய்கிற மாதிரி,நம்மை கீரைகளைத் தின்னச் சொல்கிறாரே, நாம் என்ன ஆடா, அல்லது மாடா?'' என்று சலித்துக் கொள்வார்கள்.

இந்த வகையான நோய்களுக்கு இவ்வாறான காய்கறிகளைச் சாப்பிடுங்கள் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினால், ''நான் என்ன முயலா?'' என்று அலுத்துக் கொள்வார்கள். முயலை சாப் பிடுவதற்கு வேண்டுமானால், பலபேர் தயாராக இருக்கிறார்கள். ஆனால், முயல் உண்ணுகின்ற விடயங்களைத் சாப்பிடுங்கள் என்று சொன்னால் அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

சரி,மருத்துவர்கள் கீரைகளை சிபாரிசு செய்வதற்குக் காரணம் என்ன? பொதுவாக,கீரைகளின் விலை குறைவு என்பதால் அவற்றின் அருமை எமக்குத் தெரிவதில்லை. பொதுவாக, ஒரு பொருள் அதிகமான விலைக்கு விற்கப்பட்டால் தான் நம்மவர்களுக்கு அதன் மீது ஒரு தனி மோகம் உண்டாகும் இந்தக் கீரைகள் சாதாரணமானவை அல்ல, அமிர்தத்தைப் போல, அற்புதமான சக்தி நிறைந்தவை.

புதினா (கொத்தமல்லி இலை) கீரை என்று சொல்கிறோம் அல்லவா, அதனை நீரிலே ஊற வைத்து அந்த நீரைக் குடித்தால், அஜீரணம் போய் விடுகிறது. இது எவ்வளவு பெரிய விடயம்! இதனை அடிக்கடி முகர்ந்து பார்த்தால், தலைவலி மற்றும் மயக்கம் சரியாகி விடுகிறது. அதனைத் தலையிலே தடவிக் கொண்டால், ''தலைவலி போயே போச்சு'' என்று சந்தோஷமாக வசனம் பேசலாம். புதினா கீரையுடன் கொஞ்சம் உப்புக் கலந்து கொடுத்தால், இரத்தத்தில் இருக்கிற விஷத்தைக் கூட அது முறிக்கிறது என்று சொல்லப்படுகிறது.

புதினா இலைகளைக் கொண்டு பல்தேய்க்கும்போது, பல்லில் சிக்கியிருக்கின்ற பல சின்னச் சின்ன கெட்ட பொருள்கள் நீங்கி விடுகின்றன. பச்சையாக அப்படியே கடித்து சாப்பிடுகிற போது, பல் தேய்த்தது போன்ற தூய்மையோடு பற்கள் பளிச்சென்று காட்சி அளிக்கும்.

உடம்பிலே இருக்கும் விஷத்தன்மைகளை முறிக்கின்ற வல்லமை புதினாவுக்கு உண்டு. அதைக்காய வைத்து உலர்த்தி, தூள் செய்து, சூரணமாக ஆக்கிக் கொண்டு, மூன்று வேளைகளும் தேனில் கலந்து சாப்பிட்டால் பெண்களுக்கு மிகவும் நல்லது என்று மருத்துவம் சொல்கிறது.

அடுத்ததாக, முளைக்கீரையை எடுத்துக் கொள்வோம். இந்தக் கீரை யில் இரும்புச் சத்து ஏராளமாக உள்ளது. பிரசவமான பெண்களுக்கு மிகுதியான நன்மைகளைச் செய்யக்கூடிய ஆற்றல் கீரைக்கு இருக்கிறது, இரத்த சோகைப் பிரச்சினைக்கு இது ஒரு மாமருந்து. முருங்கைக் கீரைக்கு ஆண்மையை விருத்தி செய்யக் கூடிய வல்லமை உண்டு. இப்படியாக, பல்வேறு கீரைகளின் பல்வேறு மருத்துவக் குணங்களைக் அடுக்கிக் கொண்டே போகலாம்.மொத்தத்தில் இரத்த விருத்திக்கு இயற்கை எமக்கு அளித்துள்ள பொக்கிஷம்தான் இந்த கீரை வகைகள்.


சரியாகச் சமைத்துவிட்டால், எந்த உணவையும் உங்களால் ருசித்துச் சாப்பிட முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. இயற்கை மருத்துவத்தில் காய்கறிகளைப் பெரிய பெரிய துண்டங்களாக நறுக்கச்சொல்கிறார்கள். காரணம், நீங்கள் நறுக்கும் அளவு சின்னதாக ஆக ஆக, அதனுடைய உயிராற்றல் குறைந்து கொண்டே போகிறதாம். எந்தக் காய்கறியாக இருந்தாலும் சரி சமைப்பவரின் கைப்பக்குவத்தில்தான் அதன் ருசி அமைகிறது.

ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்த போது, அவர்களுக்கு உணவு தயாரித்துத் தர வேண்டிய பொறுப்பு ரயில் நிலைய அதி காரிகளுக்கு இருந்ததாம். ஆங்கிலேயர் ரயிலில் பயணம் செய்யும் போது, அவர்கள் என்ன உணவு கேட்கிறார்களோ, அதைச் சமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை நிலைய அதிகாரிகளிடம் சுமத்தப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், ஒருமுறை ஆங்கிலேயர் ஒருவர் தான் பயணித்த ரயிலில் இருந்த ரயில்நிலைய அதிகாரிகளிடம், தனக்கு அசைவ உணவு வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அந்த நிலைய அதிகாரியோ, சுத்த சைவம். அந்த வாசனையைக் கூட அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. இதை அந்த ஆங்கிலேயரிடம் சொல்லவும் முடியாது.

அப்போது அந்த ரயில் நிலைய அதிகாரிகளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தன் மனைவியிடம் கெஞ்சிக் கூத்தாடி, அசைவ உணவினைத் தரும்படி கேட்டுக் கொண்டார். அந்த ஆங்கிலேயரும் அந்த உணவை ரசித்துச் சாப்பிட்டு விட்டு, ''என் வாழ்நாளில் இப்படி ஒரு சுவையான உணவைச் சாப்பிட்டது இல்லை'' என்று ரிப்போர்ட் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார். அதன் பிறகு நிலைய அதிகாரி தன் மனைவியிடம், ''அந்த மனிதர் இப்படிப் பாராட்டி விட்டுப் போகிறாரே, அப்படி என்ன சமைத்தாய்?'' என்று கேட்டார். உடனே அவர் மனைவி, ''உங்களுடைய ஒரு செருப்பு இருக்கிறதா பாருங்கள்'' என்றாளாம். அதாவது, அவருடைய தோல் செருப்பையே சமைத்து அந்த ஆங்கிலேயருக்கு விருந்தாகக் கொடுத்து விட்டார் அந்தப் பெண்மணி.

இந்த நிகழ்ச்சியை நான் சொல் வதற்கு காரணம், சமைக்கிற மாதிரி சமைத்தால், எதை வேண்டுமானா லும் சாப்பிடுவதற்கு உலகம் தயாராக இருக்கிறது என்பதை வலியுறுத்து வதற்காகத்தான். எனவே நல்ல கீரை களை உங்கள் உணவிலே நாள் தோறும் சேர்த்துக் கொள்ளுங்கள். இது ஒரு மிகச் சிறந்த உணவுப் பழங் கம்.



சுகி.சிவம்

# 238 வருடங்கள் பழமை வாய்ந்த திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாஷி ஆலயம்



லக்ஸ்மன்

திருநெல்வேலி கோயிற்காடு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ நீலாய தாஷி சமேத காயாரோ ஹணேஸ்வரர் ஆலயம் 238 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். 1774 ஆம் ஆண்டில் இந்த ஆலயம் ஆரம்பிக்கப்பட்டதாகும். திருமடந்தை நாத முத லியார் பரம்பரையினரால் அமைக்கப்பட்ட இந்தக் கோயிலின் வடக்கு வீதி யில், ஸ்ரீமுத்துமாரி அம் மன் கோயில் உள்ளது. காயா ரோஹணேஸ்வரர் ஆலயத்தில் காவல் தெய் வமாக அமைக்கப்பட் டதே தலங்காவல் பிள் ளையார் கோயில் எனக் கூறப்படுகின்றது.

மழையின்மை காரணமாக, பலவருடங்களாக வரட்சி நீடித்துக் காணப்பட்டதாகவும், அதை முன்னிட்டு இந்தப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்தக்கோயிலில் உள்ள நந்திக்கு அபிஷேகம் செய்தார்கள் எனவும், அபிஷேகம் முடிந்ததும் பெரும் மழை பெய்து வரட்சி நீங்கியதாகவும் கதை யுண்டு. ஒரு சமயம் கடும் பஞ்சம் நிலவியபோது திருவமுதுக்கு அரிசி இல்லாமல் இருந்ததாகவும், வயோதிபர் ஒருவர் திருநெல்வேலி சிவன் கோயில் இதுதானா? எனக் கேட்டு ஒரு தொகை அரிசியை வழங்கியதாகவும் முன்னோர்கள் இந்தக் கோயில் குறித்துப் பேசுகின்றனர். இது போன்று பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்த, நிறைந்த ஆலயமாக இந்தக் கோயில் விளங்கியது என்பது இந்தப்பகுதி மக்களின் கருத்தாகும்.

ஆலயத்தின் மூலவராக காயாரோஹணேஸ் வரரும், தெற்கு நோக்கி நீலாயதாஷி அம்பாளும் அமர்ந்துள்ளனர். சுவாமிகள் சன்னிதானத்திற்கு முழுநேரே நந்திதேவரும் பலிபீடமும் தம் பமும் தம்பப்பிள்ளையாரும் உள் ளனர் அம்மன் சந்நிதியில் நந்தி தேவரும், பலிபீடமும் கொடித் தம்பமும் உள்ளன. சிவனின் மாடங்களில் பிள்ளையாரும், தெட்ஷிணாமூர்த்தியும் மேற்கில் லிங்கோற்பவரும், வடக்கே பிரம்மா, மகிடாசுரவர்த்தனி, துர்க்கை ஆகியோரின் திருவுரு வங்களும் அமைந்துள்ளன.

இந்த ஆலயத்தின் தென் மேற்கு மூலையில் பிள்ளையா ரும், அருகில் தண்டாயுதபாணி, பஞ்சலிங்கம், விஷ்ணு, சுப்பிர மணியரும், வடமேற்கு மூலை யில் இலக்குமி ஆலயமும் வடக்கே தெற்கில் மகாநடராசப் பெருமானும் கிழக்கே வையிரவரும் அருகில் சூரிய சந்திரருக்கான சந்நிதானங்களும் உள்ளன. ஆலயத்தில் தினமும் ஆறு காலப் பூசைகள் இடம்பெறுகின்றன.

1800 ஆம் ஆண்டில் அந்நியர்களால் இந்த ஆலயம் அழிக்கப்பட்ட போதும் அதை புனரமைப்புச் செய் வதில் தர்மகர்த்தாக்கள் பரம்பரையினர் துரிதமாக செயற்பட்டனர். மீண்டும் ஆலயம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டது. ஆலயத்திற்கான புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டது.

உற்சவ மூர்த்திகளாக சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பிரதோஷநாயனார், பிச்சாடனார், நடராசர், மகாவிஷ்ணு, நீலாயதாஷி, அம்பாள் உபசக்தி, சமயகுரவர் நால்வர், சண்டேஸ்வரர் திருவுருவங்கள் உள்ளன.

வருடத்தில் இரண்டு உற்சவங்கள் நடை பெறுகின்றன. சித்திரா பூரணைக்கு மூன்று தினங்கள் முன்னதாக, துவஜா ரோஹணம் ஆரம்பமாகி பதினெட்டுத் தினங்கள் இடம் பெறுகின்றன.

பதின் ஏழாம் நாள் தேரும், மறுநாள் தீர்த்தமும், அடுத்த நாளில் திருக்கல்யாணமும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறுகின்றன. சிவன், அம்மன் உற்சவங்களின் தேர்த்திருவிழாவன்று, இளம் பெண்கள் தேரின் வடம்பற்றி இழுப்பது இந்த ஆலயத்தின் பாரம்பரியங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அம்பாளுக்கான உற்சவத்தில் ஆடிப்பூரத்தன்று தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

சுவாமி அம்பாள் திருக்கல்யாணமும், ஆதி நாள்களில் முத்துமாரி அம்பாள் ஆலயத்தளமிடும் காட்சியும், பின்னர் சுவாமி அங்கு சென்று அந்த ஆலயத்தின் முன்புறமுள்ள மண்டபத்தில் திருக்கல்யாணக் காட்சியும் இடம்பெற்று வந்தது.

பிரதோஷ உற்சவம் மாதக் கார்த்திகை, ஆவணிச் சதுர்த்தி சிவராத்திரி, திருவெம்பாவை விழாக்களும் ஆகம விதிமுறைகளுக்கு அமை கிறது. நவராத்திரி தினத்தின்போது அம்பாள் 'மானம்பூ' என்னும் உற்சவத்தில் எழுந்தருளு வாள். நடேசப் பெருமானுக்கு வருடத்தில் இடம் பெறும் ஆறு அபிஷேகங்களில் ஆனி, மார்கழி மாதங்களில் வரும் அபிஷேகங்கள் மிகவும் சிறப்பாக இடம்பெறுகின்றன. உற்சவ காலத்தில் பிச்சாடனர் தெருவோரம் நின்று பிச்சை எடுக்கும் காட்சி சிறப்பாக இருக்கும்.

இங்கு குடிகொண்டிருக்கும் ஆனந்த நடராஜப் பெருமானிடத்தில் அந்த ணர்கள், பொது மக்கள் பெரும் பக்தியும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். இங்கே நூல்கட்டுதல், யந்திரத்தகடு கட்டுதல் போன்ற நிகழ்வுகள் பண்டைய காலம் தொட்டு, இன்றுவரை தொடர்ந்து இடம்பெறுகின்றன. இன்றும்கூட இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் என பெருமளவு பக்தர்கள் பெரிய குருக்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, திருநீறும், ஆசியும் பெற்று நூல் கட்டிச் செல்லுகிறார்கள்.

ஆலய உற்சவங்களில் இந்தப் பிரதேசத்தின் பெரும் பாலான இளைஞர்கள் ஆலயத் தொண்டில் ஈடுபடுவதைக் காணலாம். பக்தியுடன் கூடிய வழிபாட்டில் இளைஞர் யுவ திகள் கலந்து கொள்வது இந்தப்பகுதி மக்களின் இறை நம்பிக்கையை வலி யுறுத்துவதாக அமைகிறது என்பதில் முதியவர்கள் ஆறுதலடைகிறார்கள்.

இந்த ஆலயத்தின் பாரம்பரிய தர்மகர்த்தாவாக இருந்தவர்களின் வழித் தோன்றல்களில் ஒரு வரான திருமதி பரமநாதன் நீலாய தஷியார் இரண்டாயிரம் ஆண்டு தனது மரணசாதனத்தின் மூலமாக, ஸ்ரீமத் சோமஸ்கந்தர் சுவாமிகளிடம் ஆலயத்தைக் கையளித்துள்ளார். 1800 ஆம் ஆண்டில் அந்நியர்களால் இந்த ஆலயம் அழிக் கப்பட்ட போதும் அதை மீளப் புனரமைப்புச் செய் வதில் தர்மகர்த்தாக்கள் பரம்பரையினர் துரிதமாக செயற்பட்டதில் மீண்டும் ஆலயம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டது. ஆலயத்திற்கான புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் ஆகும். இதற்கு பொது மக்கள் பெரிதும் உதவியுள்ளார்கள். தற்சமயம் மீண்டும் ஆலயப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று 2012 பங்குனி மாதத்தில் புதிய இராச கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வருடாந்த மஹோற்சவமும் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருகம்பே களப்பில் பெருந்தொகை மீன்கள் இறப்பு



அம்பாறை,ஜூலை10

அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தில் உள்ள அருகம்பே களப்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆயிரக்கணக்கான மீன்கள் திடீரென இறந்துள்ளன.

இந்தக் களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் திடீரென மழை பெய்துள்ளது. இதன் காரணமாக களப்பில் உறைந்திருந்த உப்புத் தன்மை மழை நீருடன் கரைந்துள்ளது.

நீண்ட காலத்தின் பின் பெய்த மழை காரணமாவும் உப்புத் தன்மையினால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாகவும் மீன்கள் உயிரிழந்திருக்கலாம் என்று பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த களப்பில் பத்தாயிரத்துக்கும் அதிகமான மீன்கள் உயிரிழந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## சந்தேகநபருக்கு ஆதரவு வழங்கிய பிக்கு கைது

பெந்தோட்ட - அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு இருப்பிடம் வழங்கி அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுருவ - பண்டாரிகொட பிரதேச விகாரை ஒன்றின் பிக்குவே நேற்றுமுன்தினம் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். பெந்தோட்டையில் இடம்பெற்ற 23 லட்சம் ரூபா தங்க நகை திருட்டு மற்றும் அளுத்கமயில் இடம்பெற்ற 4 கோடி ரூபா மாணிக்கக்கல் திருட்டு என்பவற்றுடன் குறித்த பிக்குவுக்குத் தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபரான பிக்கு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வீடுகளைப் பகிர்ந்தளிப்பதில் நியாயமற்ற நடைமுறைகள்

### ஹிரா நகர் கிராம மக்கள் கொந்தளிப்பு

அட்டாளைச்சேனை,ஜூலை 10

புதிய கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட பாலமுனை, ஹிரா நகர் கிராமத்தில் அமைக்கப்படும் வீடுகளைப் பகிர்ந் தளிப்பதில் நியாயமான நடை முறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் பயனாளிகள் தெரிவில் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளரிடம் மக்கள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கு மாகாண சபையினூடாக 9 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஹிரா நகர் எனும் புதிய கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கமைய பாலமுனைக் கிராம எல்லைக்குட்பட்ட அஷ்ரப் நகர் கிராமத்தின் காட்டு வட்டைப் பிரதேசத்தை உள்ளடக்கி அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்துவதன் மூலம், குறித்த ஹிரா நகர் கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

> இதுவரை எந்தவிதமான உதவித் திட்டம் மூலமும் எதுவித வீடமைப்பு உதவிகளையும் நாம் பெறவில்லை. இந்த நிலையில் குறித்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

எனினும், இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு எவ்வாறான நியமம் பின்பற்றப்பட்டுள்ளது என்பது குறித்து இதுவரை அறிய முடியாமலுள்ளது.


குறித்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கிராமத்தின் நிரந்தரக் குடியிருப்பாளர்களாக நாங்கள் இருக்கின்றோம். நாம் குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள். நாங்கள் குடியிருக்கும் நிலம் நீண்ட காலமாகவே எமக்குச் சொந்தமாகவுள்ளது. அதேவேளை, இதுவரை எந்தவிதமான உதவித் திட்டம் மூலமும் எதுவித வீடமைப்பு உதவிகளையும் நாம் பெறவில்லை. இந்த நிலையில் குறித்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

இதேவேளை, குறித்த பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ளாதவர்கள், வசதி படைத்த மக்கள், அரச உத்தியோகத்தர்கள் , நெற்செய்கைக் காணிகளை குடியிருப்புக் காணிகளாகக் காட்டியவர்கள் குறித்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் எந்தவிதமான வெளிப்படைத்தன்மைகளும் பேணப்படவில்லை. பயனாளிகளைத் தெரிவு செய்வதில் சிலரின் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

எனவே,குறித்த விடயங்களைக் கவனத்தில்கொண்டு எமக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவின் பிரதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)



திருகோணமலை, அரசடி கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்புத்திட்டத்தின் கீழ் ராஜ வரோதயம் வீதி வடிகால் துப்புரவு செய்யப்படுகின்றது. பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் குழுவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஆர். ஜவாகிர் மற்றும் திருமலை நகர சபை உறுப்பினர் கௌரி முகுந்தன் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (40)

## வான்மீது கைக்குண்டுத் தாக்குதல்; பக்தர்கள் அச்சமடைந்து ஓட்டம்

மட்டக்களப்பு,ஜூலை10

அக்கரைப்பற்று கோளாவில் மாரியம்மன் ஆலயத்துக்கு அண்மையில் நிறுத்திவைக்கப்பட்ட வான் ஒன்றின் மீது இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் வான் சேதமடைந்துள்ளது என்று அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.முகைடீன் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெற்று வரும்வேளையில் நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணிக்கு ஆலயத்துக்கு வானில் வந்த ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த மர ஆலை உரிமையாளர் ஒருவர் வானை ஆலயத்துக்கு அண்மையில் நிறுத்திவிட்டு .வழிபடச்சென்றவேளை வான் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து ஆலயத்துக்கு வழிபடவந்த பக்தர்கள் அல்லோலகல்லோலப்பட்டு சிதறி ஓடியதையடுத்து சிறிது நேரம் ஆலயப் பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தத் தாக்குதல் மர ஆலையின் உரிமையாளரின் வானை இலக்குவைத்தே இடம்பெற்றிருப்பதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-32)

## நுவரெலியா வைத்தியசாலைக்கு மேலதிகமாக 25 வைத்தியர்கள்

### நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை

நுவரெலியா,ஜூலை10

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியை நிவர்த்தி செய்ய தேர்ச்சி பெற்ற 25 வைத்தியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார உதவிப் பணிப்பாளர் ரவீந்திர பத்திரத்தின தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் தங்கியிருந்து வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ள அதிகமான நோயாளர்கள் வருகை தருகின்றனர். இவர்களுக்குச் சிகிச்சையை மேற்கொள்ள தங்கவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதனால் இந்த இட நெருக்கடிநிலை ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் தற்பொழுது சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டுள்ள நோய்கள் காரணமாக வெளிநோயாளர்கள் பிரிவில் சனநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையின் சேவையை விரும்பும் நிலையில் தினமும் மக்கள் வருகின்றனர். இவர்களுக்கு உரிய விசேட சேவைகளை மேற்கொள்வதற்காக விசேட பயிற்சி பெற்ற வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

> நுவரெலியா மாவட்டத்தில் தற்பொழுது சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டுள்ள நோய்கள் காரணமாக வெளிநோயாளர்கள் பிரிவில் சனநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தற்காலிகமாக வரவழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள இந்த வைத்தியர்களின் ஊடாக விசேட சிகிச்சைகளை மேற்கொள்ள வைத்தியசாலை நிர்வாகத்தின் உயர்பீடத்தினர் நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவித்த அவர் ஒரு மாதகாலத்துக்குள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சையை வழங்கி அவர்களை விடுவிக்க முடியுமென நம்பிக்கை தெரிவித்தார். (ச)

## கிழக்கிலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரிகர்கள் அதிகரிப்பு

திருகோணமலை,ஜூலை 10

கிழக்கு மாகாணத்திலிருந்து இந்தமுறை அதிகளவான பக்தர்கள் பாத யாத்திரையாக கதிர்காமத்துக்குச் செல்லவுள்ளனர்.

கதிர்காமம் முருகன் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு பக்தர்கள் நேர்த்திக்கடன் நிறைவேற்றும் பொருட்டு பாதயாத்திரையாகச் செல்கின்றனர்.

மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் இருந்து முருக பக்தர்கள் சிறு சிறு குழுக்களாக கிழக்கின் பிரதான பாதைகளூடாக தற்போது பாதயாத்திரையாகச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு செல்லும் குழு கிழக்கில் உகந்ததை முருகன் ஆலயத்தைச் சென்றடைந்து காட்டுவழி ஊடாக கதிர்காமத்தைச் சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# திணைக்களங்கள் இடமாற்றம்: திருமலை மக்கள் ஆட்சேபனை

திருகோணமலை,ஜூலை 10

கிழக்கு மாகாணத்தின் திணைக்களங்களை திருகோணமலையிலிருந்து இடமாற்றுவதற்கு திருகோணமலை மாவட்ட மக்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மக்கள் மேலும் தெரிவிப்பதாவது:-

நீண்டகாலமாக திருகோணமலையில் [illegible] கிழக்கு மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பன திருகோணமலையிலேயே இருந்து வந்தன. இந்த நிலையில் அரசியல் காரணங்களுக்காக நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி போன்ற திணைக்களங்கள் திருகோணமலையிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளன.

> அரசியல் காரணங்களுக்காக நீர்ப்பா சனம், வீதி அபிவிருத்தி போன்ற திணைக்களங்கள் திருகோணமலை யிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண அமைச்சரவை வாரியத்தில் திருகோணமலை மாவட்டப் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டோர், திணைக்களங்களை இடமாற்றும் தீர்மானத்தை அமைச்சரவை வாரியத்தில் எடுத்து இதனை நடை முறைப்படுத்துகின்றனர். தற்போது அமைச்சு ஓர் இடத்திலும் திணைக்களம் இன்னொரு இடத்திலும் இருக்கின்றன.

எனவே இரண்டு இடங்களிலும் தேவையுள்ளோர் இரு மாவட்டத்துக்கும் பயணம் செய்யும் அளவுக்கு நிலைமை உருவாகியுள்ளது- என்றனர். (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு சில திட்டங்களைத் தீட்டுவீர்கள். குடும்பத்தில் நிலவும் சச்சரவுகளுக்கு தெளிவான முடிவுகளை ஏற்படுத்துவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் விரிவாக்கத்திற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவீர்கள்.

**இடபம்:** சிலரின் சந்திப்புகளும், அவர்களின் பேச்சுக்களும் உங்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும். அந்த மாற்றம், சில பணிகளை விரைவாகச் செய்து முடிக்க ஏதுவாக இருக்கும். நண்பர் ஒருவரின் உதவி, மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அலுவலகத்தில் சக ஊழியரின் உதவி பயன் தரும்.

**மிதுனம்:** அவசரப்பட்ட செயல்களால் அல்லல்பட நேரிடலாம். கவனம் தேவை. வீட்டிலும் வெளியிலும் வார்த்தைகளில் நிதானம் தேவை. பணம் தொடர்பாக வாக்குக் கொடுத்த நபர் ஒருவர் வாக்கு தவறியதால், தொழிலில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:** வழக்கமான பணிகளில்கூட தாமதம் ஏற்படும். ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். பேச்சுகளால் சில காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் காரியம் விடயமாக அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**சிங்கம்:** மரியாதையின் நிமித்தமாக சிலரின் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உறவுகளால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கல்களில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

**கன்னி:** சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பணிகளை விரைவாகச் செய்து முடிக்கத் திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்தபோதும் பண வரவு சற்று தாமதப்படும்.

**நாளை**

ஆனி 27 புதன்கிழமை 11.07.2012
திதி: அட்டமி மு.இ 11.21 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.இ. 08.24 வரை
சுபநேரம்: 04.29- 05.59 வரை
ராகு காலம்: 11.59- 01.29 வரை

**துலாம்:** உங்கள் முன் சவாலாக பணிகள் இருந்தபோதும், தைரியமாக எதிர்கொண்டு செய்து முடிப்பீர்கள். ஒரு பணிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒன்றை மற்றொரு பணிக்காகப் பயன்படுத்துவீர்கள். நண்பர்களின் பழக்க வழக்கங்கள் சற்றுக் கூடுதலான செலவுகளை ஏற்படுத்தும்.

**விருச்சிகம்:** சில காரியங்களைச் செய்து முடிக்க, முக்கிய பிரமுகர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். சந்திப்புகள் தாமதமான போதும் நடக்கும். வீட்டுக்கு வரும் உறவினர் ஒருவரின் நிதானமற்ற வார்த்தைகளால் சச்சரவுகள் ஏற்படும்.

**தனுசு:** பண நிலையில் எதிர்பாராத வரவுகள் மனமகிழ்ச்சி தரும். குழந்தைகள் விடயமாக அலைச்சல் கூடுதலாக இருக்கும். தொழில் தொடர்பாக சிலரின் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**மகரம்:** நீங்கள் திட்டமிட்ட பணிகள்தான் என்றபோதும், மாற்றங்களோடு செய்து முடிப்பீர்கள். பணம் குறித்த விடயங்களுக்காக சிலரின் சந்திப்புகள் இருக்கும். வியாபாரத்தில் போட்டி நிலவும்.

**கும்பம்:** அவசரப்பட்ட வார்த்தைகளால் குழப்பங்கள் நீடிக்கும். தேடி வந்த சிலரை நல்லவிதமாக உபசரித்து மகிழ்வீர்கள். தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி இருக்கும். அதைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**மீனம்:** உங்களின் முயற்சிகள் வெற்றியடையும். மனநிறைவு அடைவீர்கள். உங்களிடம் பணம் பெற்று சென்றவர், குறிப்பிட்ட நேரத்தில் திருப்பிக் கொடுத்து பாராட்டுப் பெறுவார். அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 9 | 1 | | | | 4 |
| 9 | | | 7 | | | 8 | 6 | |
| 5 | 1 | | 6 | | 4 | | 9 | |
| | | 9 | | 6 | 7 | | 8 | 2 |
| | | | | | | | | |
| 8 | 4 | | 2 | 5 | | 1 | | |
| | 9 | | 5 | | 8 | | 4 | 6 |
| | 8 | 2 | | | 3 | | | 5 |
| 4 | | | | 9 | 6 | 7 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | 4 | 3 | 6 | 9 | 5 | 7 |
| 5 | 3 | 4 | 9 | 8 | 7 | 1 | 6 | 2 |
| 7 | 6 | 9 | 5 | 2 | 1 | 8 | 3 | 4 |
| 6 | 9 | 2 | 8 | 4 | 3 | 7 | 1 | 5 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 5 | 4 | 2 | 9 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 1 | 5 | 6 | 3 | 9 | 4 | 2 | 7 | 8 |
| 2 | 4 | 7 | 6 | 5 | 8 | 3 | 9 | 1 |
| 9 | 8 | 3 | 1 | 7 | 2 | 5 | 4 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இலங்கையின் தூதர்கள், ராஜதந்திர முக்கியஸ்தர்களுக்கான வதிவிட செயலமர்வு தியத்தலாவை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

# தரம் குறைந்த பொருள்கள் மஹிந்த அரசால் இறக்குமதி

## ஐ.தே.க. எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஜூலை10

மஹிந்த அரசு தரம் குறைந்த பொருள்களை இறக்குமதி செய்து வருகிறது என்று ஐக்கியதேசியக் கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தரம் குறைந்த பெற்றோல், மருந்து, சிமெந்து ஆகிய பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் பாவனையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

சில அரசியல்வாதிகளினதும், அமைச்சர்களினதும் ஆதரவுடனேயே இந்த ஊழல் மோசடிகள் இடம் பெறுகின்றன.

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியால் பலகோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் பாதிப்படைந்துள்ளன.

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் இவற்றை அரசுக்கு சுட்டிக் காட்டினோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. மாறாக மோசடிகளே இடம்பெற்று வருகின்றன-என்றார். (ச-2)

# இனவாத செயல்களுக்கு தேர்தல் மூலம் பதிலடி

## இஸ்லாமிய அமைப்புகளுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூலை10

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் இனவாத சவால்களுக்கு ஜனநாயக ரீதியிலான தேர்தல் மூலம் நல்ல பதிலை வழங்கும் வகையில் உலமாக் கட்சியுடன் இஸ்லாமிய அமைப்புகள் கூட்டணி சேர்ந்து தேர்தலுக்கு முகம் கொடுக்க முன்வருவதன் மூலம் மட்டுமே கிழக்கில் வசந்தத்தை ஏற்படுத்த முடியும் என்று உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் பற்றிச் சிந்திக்காது தமது பதவிகளை மட்டுமே சிந்தித்து அரசுடன் ஒன்றிணைந்து கிழக்குத் தேர்தலில் குதிக்கவுள்ள முஸ்லிம் கட்சிகளை அழைத்து ஒற்றுமையாகச் செயற்படும்படி ஜம்இய்யத்துல் உலமா உபதேசம் செய்திருப்பது வேடிக்கையானதாகவே தெரிகிறது.

முஸ்லிம்களின் இன்றைய தேசியப் பிரச்சினைகளுக்கு சுதந்திரமாக அழுத்தம் கொடுக்க வேண்டுமாயின் முஸ்லிம் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு தமக்குள் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தி அந்தக் கூட்டமைப்பு கிழக்கில் போட்டியிடுவதன் மூலமே கிழக்கு முஸ்லிம்களையும், ஏனைய மாகாண முஸ்லிம்களையும் அடிமைத் தளத்திலிருந்து மீட்கமுடியும். முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் இத்தகையதொரு கூட்டமைப்பை ஏற்படுத்த உலமா சபை முயன்றிருந்தால் அது பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும். அதனை விடுத்து நோன்பு காலத்தில் ஒருவரையொருவர் தூற்ற வேண்டாம் என உபதேசித்திருப்பது சிறுபிள்ளைத்தனமானதாகும்.

என்னதான் முஸ்லிம் கட்சிகள் அரசுடன் ஒன்றிணைந்துபோட்டியிட்டு வென்றாலும் யாருக்கு என்ன பதவி என்பதில் தேர்தலுக்குப்பின் அசிங்கமான சண்டைக்காட்சிகளை முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் காணலாம். அந்தச்சண்டை முடிவடைவதற்கிடையில் பல பள்ளிகளையும், காணிகளையும் முஸ்லிம் சமூகம் இழந்து நிற்கும் நிலையும் வரலாம்.

ஆகவே, முஸ்லிம் கட்சிகளை அழைத்து உபதேசம் செய்து நேரத்தை வீணடிப்பதை விடுத்து எம்மோடு ஜம்இய்யத்துல் உலமா மற்றும் தஃவா இயக்கங்கள் இணைந்து தேர்தலில் குதிப்பதன் ஊடாகவே சுய நல அரசியல்வாதிகளிடமிருந்து சமூகத்தைக் காப்பாற்ற முடியும்- என்றார். (ச)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னாள் புலிகள் போட்டியிடலாம்

## பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 10

முன்னாள் போராளிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். இலங்கையின் தூதர்கள், இராஜதந்திர முக்கியஸ்தர்களுக்கான வதிவிட செயலமர்வு நேற்று முன்தினம் தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியும்.

வடக்கு, கிழக்கு இளைஞர், யுவதிகள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு புதிதாக அமைக்கும் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்ற சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். முன்னாள் சிரேஷ்ட விடு தலைப் புலி உறுப்பினர்கள் தேசிய மற்றும் மாகாண அரசியலில் ஈடுபட்டுள்ளதாகவும், அதே போன்று முன்னாள் போராளிகளுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படும்.



> புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியும்.

நாட்டில் அமைக்கப்பட்டிருந்த சகல சோதனைச் சாவடிகளும் வீதித்தடைகளும் அகற்றப்பட்டுள்ளன. பிரிவினைவாத நோக்கங்களுக்குத் துணை போகும் ஒரு சில சர்வதேச ஊடகங்கள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பில் சர்வதேச சமூகத்துக்குப் போதியளவு விளக்கம் அளிக்கப்பட வேண்டும்- என்றார்.

இதேவேளை, புலம்பெயர் தமிழர்கள் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் எச்.கெ.ஜீ. ஹெந்தாவித்தாரன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பல்கலை முரண்பாட்டால் மாணவர்கள் அச்சம்

கொழும்பு,ஜூலை 10

கடந்த ஆண்டு ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனப்படுத்திவிட்டு உயர் கல்வி அமைச்சும் - பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவும் கயிறிழுப்பில் ஈடுபட்டுள்ளன.

இடையில் சிக்கி மாணவர்கள் சிரமப்படுகிறார்கள் என விமர்சனம் செய்கிறார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான கயந்த கருணதிலக்க எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இஸட் புள்ளி விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றம் முறையான தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் உயர் கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும் கல்வி அமைச்சும் மும்முனைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றன.

ஆனால் இப்போது பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


இஸட் புள்ளி விவகாரம் ஓயாதநிலையில் தாம் எப்படி விண்ணப்பம் செய்வது என்று புரியாமல் சிலமாணவர்கள் சித்தப் பிரமை பிடித்தவர்கள் போலாகி உள்ளனர் .

அரசு கல்வியின் மகத்துவத்தை உணர மறுக்கின்றது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத அரசு அடக்கியும் மிரட்டியும் தீர்க்கமுனைகிறது . இந்த அரசு வெகு காலம் நீடிக்காது என்றும் அவர் கூறினார். (10-02)

# அநாதரவான சிறார்களை ஒரே விடுதியில் இணைக்குக!

## ஜனாதிபதி கோருகிறார்



கொழும்பு,ஜூலை10

பெற்றோரை இழந்த சகோதரர்களை ஒரே விடுதியில் தங்கவைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை நீதிமன்றம் ஊடாகப் பெற்றுக்கொள்ளுமாறு சட்டமா அதிபரிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். பெற்றோரை இழந்த சகோதரர்களை வெவ்வேறு விடுதி களுக்கு அனுப்பி வைக்கும் நீதிமன்ற உத்தரவை அறிந்து கொண்ட ஜனாதிபதி சட்டமாஅதிபருடன் தொடர்பு கொண்டு குறித்த சிறார்களின் விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

தருஷா லக்ஷன் (வயது-9), சலனிகா கவிசா (வயது-2) என்ற சிறார்களையே இவ்வாறு பிரித்து வெவ்வேறு அநாதை விடுதிகளுக்கு அனுப்பிவைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தனது சகோதரனின் பாசத்தை இழக்கவுள்ளேன் என்பதை அறியும் முதிர்ச்சி குறித்த சிறுமிக்கு இல்லை.

இந்தச் சிறார்களின் தந்தை சிறைத்தண்டனை அனுபவித்துவரும் அதேவேளை, தாயார் இறந்துள்ளார். இந்த நிலையில் குறித்த சிறார்களை பராமரிப்பதற்கு எவரும் இல்லாததால் இவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

2 வருடங்களுக்கு முன்னர் இந்தச் சிறார்களின் தாயார் கொலை செய்யப்பட்டதனால் அப்பாவிச் சிறுவர்கள் மீது விதி விளையாடத் தொடங்கியுள்ளது. இந்தச் சிறார்களின் தந்தை எல்ல பகுதியில் இடம்பெற்ற தனது மனைவியின் கொலைக்கு பழிவாங்கும் வகையில் மாமியாரைக் கொலைசெய்த குற்றத்துக்காக சிறைத்தண்டனை அனுபவித்துவருகின்றார். இதனைத் தொடர்ந்து [illegible] குறித்த சிறுவனை அம்பேகொட சிறுவர் விடுதிக்கும் [illegible] சுஜாதா சிறுவர் விடுதிக்கும் தற்காலிகமாக அனுப்பிவைக்குமாறு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்துக்கு நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



இலங்கையில் மிகப்பெரிய புனித அந்தோனியார் சிலை ( 25 அடி ) நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வத்தளையில் திறந்து வைக்கப் பட்டது. அந்தோனியாரின் திருவுருவச் சிலையை கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதி. வணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCA ACCA ACCA RMC

# Association of Chartered Certified Accountants

## க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான ACCA கற்கை நெறிக்கான புலமைப் பரிசில் திட்டம் 2012/2013

ACCAஆனது சான்றுப்படுத்தப்பட்ட பட்டய கணக்காளர்களின் சங்கமாகும் 110 வருட கால அனுபவத்தினை உடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம்பெற்றுத் திகழும் ஒரு நிதியியல் கல்வித் தகைமையாக இது கருதப்படுகின்றன. உலகில் 150,000 அங்கத்தவர்களையும் மற்றும் 450,000 மாணவர்களையும் 90 பிராந்திய மற்றும் கிளைகளினூடாக இயங்கி வருகின்றது. இதனால் தான் உலகில் ஒவ்வொரு 6நிமிடமும் ஓர் அங்கத்தவர் இத்தகைமையயிட்டு விண்ணப்பிக்கின்றார்.

**I. புலமைப்பரிசில் திட்டம்**

ACCA கற்கை நெறிக்கான க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கும் வயதெல்லை 25 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**II. பரீட்சை முறை**

இரண்டு பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டதாக மேற்படி புலமைப்பரிசில் பரீட்சை அமையவுள்ளது.

பொது உளச்சார்பு (ஒரு மணித்தியாலம்)
பொது அறிவு (ஒரு மணித்தியாலம்)

**III. உறுதிப்படுத்தல்**

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையை அல்லது தபாலக அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும்.

**IV. பெறுபேறுகள்**

பரீட்சையானது ஆவணி மாத இறுதியில் இடம்பெறுவதுடன் புலமைப்பரிசில் திட்டம், பெறுபேறுகள், விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள் மற்றும் விவரங்கள் தபால் ஊடாக உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படும். விரிவுரைகள்

பிரிவு I செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும்.( Pre.Result Scheme) 2012/2013
பிரிவு II மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும். (Post. Result Scheme) 2012/2013

**V) விரிவுரைகள் நடைபெற ஒழுங்கமைக்கப்பட்ட நிலையங்கள்.**

(I) New mercury Institute of Business studies,
In colloboration with scc computer studies,
43, Arasady Road, Jaffna
Thaddatheru Junction, Jaffna.

(II) Jaffna Technical Institute (JTI)
No.07, Palally Road,
Off Sirambiyadi Lane, Jaffna.

(III) ACCA - Centre for Mangagement & Accounting.
Nugavil, Karaveddy south,
Karaveddy.

**VI விண்ணப்பிக்கும் முகவரி-**

வடமராட்சி மாணவர்கள்
Mr.N.G.செல்வரட்ணம்
சிரேஷ்ட நிர்வாக அதிகாரி
ACCA நுகவில் கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

ஏனைய மாணவர்கள்
Mr.T.நாகராஜா
சிரேஷ்ட நிர்வாக அதிகாரி
இல. 92/1, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**VII புலமைப் பரிசில் தெரிவு முறை-**

(I) அதிக புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ACCA தங்கப்பதக்கம் இலங்கை, மாலைதீவு வதிவிடப் பிரதிநிதியால் வழங்கப்படும்.
(II) 50 மாணவர்களுக்கு 100% முழுமையான கட்டணச் சலுகை
(III) 100 மாணவர்களுக்கு 75% கட்டணச் சலுகை
(IV) 150 மாணவர்களுக்கு 50 % கட்டணச் சலுகை
(V) 200 மாணவர்களுக்கு பதிவுக்கட்டணச் சலுகை (அனைத்தும் மொத்தக் கட்டணத்தில்)
(VIII) விண்ணப்ப முடிவு திகதி 21.07.2012

**மாதிரிவிண்ணப்பப்படிவம்**

அலுவலக உபயோகம்

1. முழுப்பெயர் :........................................
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :........................................
3. தபாலிடல் முகவரி :........................................
4. பிறந்த திகதி :........................................

வயது- ஆண்டு மாதம் திகதி
பால் - ஆண் பெண்

மின்னஞ்சல் முகவரி :........................................
தொ.பே. இல. :........................................
தேசிய அடையாள அட்டை/தபாலக அடையாள அட்டை இல.:........................................
உறவினர் அல்லாத இருவரது பெயர்கள் :........................................

மேலே தரப்பட்ட விவரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மை என உறுதிப்படுத்துகின்றேன்.

........................ ........................
திகதி கையொப்பம்

**ACCA**
**Zonal Education Office**
**No. 7, Palally Road,**
**(Off Sirambiyadi Lane) Jaffna.**

**ACCA**
**Regional Office**
**Karaveddy,**
**Jaffna.**

(சி/1293)(5-6-7)


# 16 ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
14.06.1926

மறைவு
25.06.2012

வேரவில் வெள்ளிப்பள்ளத்து
வீரகத்திப் பிள்ளையார்
தேவஸ்தான அறங்காவலராகவும்,
காப்பாளராகவும்,
பூசகராகவும், வேரவில் துத்தியில்
ஐயனார் ஆலய
அறங்காவலராகவும்,
பௌராணிகராகவும்,
கிராம சபைத் தலைவராகவும்
நற்பணி ஆற்றி இறைபதம் எய்திய

அமரர் சிவஸ்ரீ
## கதிரவேலு குமாரசாமி ஐயா

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று
(10.07.2012) செவ்வாய்க்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறும். இந்த
நிகழ்விலும், மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

*என்றும் நினைவில்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேரவில், பூநகரி. (20266) (2-6-7)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09 ★ 01 ★ 1953



உதிர்வு
23 ★ 06 ★ 2011

அமரர் **மயில்வாகனம் குமாரசாமி** (C.M)
*(அதிபர், மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்)*

திதி : 10.07.2012

ஆண்டு ஒன்று ஆனாலும்
இன்றும் எமது நெஞ்சில் இருந்து ஒளி வீசுகின்ற
எங்களண்ணர் குமாரசாமி
என்றும் எம்முடன் உயிர்வாழ்வார்
என்றெண்ணி வாழ்கின்றோம்
இவர் எமக்கு வழிகாட்டியாக
எம்முடன் என்றும் துணையிருப்பார்
இவரெங்கள் தெய்வமம்மா


**இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை பாண்டித்தாழ்வு, வலந்தலை, காரைநகர் என்னும் முகவரியில் உள்ள அவரது பெற்றோரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

வலந்தலை, பாண்டித்தாழ்வு
காரைநகர், யாழ்ப்பாணம்

பெற்றோர்,
அன்புச்சகோதரர்கள்

(20262)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

## கத்தோலிக்கத் திருச்சபை தூதர் நெடுந்தீவுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் பாப்பரசர் பிரதிநிதி என பல்வேறு நாடுகளினதும் தூதர்கள், பிரதிநிதிகள், என நூறுக்கும் அதிகமான வெளி நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், நாளைமறுதினம் வியாழக்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்து, தீவின் முக்கியத்துவம் மிக்க பகுதிகளைப் பார்வையிட வுள்ளதுடன், பொதுமக்களையும் சந்திந்து கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-7)

# 'இந்தியம்' தமிழினத்தின் பகை என்பதை உணராதவரை தமிழீழம் சாத்தியமில்லை

## தோழர் வைகறை முழக்கம்



'இந்தியம்' தமிழினத்தின் பகை என்பதை உணராதவரை தமிழீழம் சாத்தியமில்லை என்று தமிழக இளைஞர் முன்னணி பொதுச்செயலாளர் தோழர் நா.வைகறை தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் ஈழ மக்களைக் கொன்றொழித்த இலங்கை அரசுக்கு முட்டுக் கொடுத்துப் போரை வழி நடத்திய இந்தியாவின் பங்கு குறித்து பேசும், முனைவர் த.ஜெயராமன் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு பன்மை வெளி வெளியீட்டகத்தால் ஈழம்: 'இந்தியமும் இனப்படுகொலையும்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது.

இந்தநூலின் வெளியீட்டு விழா, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை, திருவல்லிக்கேணி, நீலி வீராசாமி தெரு, தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியக் கட்டடம் இரண்டாம் மாடியில் நடைபெற்றது. தமிழக இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் நா.வைகறை தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. அவர் தலைமை உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்கால் சோகம் தமிழினத்தின் தீராத காயம். ஈழ மக்களை அழித்தொழிக்க உதவிய இந்திய அரசு நம் இனத்தின் பகை அரசு. எனவே, இந்தியத்தை நாம் புரிந்துகொள்ளாதவரை தமிழீழ விடுதலையைப் பெறமுடியாது.

இத்தனை நடந்த பின்னரும் இந்தியாவை நாம் ஏன் நம்ப வேண்டும்? இந்தியம் தமிழினத்தின் பகை என்பதை உணராதவரை தமிழீழம் சாத்தியமில்லை. தமிழீழ விடுதலைக்கு முன்பே, தமிழ்நாட்டு விடுதலையை நாம் அடைந்து விடுவோம் என்று எண்ணுகிற அளவுக்கு இந்திய அரசு தன் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டுள்ளது.

எனவே, உலகத் தமிழர்கள் தமிழர்களுக்கு ஒரு நாடு என்றல்ல, தமிழீழம் - தனித் தமிழ்நாடு ஆகிய இரண்டு நாடுகளும் வேண்டும் என்று அணிதிரள வேண்டும்- என்றார். (வ)



அண்மையில் கார் ஒன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் மதிலுடன் மோதி அதனை உடைத்து விபத்துக்குள்ளானது. உடைந்து வீழ்ந்து கிடக்கிறது மதிலின் ஒரு பகுதி. (ம-555)

# மணியந்தோட்டப்பகுதி வீதிகள் சீரின்மையால் மக்கள் விசனம்

கொழும்புத்துறை, ஜூலை 10

மணியந்தோட்டப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து 2 வருடங்களாகியும், அந்தப் பகுதியின் உள்ளக வீதிகள் சீரின்மையால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

மணியந்தோட்டம் மிகவும் மணற்பாங்கான பகுதியானமையால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மணலுக்குள் புதையுறுவதனால் வாகனங்களைச் செலுத்திச் செல்ல முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒன்று தொடக்கம் 14 இற்கும் மேற்பட்ட குறுக்கு வீதிகள் இந்தக் கிராமத்தில் அமைந்துள்ளன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசிக்கும் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் தமது அன்றாட பாவனைக்குரிய வாகனங்களை வீடுகளுக்குக் கொண்டு செல்வதில் பல இடர்களைச் சந்திக்கின்றனர்.

சுட்டெரிக்கும் வெயிலில் சைக்கிள்களை, மோட்டார் சைக்கிள்களை சில இடங்களில் உருட்டிச் செல்லும்போது சுடுமணல் கால்களை பதம் பார்ப்பதாகக் கூறப்படுகின்றது.

எனவே இந்தப் பகுதியில் போக்குவரத்தில் உள்ள சிரமங்களை நீக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)

## சமய சந்நிதிகளில்

புலோலி வடமேற்கு வில்லிப்பாதி முருகன் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் தீர்த்தத் திருவிழாவில் தமிழ்நாடு, பாண்டிச்சேரியைச் சேர்ந்த எம்.சரவணனின் தவில் கச்சேரி உள்ளூர் கலைஞர்களுடன் சேர்ந்து நடைபெறவுள்ளது. (வ-8)

* * *

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேவி பெருந்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வீ. ஈஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-250)


## சேவை நலன் பாராட்டு விழா - 2012

எமது பாடசாலையில் இற்றைவரை பணியாற்றி, ஓய்வுபெற்று இடம் மாற்றமாகிச் சென்ற எமது ஆசான்களை இன்றைய தினத்தில் (10.07.2012) செவ்வாய்க்கிழமை மனதார வாழ்த்துவதோடு, இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களையும் பாராட்டி சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைகளைக்கற்று உயர்வுபெற இறை ஆசிகளை வேண்டி நிற்கின்றோம்.

கிளி/ அக்கராயன் மகாவித்தியாலம்
ஆசிரியர் நலன் பேண் ஒன்றியம்

(20111)(45.6.7)

## ஓராண்டு நிறைவில் உதிர்க்கும் நினைவுகள்



மண்ணில் மடியில்
29.07.1925

விண்ணின் பிடியில்
22.06.2011

வித்துவான் திருவாட்டி
### திருமதி மகேஸ்வரி இராசேந்திரம்
(சம்பந்தர்மிஸ், நாயன்மார்கட்டு)
(இளைப்பாறிய ஆசிரியை, யா-செங்குந்த இந்துக்கல்லூரி)

ஓராண்டென்ன உயிருள்ளவரை துதித்திருப்போம்

சீர்மருவு நாயன்மார் கட்டிற் தோன்றி
சோதிடத்தில் வைத்தியத்தில் சேவை யாற்றி
பேர்மருவு பெருங்குடியிற் பிறந்தே மண்ணில்
பிரியமொடு வித்துவானாய்ப் படித்துத் தேறி
ஆர்வமொடு மகேஸ்வரியும் செங்குந் தாவும்
அரும்பணிகள் ஆற்றியிரு அம்மாவே நீர்
தேர்மருவு பிறைதானைச் சென்றோ ராண்டில்
சிரந்தாழ்த்தி அஞ்சலிகள் செய்தோம் நாமே

எமது குடும்பத்தலைவியின் ஓராண்டுத்திதியையொட்டி எதிர்வரும் (15:07:2012) ஞாயிற்றுக்கிழமையன்று பம்பலப்பிட்டி அரசதொடர் மாடிக் குடியிருப்பில் அமைந்துள்ள சனசமூக நிலையமண்டபத்தில் (Community Centre) முற்பகல் 11:00 மணியளவில் நடைபெறும் உயிரமைதி வழிபாட்டுப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி. இ. செந்தில்நிதி.
30-3/2, நெல்சன் வீதி.
வெள்ளவத்தை, கொழும்பு 06. தொலைபேசி :2360434

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்

## ஆங்கிலம் கற்பிக்கப்படும்

தரம் 1-5 வரை உள்ள மாணவர்களுக்கு வீட்டுக்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்

தொடர்பு: 077 4105 673

(20167) (45.67)

## உடன் வாடகைக்கு

நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் நன்கு புனர் அமைக்கப்பட்ட சகல வசதிகளுடனான வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : T.P :021 3216841, 077 6914198

(20254)(6-7-8)

## வான் விற்பனைக்கு

ISUZU - கூலர்
4 HL1- LJ. x x x x
தொடரிலக்கமுடைய வாகனம் விற்பனைக்குண்டு

தொடர்பு:
077 1986 948

(கி/1299) (45.67)

## குமரன் சில்க்ஸ்

எமது குமரன்சில்க்ஸ் தற்பொழுது புதுப்பொலிவுடன் 30.06.2012 அன்று தொடக்கம் நவீனசந்தையின் (வெளிப்புறம்) பிரதான வீதிக்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

குமரன் சில்க்ஸ்,
இல. 04 ...சேரி.
வெளிப்புறம் ( A9 வீதி)

(18113) (45.6.7)


## வடமாகாண ப.நோ.கூ. சங்கங்களின் சமாசம்

# பதவி வெற்றிடம்

### களஞ்சியக் காப்பாளர் (202/11)

1. சம்பள அளவுத்திட்டம் - 10450 - 100 x 10 - 110 x 10 - 12550 (66/2006 இன் படி வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)
2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
   கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்ட களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றின் வழங்கல்கள் அல்லது களஞ்சிய முகாமை அல்லது சந்தைப்படுத்தல் பற்றிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   கூட்டுறவுப்பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
3. வயதெல்லை 18-45.
4. கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவால் பதவி உறுதிப்படுத்திய கூட்டுறவு சங்கப்பணியாளருக்கு வயது கருத்தில் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் அச்சங்கங்களினூடாக விண்ணப்பங்களை மேற்கொள்ளல் வேண்டும்.
5. சமாசத்தின் முகாமையால் கோரப்படும் பிணையினைச் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள களஞ்சியங்களில் பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதி இணைக்கப்பட்டு 23.07.2012 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

*அனுப்பவேண்டிய முகவரி:*
பொதுமுகாமையாளர்,
வடமாகாண ப.நோ.கூ. சங்கங்களின் சமாசம்,
பரந்தன்.

(கி/1285)(2,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 அடகு நிலையங்களைத் திறந்தது 'தி பினான்ஸ்'





தனது அடகுச் சேவைகளை வேகமாக விஸ்தரித்து வரும் த பினான்ஸ் பீஎல்ஸீ, இவ்வருடம் தனது செயற்பாடுகளில் 237 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மஹியங்கனையிலும் நுவரெலியாவிலும் இரண்டு அடகு நிலையங்களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து, 3 புதிய அடகு நிலையங்களை நிறுவனம் ஜூன் மாதத்தில் ஆரம்பித்து வைத்தது.

ஜூன் மாதம் 14 ஆம் திகதி, இல 140, பிரதான வீதி, அம்பாறை எனும் முகவரியில் அம்பாறைக்கான அடகு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஜூன் மாதம் 18 ஆம் திகதி பண்டாரவளையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கிளை , இல 501, பதுளை வீதி, பண்டாரவளை எனும் முகவரியிலிருந்து இயங்குகின்றது. ஜூன் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட நித்தம்புவ கிளை , இல 195/1, கொழும்பு ரோட் நித்தம்புவ எனும் முகவரியில் மக்களுக்கு சேவை புரிகின்றது.

ஜூன் மாதம் சேவைகளை ஆரம்பித்த இம்மூன்று அடகு நிலையங்களோடு, நாடளாவிய ரீதியில் த பினான்ஸின் அடகு நிலையங்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

எதிர்வரும் மாதங்களில் த பினான்ஸின் அடகுச் சேவை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ள நிலையிலும் எந்தவிதமான மந்தகரமான செயற்பாடுகளையும் நிறுவனம் காண்பிக்கவில்லை.

அநேகருக்குப் பரிச்சயமான த பினான்ஸ் பீஎல்ஸீ, வங்கியல்லாத நிதித்துறையில், 72 வருடகால ஒப்பற்ற அனுபவத்தினைக் கொண்டிருப்பதோடு நாடெங்கிலும் பரந்திருக்கும் அதன் 60 கிளைகள் மூலம் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. (த)

## மித்தெனியவிலும் கொமர்ஷல் வங்கி



தென்பகுதி நகரான மித்தெனியவிலும் கொமர்ஷல் வங்கி தனது மற்றுமொரு கிளையைத் திறந்து வைத்துள்ளது. இத்தோடு சேர்ந்து நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கி சேவை நிலையங்களின் எண்ணிக்கை 218 ஆக அதிகரித்துள்ளது.

நெத்பிரிய கட்டடம், வீரகெடிய வீதி, மித்தெனிய என்ற இடத்தில் இந்தப் புதிய கிளை அமைந்துள்ளது. வங்கியின் ஏனைய 520 ATM இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட ATM இயந்திரம் ஒன்று இங்கும் அமைந்துள்ளது. கொமர்ஷல் வங்கியே இலங்கையில் உள்ள வங்கிகளுடன் மிகப் பெரிய ATM வலை யமைப்பைக் கொண்ட வங்கியாகும்.

தொடர்ந்தும் 14 வருடங்களாக இலங்கையின் தலைசிறந்த வங்கியாக ''குளோபல் பினான்ஸ்'' சஞ்சிகையால் தெரிவுசெய்யப்பட்ட கொமர்ஷல் வங்கி, ''பினான்ஸ் ஏசியா'', ''யூரோ மணி'', மற்றும் ''டிரேட் பினான்ஸ்'' சஞ்சிகை களாலும் இலங்கையின் தலைசிறந்த வங் கியாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

## கந்துரட்ட நிறுவனம் விஸ்தரிப்பு



*அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் கந்துரட்ட நிறுவனத்தின் தலைவர் எம்.டி.எம். நவ்சாத் ஆகியோர் நாடாவை வெட்டிப் புதிய கிளையைத் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.*

கந்துரட்ட நிறுவனத்தின் பிரதேச தொழிற்சாலையொன்று நாவலப்பிட்டி குருந்துவத்தையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. கந்துரட்ட நிறுவனத்தின் தலைவர் எம்.டி.எம். நவ்சாத்தின் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, கொழும்பு மாநகரசபை முன்னாள் பிரதிமேயர் அசாத் சாலி உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பாரிய முயற்சியின் மூலம் உருவாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட இந்த நிறுவனம் தற்போது 35 வயது இளைஞனாக வெற்றிப் பாதையில் பயணிக்கின்றது.

கந்துரட்ட உற்பத்திகளுக்கு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டுச் சந்தைகளிலும் நற்பெயர் உண்டு. கந்துரட்ட உற்பத்திகளுக்கான கேள்வி நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. எனவே, சந்தையில் அதிகரித்துவரும் கேள்விக்கேற்ப நிரம்பலை வழங்கவேண்டும்.

எனவே, உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் கந்துரட்ட நிறுவனம் பிரதேச ரீதியாக தொழிற்சாலைகளை நிறுவி வருகின்றது. கந்துரட்ட நிறுவனம் இறக்குமதியால் உருவாகிவரும் போட்டியைச் சமாளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

எனது தந்தையின் வழிகாட்டலில் ஊழியர்கள் உட்பட சகலரினதும் ஒத்துழைப்புடன் நிறுவனத்தை நடத்தி வருகிறோம். கந்துரட்ட உற்பத்திகள் ISO 9001 / 2008 சர்வதேச சான்றிழைப் பெற்றுள்ளதுடன் உள்நாட்டு உற்பத்திகளுக்கான சூர்யசிங்க விருதினையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் - எனத் தெரிவித்தார்.

## 34 விமானங்கள் பறிப்பு

கிங்பிஷர் ஏயார் லைன்ஸ் நிறுவனம் 1,000 கோடி ரூபாய் விமான வாடகை செலுத்தாததால் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 34 விமானங்களை குத்தகை நிறுவனங்கள் திரும்ப எடுத்துக் கொண்டன.

ஆனால்,இதை மறுத்துள்ள கிங்பிஷர் நிறுவனம், சென்ற மார்ச் முதல் நடப்பு ஜூன் வரையிலான காலத்தில் தாமே முன்வந்து சம்பந்தப்பட்ட விமானங்களை ஒப்படைத்ததாகத் தெரிவித்துள்ளது.

விஜய் மல்லையாவின் ஏயார் லைன்ஸ் நிறுவனம், 7,500 கோடி ரூபாய் கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. சென்ற மார்ச்சுடன் முடிவடைந்த காலாண்டில், இந்நிறுவனம் 1,151 கோடி ரூபா இழப்பைக் கண்டுள்ளது. இந் நிறுவனம் பல்வேறு வழித்தடங்களில் அதன் விமான போக்குவரத்துச் சேவையை ரத்துச் செய்துள்ளது.

# அதிவேகத்தில் Expo Rail



ரயில் பயணத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள Expo Rail ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவடையும் முன்பே நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

தற்போது பதுளை, கண்டி, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய நான்கு இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ள Expo Rail சேவையானது கடந்த எட்டு மாதங்களில் மொத்தமாக 25,000 இற்கும் மேற்பட்டோருக்கு தனது சொகுசு ரயில் சேவையை வழங்கியுள்ளது.

சொகுசு ரயில் பெட்டிகளிலுள்ள ஒவ்வொரு பகுதியும் சௌகரியத்தை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதால், Expo Rail சேவையானது அதில் பயணம் செய்கின்ற பயணிகளுக்கு தனிச்சிறப்புமிக்க ஒரு பயண அனுப வம் கிடைப்பதை உறுதிப்படுத்துகிறது.

இன்றைய காலகட்டத்தில் கிடைக்கக் கூடியதாகவுள்ள மிகவும் முன்னேற்றகரமான வசதிகளைக் கொண்ட ரயில் போக்குவரத்து முறைமையாக தரப்படுத்தப்பட்டுள்ள Expo Rail சேவையில் பணியாற்றும் நட்புறவுமிக்க ரயில் பணியாளர்கள், ஒவ்வொரு பயணியையும் இன்முகத்தோடு எதிர்கொண்டு, தமது சொகுசு ரயில் பெட்டிகளுக்கு வரவேற்கின்றனர்.

பரந்தளவிலான சௌகரியம் மற்றும் மன அமைதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட சாய்வான நிலைக்கு மாற்றியமைக்கக் கூடிய ஆசனங்கள், ஒவ்வொரு ஆசனத்திற்கும் தனித்தனியான மின்னிணைப்பு வசதியை கொண்டமைந்த - முற்றிலுமாக குளிரூட்டப்பட்ட ரயில் பெட்டிகள், அகன்ற திரையமைப்பையுடைய LCD தொலைக்காட்சிகள் மற்றும் இலவச Wi-Fi வசதி போன்ற சிறப்பம்சங்கள் இதில் உள்ளன.

Expo Rail இல் பயணிக்கின்ற வேளையிலேயே அதில் உணவு பரிமாறப்படுகின்றமை ரயில் சேவைக்கு புதியதொரு பரிமாணத்தை வழங்குகின்றது.

(த)

## அமெரிக்காவை முந்தியது இந்தியா

நைஜீரியாவை மையமாகக் கொண்டு அதிகளவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளில் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.

உலகளவில் பொருளாதார வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் அமெரிக்கா நைஜீரியாவிலும் தனது வர்த்தகத்தை மேற்கொண்டுள்ளது.

கடந்த 1964-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை நைஜீரியாவின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்காவே இருந்து வந்தது. இந்த நிலையில் இப்போது அந்த இடத்தை இந்தியா பிடித்து இருக்கிறது.

2012ம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்திய-நைஜீரிய வர்த்தகத்தின் (ஏற்றுமதி + இறக்குமதி) மொத்த மதிப்பு 5.15 பில்லியன் டொலராக இருக்கிறது. முதல்காலாண்டில் நைஜீரியா சுமார் 30 பில்லியன் டொலருக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இதில் இந்தியாவுக்கான ஏற்றுமதி சுமார் 4.2 பில்லியன் டொலராகும். அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 3.7 பில்லியன் டொலராகும்

# இயற்கை வள பாவனையை ஊக்குவிப்பதற்கு கையெழுத்துக்கள் திரட்டுகிறது குமாரிக்கா




இலங்கையின் முன்னணி கூந்தல் பராமரிப்பு தயாரிப்பான குமாரிக்கா இயற்கை வளங்களைப் பாவிக்க பெண்களை ஊக்குவிக்கும் வகையில் உறுதிமொழி கையெழுத்துகளைத் திரட்டும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நாடு முழுவதும் சுமார் 10 லட்சம் பெண்களிடமிருந்து கையெழுத்துக்கள் திரட்டப்படும்.

அமைச்சர் சுமேத ஜி. ஜயசேன கையொப்பமிட்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பின்னர் நாடு முழுவதும் ஒவ் வொரு நகருக்கும் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு கையொப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

இது குறித்து ஹேமாஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் முகாமையாளர் டெரிக் அந்தனி கருத்துத் தெரிவிக்கையில், இந்த செயற்திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் இயற்கையான வாழ்க்கைத் தரங்களைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் அனுகூலங்கள் குறித்து விளக்கமளிப்பதைக் குமாரிக்கா பிரதான நோக்காகக் கொண்டுள்ளது. மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் இயற்கை வளங்களை பாதுகாத்திடும் வகையில், சூழலுக்கான எமது அர்ப்பணிப்பு நடவடிக்கையாக நாம் மரக்கன்றுகளை நடும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கிறோம் என்றார்.

குமாரிக்கா இலங்கையின் முன்னணி இயற்கை கூந்தல் பராமரிப்பு வர்த்தக நாமமாகத் திகழ்கிறது. இவற்றில் கூந்தல் எண்ணெய், சாம்பு மற்றும் பேஸ் வொஷ் போன்றவை உள்ளடங்குகின்றன. இவை அனைத்தும் இயற்கை மூலிகைகளின் செழுமை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை பற்றி மேலும் தெரிந்து கொள்ள www.wayofnoturallivi ng.com யைப் பார்வையிடவும்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு த்தமான
வையான
காதாரமான
புரியாணி வகைகள்
யாழ்நகரில்
Virounthu @
Yarl Pardy
49,51 Amman Road, Nallur, Jaffna
Tel : 021 222 6868, 0759 232 967, 0759 360 370
(சி/1408)(8-14)





பரம பூஜ்ய
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி
அவர்களின்
வாழும் கலை பாகம்-I
அறிமுகவுரை:- நாளை மாலை 5.00 - 5.30 மணிவரை
காலம்:- 11.07.2012 - 15.07.2012 வரை
நேரம்:- காலை 5.45 - 8.15 வரை அல்லது மாலை 5.30 - 8.00 மணிவரை
இடம்:- வாழும் கலை நிலையம்
அராலி வடக்கு, செட்டியார் மடம்.
தொடர்புகளுக்கு:- 0772794093
(20269) (2-6-7)


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலம் நேற்று (09.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பொன்னுத்துரை (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் (அதிபர் - நடேஸ்வராக்கல்லூரி, காங்கேசன்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரகுமாரியின் (ஆசிரியை - மானிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மாமியும் அபிராமியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமிர்தலிங்கம் (மகன்- அதிபர்)

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
(20271) (45.6.7)




FIRST IN JAFFNA DX7
1440dpi
உயர் தரத்திலான
டிஜிற்றல் பனர் பிறின்ற்
(HIGH QUALITY)

பிறின்டர், டிசைனர் மற்றும்
தொகையான பிறின்ரிங்
செய்வோருக்கு
10% விசேட விலைக்கழிவு
(3 வருட உத்தரவாதம்)

பனர், ஸ்ரிக்கர்
விளம்பர பதாகைகள்
(Name Board, Light Board)

ஒரேதரம் ஒரே விலை
40/=

MOORTHY
DIGITAL PRINT
62/20,STANLY ROAD,JAFFNA
0212221358
(சி/1408)(8-14)


## உலகத் தமிழ்க் கல்வி மாநாடு ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 10

உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு இந்தியாவின் அயல்நாடுகளில் தமிழ் கற்றல்-கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வுகளும் எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

எனவே தத்தமது நாட்டில் தமிழ் கற்றல்-கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற கருப்பொருளிலான ஆய்வுக்கட்டுரைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர், மாநாட்டு மலர் பொறுப்பாளர், 4 சௌராட்டிரா நகர், 7 ஆம் தெரு, சூளைமேடு, சென்னை - 600 094 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (16)

## இப்படியும் சாரதி

வவுனியா, ஜூலை 10

பயணியால் தவறவிடப்பட்ட ஒரு லட்சம் ரூபா பணப்பொதி ஓட்டோ சாரதியால் கண்டெடுக்கப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று வவுனியா பஸ் நிலையப் பகுதியில் சவாரியில் ஈடுபட்டுத் திரும்பிய தோனிக்கல் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்ற சாரதியே தனது ஓட்டோவில் கண்டெடுத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைக்கும் நோக்கில் வவுனியா தலைமைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (16-400)

## தொலைத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் ஏ.எஸ். பிரசாத் அறிவித்துள்ளார்.

கோப்பாய் கணபதிப்புலத்தைச் சேர்ந்த சிவராயன் சத்தியபவானி (687060199V), வவுனியா சிதம்பரபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் விஜயதர்சினி (857300254V), நீர்கொழும்பு மார்க்வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் திருநாவுக்கரசு (561442010V), பலாலியைச் சேர்ந்த மொணிக்கம்மா ஞானமுத்து (526472675X) ஆகியோரது அடையாள அட்டைகளே மேற்படி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

### விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்புத்துறைப் பகுதியில் மினிபஸ் மோதியதில் பெண் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

எஸ்.வசந்தராணி (வயது-45) என்ற பெண்ணே இந்தச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர் ஆவார். சைக்கிளில் சென்ற இவரை மினிபஸ் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்ஜூலை10

இன்று நடைபெறவிருந்த வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16)

## விசேட பொதுக் கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

விடயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடு.

**அனைவரும் தவறாது சமுகம் தரவும்.**

அ.இராசகுமாரன்,
தலைவர்,
யாழ்.ப.ஆ.ச, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சி/1404) (14.3)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

தோற்றம் 10.01.1949 — மறைவு 05.07.2011

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்.......
அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே.......
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த உங்கள் சிரித்த முகம்
காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம் என்றும்.......
இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அம்மா........

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.
(20274) (14.6.3)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கஸ்பார் செல்வம் டானியல்

(இளைப்பாறிய ஆட்டிலறி பொம்பொடி வீரர், இலங்கை இராணுவ தரைப்படை)



நெடுந்தீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கஸ்பார் செல்வம் டானியல் நேற்று (09.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கஸ்பார் செல்வம் (முன்னாள் இளைப்பாறிய அரச பிரதம எழுதுவினைஞர்) - அன்ரெனியா தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ஆனந்தியின் அன்புத் தந்தையும், திருமதி றூபி யேசுதாசன் காலஞ்சென்ற டோமினிக் (முன்னாள் கடற்படை வீரர்) மற்றும் திருமதி றோஸ் பத்மநாதன், பெனடிக்ற், பேர்ணாட்ஷா, இந்திரா, சந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற ஆரோக்கியம் மற்றும் டேவிற் நீற்றா, அமிர்தநாயகம், கமலமணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.07.2012) புதன்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இராணுவ மரியாதையுடன் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு நெடுந்தீவு மத்தி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

தகவல்:
பேர்ணாட்ஷா (சகோதரன்),
ஆசிரியர், நெடுந்தீவு - 06
(20272)(6-7-8)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி (பேபி)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி (பேபி) கடந்த (04.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் (சீதைப்பிள்ளை) பெறாமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் அன்பு மனைவியும், பேரின்பரூபி, கஸ்தூரி, வித்தகம், ராஜ்குமார், கோசலை ஆகியோரின் அன்புத் தாயும், யோகதாசன், கலைச்செல்வன், ஜெகானந்தன், கஸ்தூரி, அஷ்மி ஆகியோரின் மாமியும், ஜனனி, நிலான், அஷ்மிதா, திருமுருகன், சங்கீதா, ஜனார்த்தனன், ரவித்தகன், ரிஷி, அகில்ராஜ், சிராஜ், அமான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, மகேஸ்வரி, அமிர்தமலர், அற்புதராசா மற்றும் தர்மலிங்கம், துரைராசா, துதிமலர், விக்கினேஸ்வரன், இந்திரதாஸ், காசிலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பிள்ளையம்மா, அன்னப்பிள்ளை, செல்லம்மா மற்றும் கந்தசாமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.
(20270)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடித்தள்ளுபடியில் அட்டகாசமான விலையில்......

| SDSCOM - I | SDSCOM - II | SDSCOM-III |
|---|---|---|
| Asrock Atom AD425PV3<br>2GB DDR-3 Memory<br>300GB Hard Disk Drive<br>Casing Tower 250W<br>ATX DVD / RW Writer<br>Monitor LCD 19" AOC<br>USB Optical Mouse<br>MultiMedia Sterio Speaker<br>USB Keyboard<br>UPS 650W OS DosFree | Intel Dual Core 3.0GHZ<br>Biostar H61MLC Support i5,i7<br>2GB DDR-3 Memory<br>300GB Hard Disk Drive<br>Casing Tower 250W ATX<br>DVD / RW Writer<br>Monitor LCD 19" View sonic<br>USB Optical Mouse<br>MultiMedia Sterio Speaker<br>USB Keyboard<br>UPS 650W<br>OS - Dos Free | Intel i3 2.6GHZ<br>Intel DH61WW i5,i7support)<br>2GB DDR-3 Memory<br>500 GB Hard Disk Drive<br>Casing Tower 250W ATX<br>DVD / RW Writer Lite on<br>Monitor LCD 19" View sonic<br>USB Optical Mouse<br>MultiMedia Sterio Speaker, USB Keyboard<br>UPS 650W, OS -Dos Free |
| Rs.47,500/= | Rs.55,500/= | Rs.65,500/= |

Free : Panda Antivirus 2012 , Original   Mouse Pad AND Dust Cover
★ 1 - 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!

| HP Pavilion- G6 | HP 630 | Compag CQ-43-410AU |
|---|---|---|
| I5-G6-1322TX<br>15.5" LED Display<br>500GB HDD<br>4GB DDR-3 | I 3-2350 M 2.3 Ghz<br>15.6" LED Display<br>320GB HDD<br>2GB DDR-3 | Dual Core 2.3Ghz<br>14.6" LED Display<br>500GB HDD<br>2GB DDR-3 |
| Rs. 76,500/= | Rs. 64,500/= | Rs. 51,500/= |

*Sales, Repair & maintenance, Software Developments and all type of security solution etc.*


**Authorized Dealer for..**
Hp, Dell Products
Biostar MotherBoards
T P-Link Products
Viewsonic Products
Havit Products , EAST
Panda Antivirus and Etc...

வரவேற்கின்றோம்! மொத்த / சில்லறை விற்பனையாளர் களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான Computer, Computer சார் பொருள்களுக்கும் சேவைகளுக்கும் தேவைகளுக்கும் நாடுங்கள்....

# SDS Computer Services
**No. 42/1, College Road, Jaffna.**
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்....
T/P:- 021-2224500,0215 100105 ,0777-874705


# 90 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு
17 ★ 10 ★ 1959

உதிர்வு
11 ★ 04 ★ 2012

## அமரர் நாகமுத்து சோதிலிங்கம்

எங்கள் ஆருயிரே அப்பா! எமைப் பிரிந்து 90 நாள்கள் தான்
எல்லாம் கனவாக இருக்குதப்பா இரக்கமற்ற காலனவன் சடுதியில் வந்து
உங்கள் உயிரைப் பறித்தானோ ? எங்களால் மறக்கமுடியவில்லை அப்பா
துடுப்பில்லா ஓடமாய் தவிக்கின்றோம் நாங்கள் இன்று
ஓடி ஓடித் திரிந்த உங்கள் பாதச் சுவடுகள் மறையவில்லை அப்பா
என்னவரே! நாளும் உங்கள் நினைவுகளால்
நெஞ்சம் கனக்கின்றது தினம் கலங்கிய விழிகளுடன்
உம் வரவிற்காய் காத்து நிற்கின்றேன்
நும் பிஞ்சுகள் உம் நினைவால் நாளும் வாடுகின்றார்
கற்றலில் நாட்டமின்றி கதிகலங்கி நிற்கின்றார்
நல்லவர்களுக்கு இறைவன் தரும் பரிசு இது தானா ?
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்.

தகவல்:
மனைவி - சோ. கணேசமலர்
பிள்ளைகள் - நிசோ, நிது, நிவேதன், நிவேகா
மைத்துனர் - இ. கிருஷ்ணதாஸ்
இ. கருணைதாஸ், இ. சிவதாஸ்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

(20256(8-14)

# மரண அறிவித்தல்

## சிதம்பரநாதன் சண்முகதாஸ்

### (ஸ்வரஞானபூபதி-நாதஸ்வரவித்துவான்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் சண்முகதாஸ் நேற்று(09.07.2012) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன்-மங்களாம்பாள் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சிவசாமி- சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயாநிதியின் அன்புக் கணவரும், நாகலட்சுமி, காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி (மோகனா), ஆகியோரின் சகோதரனும், கேமலதா, விசாரணி, ரகுநாத் , ஜானுஜா, நிவேனுஜா, கஜநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதானந்தன், உதயசங்கர் ஆகியோரின் மாமனும், பவித்திரன், டிலக்சனா, சாருஜன், சபீனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.51, சங்கிலியன் வீதி,
நல்லூர்

தகவல்:
குடும்பத்தினர்

(20281) (8-14)

# விலைக்கேள்வி கோருதல்
# தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம்
## சாவகச்சேரி

1. வலயக் கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி தலைவர், பிராந்திய பெறுகை குழுவினால் தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வேலைக்காக மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ.இல. | பெறுகை இல. | வேலை விவரமும் இடமும் | பதிவு தரம் | விலைமனுப் பிணை ரூபா. | மதிப்பீட்டுத் தொகை மில். |
|---|---|---|---|---|---|
| 01. | NP/41/20/5/5/PSDG/2012/02 | யா/மட்டுவில் சந்திரபுர மகா வித்தி யாலயத்தில் இரு மாடி வகுப் பறைக் கட்டடத்தின் மேல் தளம் அமைத்தல் (60x25) | C8 | 26,000.00 | 2.63 |

2. மேற்குறிப்பிடப்பட்ட வேலையானது ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து 120 நாள்களினுள் முடிக்கப்பட வேண்டும்.
3. ஒப்பந்தத்தை வழங்கத் தகுதி பெறுவதற்காக சித்திகரமான கேள்விதாரர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில்(ICTAD) கட்டட நிர்மாணத்தில் மேற்குறிப்பிடப் பட்ட தரத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்து கொண்டிருப்பதுடன் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருத்தல் ஆகாது.( Black Listed)
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பாடசாலை வேலைகள் கிளையில் தேவையான மேலதிக தகவல்களை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஆயிரத்து ஐந்நூறை (1,500/=) தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் கணக்கு கிளையில் பணமாகச் செலுத்தி 2012.07.11ஆம் திகதிமுதல் 2012.07.19 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை வலயக்கல்வி பணிமனையில் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை பாடசாலை வேலைகள் கிளையில் சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்விகளை பாடசாலை வேலைகள் கிளை, வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சியில் 20.07.2012 அன்று பி.ப. 1.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.கேள்விகள் பி.ப.2.00மணிக்கு கேள்விப் பத்திரதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகை கேள்விப்பிணை ஒவ்வொரு கேள்வியிலும் இணைக்கப்பட வேண்டும். கேள்விப்பிணை திறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாள்கள் (19.07.2012-05.11.2012) செல்லுபடியாகக் கூடியதாகவும் அனுமதிக்கப்பட்ட வங்கிகள் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திடமிருந்து பெறப்பட்டு இருத்தல் வேண்டும். கேள்விப்பிணை On- demand & Un-Conditional ஆகவும் தரப்படும் படிவத்திலும் இருத்தல் வேண்டும்.

கு.பிறேமகாந்தன்
தலைவர்/வலயக் கல்விப் பணிப்பாளர்,
பிராந்திய பெறுகைக் குழு,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

(வி/9337)(5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 717 பட்டதாரி பயிலுநர்களுக்கு வவுனியாவில் நேற்று நியமனம்





*வவுனியா, ஜூலை 10*

*வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 717 பேருக்கு பட்டதாரி பயிலுநர் நியமனங்களுக்கான கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன. இந்த நியமனக் கடிதங்களை அமைச்சர் றிஷாத் பதியுதீன் வழங்கி வைத்தார்.*

ஏற்கனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்களை வழங்க கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

தற்போது நியமனப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று மாலை நியமனங்களை வழங்கும் நிகழ்வுஇடம்பெற்றது. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 326 பேருக்கும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த254 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 137 பேருக்குமாக மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 717 பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் வடமாகாண ஆளுநரின் இணைச் செயலாளர் ஐ.எஸ்.ஒ. முகைதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உமைத் பாரூக், வவுனியா அரச அதிபர் ஏ.கே. பந்துல ஹரிச்சந்திரா, மன்னார் அரச அதிபர் ஓ.ஏ. சரத் கவீந்திரா ஆகியோரும் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கிவைத்தனர்.

குறித்த பட்டதாரிகள் பிரதேச செயலக ரீதியாக பிரிக்கப்பட்டு தத்தம் கடமைகளை இன்று செவ்வாய்க் கிழமை முதல் பொறுப்பேற்றுக் கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் தரவு திரட்டுதல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக 6 மாதங்களுக்கு ஈடுபடுத்தப்பட உள்ளனர். (ங-16-400)

## வவுனியா நகரசபையின் முறைப்பாட்டுப் பெட்டிகள்




வேப்பங்குளம், ஜூலை 10

வவுனியா நகரசபையினர் தமது ஆளுகையின் கீழ் உள்ள முக்கியமான சில இடங்களில் முறைப்பாட்டுப் பெட்டிகளைப் பொருத்தியுள்ளனர்.

நகரசபை அலுவலகம், நூலகம், பூங்கா மற்றும் நகரசபைக்குட்பட்ட ஏனைய அலுவலகங்கள் போன்ற இடங்களிலேயே இந்த முறைப்பாட்டுப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குறைபாடுகளை மக்கள் உடனடியாகத் தெரிவிப்பதற்கும் அது குறித்தும் நகர சபை துரித நடிவடிக்கை எடுப்பதற்கும் இத்தகைய முறைப்பாட்டுப் பெட்டிகள் உதவும் என்றும் பொது மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

(ங-க-421)

## அறிவியல் நகரில் மரம் கடத்திய கும்பல் வசமாகச் சிக்கியது

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி அறிவியல் நகர் காட்டுப்பகுதியில் பல லட்சம் ரூபா பெறுமதியான பாலைமரக் குற்றிகளை வெட்டிக்கொண்டிருந்த குழு ஒன்று விசேட அதிரடிப் படையினரிடம் வசமாக மாட்டிக்கொண்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த சட்டவிரோதமாக மரம் வெட்டும் கும்பலைச் சேர்ந்த எண்மர் மாட்டிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் மூவர் சிங்களவர்.

குறித்த கும்பலைச் சேர்ந்தவர்கள் உள்ளூர்வாசிகள் சிலரின் உதவியுடன் மரக் குற்றிகளை வெட்டிக் கடத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்களின் கடத்தல் நடவடிக்கைகள் குறித்து தகவல் கிடைத்ததால் விசேட அதிரடிப்படையினர் தேடுதலில் இறங்கினர். இதன் போது அதிரடிப்படையினரிடம் சிக்கிய இந்த எண்மரும் பின்னர் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் குற்றிகளாக அறுக்கப்பட்ட நிலையிலிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகள் மற்றும் உழவு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அறிவியல் நகர், யூனியன்குளம், புதுமுறிப்பு, கோணாவில் போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு மரங்கள் சட்ட விரோதமாக மரம் வெட்டும் குழுக்களால் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(ங-16-6)



*கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தில் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் வி. சுவீஸ்கரனின் துணைவியார் மாணவி ஒருவருக்குச் சின்னம் சூட்டுகின்றார்.*

## தண்டம் 8500 ரூபா

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்குகளை மீறிய வாகனச் சாரதிகளுக்கு மொத்தமாக 8 ஆயிரத்து 500 ரூபா கிளிநொச்சி நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் முன்னால் ஒலியெழுப்பிய வாகனச் சாரதிகள் இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும், இவர்களிருவரும் அபராதத்தை செலுத்தத் தவறினால் மூன்று வார காலம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. பயணிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற டிப்பர் வாகனச் சாரதி ஒருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(ங-க-6)

## கூட்டத்துக்குச் சென்றவர்கள் காத்திருந்தனர் கால்கடுக்க

### கரைச்சி பிரதேச செயலகத்தில் சம்பவம்

*அக்கராயன், ஜூலை 10*

*அக்கராயன் பிரதேசத்துக்கான நீர் வழங்கல் திட்டம் தொடர்பான கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட மக்கள் கூட்டம் முடியும் வரை மண்டபத்துக்கு வெளியே கால்கடுக்க நிற்க நேர்ந்ததாக விசனம் தெரிவிக்கின்றனர்.*

*குறித்த கூட்டத்தில் பங்குபற்றுமாறு பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு கரைச்சிப் பிரதேச செயலர் அழைப்புக் கடிதம் அனுப்பியிருந்தார். இதனையடுத்து குறித்த கூட்டத்தில் பங்கேற்க 30 பேர் அக்கராயனில் இருந்து பிரதேச செயலகத்துக்கு சென்றனர். ஆனால் நான்கு பேர் மட்டுமே கூட்டத்தில் பங்கு பற்றமுடிந்த தாகவும் ஏனைய 26 பேரும் மண்டபத்துக்கு வெளியே கூட்டம் முடியும் வரை கால்கடுக்க நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

*இதேவேளை - அக்கராயன் , இயக்கச்சி பகுதிகளுக்கு நீர்த்தாங்கி மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிய வருகின்றது.* *(ங-க-18)*

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 10

க.பொ.த.உயர்தர வணிகப்பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

ஜி.ஐ.இசற்றின், ஈ.எஸ்.சி. செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் முதலாவது, இரண்டாவது தடவை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் விதமாக ஆறு நாள்கள் இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளைய தினம் 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதிகளில் பொருளியலும், 13, 14 ஆம் திகதிகளில் வணிகக் கல்வியும், 15,16 ஆம் திகதிகளில் கணக்கீடும் இடம்பெறவுள்ளன.

இதில் கல்வியமைச்சினால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

தமது பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் தகுதியுடைய மாணவர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்வதற்கு ஆவன செய்யுமாறு பாடசாலை அதிபர்களைக் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் கேட்டுக் கொண்டுள்ள ார். (க-405)

## ‘கஞ்சா’ கணவர் கம்பி நீட்டினார்; மனைவிதான் மாட்டினார்

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண்ணொருவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவி ட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இராணுவத்தினருக்கு கஞ்சா விற்பனை செய்தமை தொடர்பாகவும் கஞ்சாவைத் தனது உடைமையில் வைத்திருந்தமை தொடர்பாகவும் குறித்த பெண்ணை கிளிநொச்சி பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். அவரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமாரிடம் முன்னிலைப்படுத்திய போது, குறித்த பெண்ணை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர் கடந்த ஆண்டு 7 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த ஆண்டு மீண்டும் ஐந்து கிராம் கஞ்சாவை வைத்திருந்தவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அந்த நபருக்கு நீதிவான் நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மூன்று மாதகாலம் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த 5ஆம் திகதி கடூழியச் சிறைத்தண்டனை நிறைவு பெற்று விடுதலையான நபர் மீண்டும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார். அவரைப் பொலிஸார் கைது செய்யச்சென்றபோது குறித்த நபர் தப்பியோடிவிட்டார். ஆனால் வீட்டில் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து குறித்த நபரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ங-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் மன்னாரில் நடைபெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கபடிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வீராங்கனைகள் கல்லூரி அதிபர் மற்றும் உபஅதிபர், பொறுப் பாசிரியர்களுடன். (ந-9)

## கார்மேல் போய்ஸ் சம்பியன்



பண்டத்தரிப்பு,ஜூலை 10

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 93 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இதயராஜ் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்டதும், 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதுமான கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை அரியாலை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும், மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரீ முருகன் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. எனினும் ஸ்ரீமுருகன் வீரர்கள் யாரும் சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தவில்லை. மாறாக கார்மேல் போய்ஸ் வீரர்கள் சிறப்பாகப் பந்து வீசியிருந்தனர். அவ்வணி சார்பில் சாந்தன் மூன்று இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி வெற்றி இலக்கினை 7 வது பந்துப்பரிமாற்றத்தில் அடைந்தது. அந்த அணி வீரர் செல்ரன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக கார்மேல் போய்ஸ் அணியைச் சேர்ந்த அலன் போடரும், சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே அணியை சேர்ந்த செல்ரனும், சிறந்த பந்து வீச்சாளராக ஸ்ரீ முருகன் அணியைச் சேர்ந்த ஜீவிதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சுற்றுத்தொடரின் சிறப்பாட்டக்காரராக குருநகர் கார்மேல் போய்ஸ் அணியைச் சேர்ந்த சாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ந-130)

## சிங்கர் கிண்ண கரப்பந்து; வென்றது ஆவரங்கால் மத்தி

கைதடி,ஜூலை 10

சிங்கர் நிறுவனம் வடமாகாண ரீதியாக நடத்திய செற்-அப் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இந்த இறுதியாட்டம் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

5 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டி மிகவும் விறுவிறுப்பாகவும் ஆக்ரோஷமாகவும் இடம்பெற்றது. இந்தப் போட்டியில்ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை முதல் நான்கு சுற்றுக்களிலும் முறையே 25:15, 20:25, 25:21,25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் மூன்று சுற்றுக்களை வென்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்தது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை சேர்ந்தச் சொரூபன் தெரிவுசெய்யப்பட்டார்.

இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தகர்களாக எஸ்.அப்புத்துரை, கே.சுதேஸ்குமார் ஆகியோர் கடமையாற்றினர். (ந-288)

## வவுனியா பிரதேச செயலகம் முதலிடம்

வவுனியா,ஜூலை 10

வவுனியா மாவட்ட செயலகத்தால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகளில் வவுனியா பிரதேச செயலகம் 116 புள்ளிகளைப் பெற்று இந்த வருடச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வவுனியா மாவட்ட மட்ட தடகளப் போட்டிகள் அண்மையில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் வவுனியா, வவுனியா தெற்கு, நெடுங்கேணி மற்றும் செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகங்கங்கள் இந்தப் போட்டிகளில் பங்கு பற்றின.

இதில் 116 புள்ளிகளைப் பெற்று வவுனியாத பிரதேச செயலகம் முதலாமிடத்தினையும், செட்டிகுளம் பிரதேச செயலகம் 40 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தினையும் நெடுங்கேணி மற்றும் வவுனியா தெற்குப் பிரதேச செயலகங்கள் தலா 14 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் சுவட்டு நிகழ்ச்சிகளில் சிறந்த வீரராக வவுனியா பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சதீஸ்குமாரும் மைதான நிகழ்ச்சியின் சிறந்த வீரராக எல்.சர்மிலனும், பெண்கள் பிரிவில் சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த வீராங்கனையாக வவுனியா பிரதேச செயலகத்தை சேர்ந்த கே.லோகாசினியும், சிறந்த மைதான வீராங்கனையாக வவுனியா பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி ராஜரணசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கும் கழகங்களுக்குமான வெற்றிக் கேடயங்களை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.திருஞானசம்பந்தர் வழங்கிக் கௌரவித்தார். (ந-400)



## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

**இன்று மோதும் அணிகள்**

- ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
- ஜப்னா லயன்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

## 'மக்கள் வங்கி' வலைப்பந்தில் சாதித்தது யூனியன் கல்லூரி



வலி .வடக்கு,ஜூலை10

மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ் .மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 21 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி விறுவிறுப்பாக இருந்தாலும் இறுதிவரை மைதானத்தில் யூனியன் கல்லூரியின் கையே மேலோங்கி இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 23:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரியே ஆதிக்கம் செலுத்தியது. இராமநாதன் கல்லூரி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை உரியமுறையில் பயன்படுத்த தவறியது. இது யூனியன் கல்லூரியின் வெற்றி வாய்ப்பை பிரகாசமாக்கியது. இறுதிநிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தையும் யூனியன் கல்லூரி 19:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் தன் வசமாக்கியது.

ஆட்டநிறைவில் தெல்லப்பழை யூனியன்கல்லூரி 42:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியை வெற்றி கொண்டு யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

2001 ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியின் போது இலங்கை வலைப்பந்தாட்ட தேசிய அணியின் தலைவராக இருந்த திருமதி ஜெயந்தி சோமசேகர வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (ந-36)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.உதைபந்தாட்ட லீக் சுற்றுத் தொடரில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க் கிழமை மோதவுள்ள அணிகள்-

பி.ப 4 மணி

ஆனைக்கோட்டை யூனியன் வி.க எதிர் குருநகர் சென்றோக்ஸ் வி.க.

பி.ப 5 மணி

குருநகர் பாடுமீன் வி.க எதிர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம். (ந-23)

## தடகளப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வவுனியா,ஜூலை10

வ்வுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட தடகளப் போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரவிராங்கனைகளின் விவரம் வருமாறு,

**10,000 மீற்றர் ஓட்டம்**

* கே.எம்.எஸ்.என். குமார-வவுனியா தெற்கு பிரதேச செயலகம்
* கே.நவநீதன்-வவுனியா பிரதேச செயலகம்
* பி.புவீந்திரன்-வவுனியா பிரதேச செயலகம்

**800 மீற்றர் ஓட்டம்**

* கே.சதீஸ்குமார்-வவுனியா பிரதேச செயலகம்
* எஸ்.சுவேந்திரன்-வவுனியா பிரதேச செயலகம்
* கே.எம்.எஸ்.என்.குமார-வவுனியா தெற்கு பிரதேச செயலகம்

**110 மீற்றர் தடைதாண்டல்**

* ஆர்.ஜே.நிலான்-வவுனியா பிரதேச செயலகம்
* ஜே.அன்ரன் ரோய்-வவுனியா பிரதேச செயலகம்


**நீளம் பாய்தல்**

* எஸ்.சர்மிலன்- வவுனியா பிரதேச செயலகம்
* கே.யாழ் விஜிந்தன்-செட்டிகுளம் பிரதேச செயலகம்
* எஸ்.தினேஸ்-வவுனியா பிரதேச செயலகம்

**உயரம் பாய்தல்**

* எஸ்.நிமலகேசன்-வவுனியா பிரதேச செயலகம்
* கே.லிவின்ஸ்ரன்-வவுனியா பிரதேச செயலகம்
* எஸ்.கோவர்த்தனன்-வவுனியா பிரதேச செயலகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பியனானார் பெடரர்

## முதன்முறையாக இறுதிக்குள் நுழைந்து கிண்ணத்தை தவறவிட்டார் அன்டி முரே





லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் தனிநபர் பிரிவின் சம்பியனாக சுவிட்ஸலாந்தின் ரொஜர் பெடரர் தெரிவாகியுள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பிரித்தானியாவின் அன்டி முரேயைத் தோற்கடித்தே அவர் சம்பியன் பட்டம் வென்றார்.

ஏற்கனவே 6 தடவைகள் விம்பிள்டன் பட்டம் வென்றிருந்த நிலையில் 3 ஆம் நிலை வீரரான ரொஜர் பெடரருக்கு அதிக வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்பட்டாலும், 4 ஆம் நிலை வீரரான அன்டி முரேக்கும் வாய்ப்புக்கள் காணப்படுவதாகக் கருதப்பட்டது.

போட்டி ஆரம்பித்தபோது அதிர்ச்சியளித்த அன்டி முரே, முதலாவது செற்றை 6 - 4 என்ற அடிப்படையில் கைப்பற்றினார். தனது வழக்கமான ஆட்டத்தை, குறிப்பாக அரையிறுதியில் முதல் நிலை வீரர் நொவக் ஜொக்கோவிச்சை வீழ்த்த ஆடிய ஆட்டத்தைப் பெடரர் வெளிப்படுத்தத் தவறியிருந்தார்.

இரண்டாவது செற்றில் புள்ளிகள் நிலை 1 - 1 எனக் காணப்படும் போது மழை குறுக்கிட்டதன் காரணமாகப் போட்டி இடைநிறுத்தப்பட்டது. அதன் பின்னர் மூடிய ஆடுகளத்தில் போட்டி மீள ஆரம்பித்தபோது அந்தச் செற்றை பெடரர் 7 - 5 என்ற அடிப்படையில் கைப்பற்றினார். இந்தச் செற்றில் பெடரர் தனது வழக்கமான ஆட்டத்தை ஓரளவு வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும் அடுத்த இரண்டு செற்களையும் அதிரடியாக ஆடிக் கைப்பற்றிய பெடரர், 6 - 3, 6 - 4 என்ற கணக்கில் அவை இரண்டையும் கைப்பற்றி தனது 7 ஆவது விம்பிள்டன் பட்டத்தை வென்றார். 7 ஆவது தடவையாக அவர் விம்பிள்டன் பட்டத்தை வென்றதை அடுத்து பீற்றர் சம்ப்ராஸின் சாதனையை அவர் சமன் செய்தார்.


அத்தோடு இந்த வெற்றியை அடுத்து அவர் ரென்னிஸ் தரவரிசையில் முதலாவது இடத்தையும் கைப்பற்றினார். இதன் காரணமாக பீற்றர் சம்ப்ராஸின் மற்றுமொரு சாதனையான அதிக வாரங்கள் முதலிடத்தில் காணப்பட்ட வீரர் என்ற சாதனையைப் பெடரர் சமன் செய்தார்.

பெடரர் முதலிடத்தில் 2 வாரங்கள் காணப்படுவது நிச்சயிக்கப்பட்டுள்ள நிலையில் பீற்றர் சம்ப்ராஸின் 286 வாரங்கள் என்ற சாதனையை பெடரர் முறியடிப்பது நிச்சயமாகக் காணப்படுகிறது. (5)



# அவசரப்பட்டு விட்டேனோ?

## கவலைப்படும் கங்குலி



சர்வதேசத் தொடரிலிருந்து தான் தேவைக்கு முன்னதாகவே ஓய்வு பெற்றுவிட்டதாகவும், இன்னும் சில வருடங்கள் விளையாடியிருக்கலாம் எனவும் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

தனது 40 ஆவது பிறந்ததினத்தை நேற்றுமுன்தினம் கொண்டாடிய அவர், அது தொடர்பாக வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஓய்வுபெறுவதற்குத் தான் எடுத்த முடிவு குறித்து சில வேளைகளில் வருந்துவதாகத் தெரிவித்த சௌரவ் கங்குலி, கோபத்தில் அவசரத்துடன் நடந்திருக்கக்கூடாது எனத் தெரிவித்தார். எனினும் தான் நடந்து கொண்டுவிட்டதாகவும், அந்த விடயம் தற்போது முடிந்துவிட்டதாகவும் தெரிவித்த அவர், இரண்டு வருடங்கள் மேலதிகமாக விளையாடியிருக்க முடிந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு நவம்பரில் சர்வதேச தொடரிலிருந்து ஓய்வுபெற்ற சௌரவ் கங்குலி, 16 டெஸ்ட் சதங்களையும், 35 டெஸ்ட் அரைச் சதங்களையும், 22 ஒரு நாள் சர்வதேச சதங்களையும், 72 ஒரு நாள் சர்வதேச அரைச் சதங்களையும் கொண்டு காணப்படுகின்றார்.


இலங்கையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் அஜந்த மெண்டிஸ் தனது அறிமுகத்தை மேற்கொண்டு இந்திய வீரர்களைத் தனது மாயச் சுழற்பந்தால் தடுமாறச் செய்த தொடரில் தான் சிறப்பாக விளையாடியிருக்கவில்லை எனத் தெரிவித்த சௌரவ் கங்குலி, அதன் பின்னர் இந்தியாவின் உள்ளூர் தொடரான இரானிக் கிண்ணத்துக்கான அணி அறிவிக்கப்பட்ட போது தனது பெயர் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், அதன் காரணமாக அவசரத்துடன் முடிவை எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

ஐ.பி.எல் தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்குத் தலைமை தாங்கும் சௌரவ் கங்குலி, இந்தாண்டுடன் ஓய்வுபெற்றுக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்ற போதிலும், அதை உறுதிப்படுத்த மறுத்த கங்குலி, இன்னமும் காலம் இருக்கிறது எனவும் பார்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (5)

ஓய்வுபெறுவதற்கு எடுத்த முடிவு குறித்து இப்போது வருந்துகின்றேன். கோபத்தில் அவசரத்துடன் நடந்திருக்கக் கூடாது என்று உணர்கின்றேன்.

*- கங்குலி*

# இங்கிலாந்து பிராந்திய அணியில் ஹர்பஜன் சிங்



இங்கிலாந்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணி தெரிவுக் குழுவினரை கவர தீர்மானித்துள்ளார் ஹர்பஜன்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், எக்சக்ஸ் பிராந்திய அணிக்காக விளையாடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் (வயது - 32), கடந்த ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற பிறகு, சில ஆட்டங்களில் மட்டுமே பங்கேற்று காயம் காரணமாக ஓய்வு எடுத்து கொண்டார். ஆனால் அதன் பின்பு இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார்.

இந்த நிலையில் ஹர்பஜன் சிங், இங்கிலாந்து பிராந்திய அணியான எக்ஸக்ஸ் அணிக்காக விளையாட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். ஐ.பி.எல் 5 தொடரில் எதிர்பார்க்கப்பட்ட அளவு சோபிக்கத் தவறிய ஹர்பஜன் சிங், இங்கிலாந்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணி தெரிவுக் குழுவினரை கவர தீர்மானித்துள்ளார்.

இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது, தற்போது நான் எந்த கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்காத நிலையில், எனது திறனை மீட்க முடியாது. எனவே பிராந்திய அணியில் விளையாட முடிவு செய்துள்ளேன். பிராந்திய ஆட்டங்கள் 4 நாள்கள் போட்டிகளை கொண்டது. எனவே எனது பந்துவீச்சில் முன்னேற்றம் அடைய முடியும். மேலும் டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்துவீசவும், பிராந்திய போட்டிகள் எனக்கு உதவும்.

இது குறித்து எக்சக்ஸ் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், எக்சக்ஸ் அணிக்காக விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. குளூசிஸ்டர்சைன் அணிக்கெதிரான ஆட்டத்தில் ஹர்பஜன் சிங் பங்கேற்பார் என்று தெரிவித்துள்ளது. (5)

# டிராவிட்டுக்கு தெரியும்



ராகுல் டிராவிட் தலைமையில் இந்திய அணி பெற்ற வெற்றியைக் கொண்டாடாமல், சில வீரர்கள் அவருக்கு எதிராகச் செயற்பட்டனர் என்று இந்திய முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சேப்பல் எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது குற்றச்சாட்டுகள் குறித்து அப்போதைய அணியில் இடம்பெற்றிருக்க முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறுகையில், டிராவிட்டுக்கு நான் எதிரானவன் என்ற வகையில் சப்பலின் கருத்து அமைந்திருப்பதாக நான் கருதவில்லை. அவரின் கருத்து, டிராவிட் மனதில் என்னைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை.

அவர் எழுதிய புத்தகத்தை படித்து பார்த்தேன். புத்தகத்தில் அவர் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் எழுதலாம். எனவே இதற்கு மேல் அவரை பற்றி கருத்து எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால் டிராவிட்டுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சச்சின் சாதனை தகரும்

இந்திய அணியின் சாதனைத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டென்டுல்கரின் சாதனைகள் ஒரு நாள் எதிர்காலத்தில் முறியடிக்கப்படும் என்று இந்திய அணிக்கு முதலாவது உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த தலைவரான கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

சச்சினின் சிறந்த இயல்புகளைப் பாராட்டிய அவர், அதன் காரணமாகவே அவர் உச்சத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். தாம் விளையாடும் போது சுனில் கவாஸ்கரே மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் எனவும், அவரைத் தாண்டி வேறு துடுப்பாட்ட வீரர்கள் வர முடியாது என்று எண்ணியதாகவும், ஆனால் தாங்கள் கருதியது பிழையென நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கவாஸ்கரை விட மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் தொடரில் பங்குபற்றியுள்ளார்கள் எனத் தெரிவித்த அவர், ஏனெனில் தனிப்பட்ட வீரர்களை விட கிரிக்கெட் மிகப் பெரியது எனத் தெரிவித்தார்.

சச்சின் தனது கிரிக்கெட் வாழ்வில் மிகச்சிறப்பாகப் பங்குபற்றியுள்ளார் எனத் தெரிவித்த கபில்தேவ், அவர் ஏராளமான சாதனைகளைத் தன் வசம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார், எனினும் அவரது சாதனைகள் ஒரு நாள் முறியடிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தனது கிரிக்கெட் வாழ்வின் இறுதிப் பகுதியில் இரண்டு இளைய வீரர்களின் திறமைகள் பற்றிப் பெரியளவு எதிர்பார்ப்புக் காணப்பட்டதாகத் தெரிவித்த அவர், சச்சின் டென்டுல்கர், வினோத் காம்ப்ளி ஆகியோரே அவர்கள் எனத் தெரிவித்தார். இருவரும் மிகச்சிறந்த திறமைகளைக் கொண்டவர்கள் எனத் தெரிவித்த கபில் தேவ், தற்போது சச்சின் இருக்குமிடத்தைப் பார்க்கக்கூடியதாகத் தெரிவித்தார்.

சச்சின் ஒழுக்கமான வாழ்வைக் கடைப்பிடித்ததால் இந்த உயரத்தை அடையமுடிந்ததாகவும், காம்ப்ளி ஒழுக்கமற்றுக் காணப்பட்டதால் தனது திறமையைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்தார். (5)



# அவர்கள் கையிலே முடிவு

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இருதரப்புக் கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்கப்படுவது இரண்டு நாட்டுக் கிரிக்கெட் சபைகளின் கைகளிலேயே காணப்படுவதாக இந்திய வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் வெளிநாட்டமைச்சின் செயலாளர் ஜலீல் அப்பாஸ் ஜிலானியுடன் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இரு தரப்பும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் இரு நாடுகளுகிடையிலான விளையாட்டு நடவடிக்கைகள் திரும்ப ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான கிரிக்கெட் உறவுகள் திரும்ப ஆரம்பிக்கப்படுவதற்கான பொறுப்பு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடமும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமும் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இரு நாடுகளுக்குமிடையிலான விளையாட்டு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்களை அடுத்து இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டதோடு, கிரிக்கெட் உறவுகளும் பாதிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டும், அதற்குப் பின்னரும் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின் ஏலங்களில் எந்தவொரு பாகிஸ்தானிய வீரரும் வாங்கப்படாததோடு, இரு நாடுகளுக்குமிடையிலான சர்வதேசப் போட்டிகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

இரு நாடுகளுக்குமிடையிலான் கிரிக்கெட் உறவுகள் சிறப்படைவது போன்று அண்மைக்காலத்தில் தோன்றியிருந்தாலும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் ''இருநாடுகளிடையிலான தொடர் இடம்பெறுவது இரு நாடுகளிடையிலான அரசியல் உறவிலேயே தங்கியுள்ளது'' எனத் தெரிவித்து வந்திருந்தனர். (5)





# கெயில் எங்களுக்குத் தடங்கல்

**முதலாவது ஆட்டத்தில் கிறிஸ் கெயில் 57 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றதோடு, இரண்டாவது ஆட்டத்தில் 107 பந்துகளில் 125 ஓட்டங்களைப் பெற்றார்.**

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெயிலின் திறன் நியூசிலாந்து அணிக்கு முக்கியமான தடங்கலாக உள்ளதாக நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌதி தெரிவித்துள்ளார்.

5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் முதலிரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஆட்டத்தில் கிறிஸ் கெயில் 57 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றதோடு, இரண்டாவது ஆட்டத்தில் 107 பந்துகளில் 125 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த நிலையில் கிறிஸ் கெயிலை ஆரம்பத்திலேயே ஆட்டமிழக்கச் செய்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிக அழுத்தத்தை வழங்கலாம் என்று எண்ணுவதாகத் தெரிவித்த ரிம் சௌதி, கிறிஸ் கெயில் ஆட்டமிழந்தால் ஏனைய வீரர்களையும் ஆட்டமிழக்கச் செய்யலாம் எனக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் பெரும்பாலான வீரர்கள் அதிகளவில் இந்தத் தொடரில் துடுப்பெடுத்தாடியிருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், ஆரம்பத்தில் இரண்டு, மூன்று இலக்குகளைக் கைப்பற்றினால் ஆட்டத்தில் தங்களால் வெற்றிபெற முடியும் எனக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

கிறிஸ் கெயில் மிகச்சிறந்த திறனில் இருப்பதாகத் தெரிவித்த ரிம் சௌதி, கிறிஸ் கெயில் சிறந்த வீரர் எனவும், உலகின் எந்தவொரு பந்துவீச்சையும் துவம்சம் செய்யக்கூடிய ஆற்றல் அவருக்கு உள்ளதாகவும் தெரிவித்தார். எனினும் கிறிஸ் கெயிலும் ஒரு மனிதரே எனத் தெரிவித்த அவர், எனவே அவரை ஆட்டமிழக்கச் செய்ய முடியாது எனக் கருதவில்லை எனவும் தெரிவித்தார். (5)

ஓட்டோ விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள,4ஸ்ரோக் NP YB xxxx,ஓட்டோ விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 541 2532 (பி/1398)(5-6-7)

CLTP Unit இல்
- Java/ SQL Server/ JSP/ Servlet (J2EE).
- VB.Net/ SQL Server
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- Web Designing
- C#/ SQL Server (Windows Application)
- ADBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்.14.07.2012
204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223

ஷாம்சன் இங்கிலிஷ் - 3மாத பயிற்சிநெறி
எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது.
தமிழ்க்குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.
தவறான வழியில் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ எழுத்துப் பயிற்சியோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்ததுவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப் படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய் மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.
எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப் பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (14.07.2012) இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள்.
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09 - 11
பிரிவு II 11 - 01
பிரிவு III 02 - 04
3 மாத பயிற்சி நெறிக்கட்டணம் ரூபா 3000.00
பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம் (முதல் வகுப்பு இலவசம்)
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி பின்புறம்) தொ.பே. 077 6214567

English / French
புதிய பிரிவு ஆரம்பம்
காலம் : 1 – 3 மாதங்கள்
சனி, ஞாயிறு மற்றும் வாரநாள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(20158)(6-7-8)
MyWay 077 33 63 456

Shamrock Academy
ஈச்சமோட்டை
பௌதிகவியல்
2014 A/L
Tue,Thu - 4.30- 5.30
2013 A/L
Paper Class
Tue,Thu - 5.30- 6.30
S.SASI.BSc (Edu)
(20355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.